தமிழரசு

1-2-1987

ரு. 1



பாரதியார் சிலை திறப்பு விழா
சிறப்பிதழ்

பிப்ரவரி 3—பேரறிஞர் அண்ணா நினைவு நாள்

தோற்றம் : 15-9-1909 மறைவு : 3-2-1969

புதுயுகக் கவிஞனுக்கு புது டில்லியில் சிலை

"ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே
ஆனந்த சுதந்தரம் அடைந்துவிட்டோ
மென்று"

என நாடு விடுதலை பெறுவதற்கு முன்பே, விடுதலை பெற்றுவிடும் காட்சியை மனக் கண்ணால் தரிசித்துக் கவிதை பாடியவர் மகாகவி பாரதியார்.

இந்திய மக்கள் விடுதலையின் பயனைத் துய்ப்பதற்குக் காரணமாக இருந்த எண்ணற்ற தலைவர்களில்-கவிஞர்களில் - மகாகவி பாரதிக்குத் தனி இடம் உண்டு.

அவரது பாடல்கள்,
கோழைகளை வீரர்களாக்கின
கூனர்களை நிமிரச் செய்தன.

இசைவாணர்களை ஆவேசமாகப் பாட வைத்தன

கலையுலகத்தினரைத் துள்ளி எழச் செய்தன.

அனைத்துக்கும் மேலாக,

இராமன் ஆண்டால் என்ன, இராவணன் ஆண்டால் என்ன என்ற விரக்தி மனப் பான்மையில் நெளிந்து கொண்டிருந்த சாதாரண மக்களுக்கும் நாட்டு விடுதலையில் நாட்டத்தையும் ஆர்வத்தையும் ஏற்படுத்தின.

பாட்டுத்திறத்தால் வையத்தைப் பாலிக்க வந்த பாரதியைத் தமிழக அரசு எப்பொழுதும் போற்றி வந்திருக்கிறது; புகழ்ந்து வந்திருக்கிறது.

மலர் : 17
இதழ் : 15

தமிழரசு

1—2—1987

திருவள்ளுவர் ஆண்டு 2018
அட்சய - தை 19

பாரதியார் சிலை திறப்பு விழா (டில்லி) சிறப்பிதழ்

மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர் அவர்கள் பாரதி நூற்றாண்டை ஓராண்டு முழுதும் தமிழகத்தின் மாவட்டத் தலை நகரங்களிலும் ஊராட்சி ஒன்றியங்களிலும் சிறப்பாகக் கொண்டாட வழி வகுத்தார்.

இந்திய நாட்டின் தலைநகரான புது டில்லியில் பாரதியின் திருவுருவச் சிலை நிறுவப்பட வேண்டும் என்பதும் முதல்வரின் திட்டங்களில் ஒன்றாகும்.

புதுடில்லி பாரதி நகரில் 4.2.1987 அன்று திறக்கப் படவிருக்கும் மகாகவி பாரதியார் திருவுருவச் சிலையை மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் 23.1.'87 அன்று பார்வையிட்டார்.

மறைந்த மாண்புமிகு இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்கள் வாழ்ந்த காலத்திலேயே அவர்களிடம் இந்தக் கருத்தை மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

புது டில்லியில் மகாகவியின் சிலையினை நிறுவுவதற்குரிய இடத்தை ஒதுக்கித் தருமாறு திருமதி இந்திராகாந்தி அவர்களிடம் நம் முதல்வர் அவர்கள் விடுத்த வேண்டுகோள் பலனளித்துள்ளது. டில்லி பாரதி நகரில் லோடி சாலையில் இதற்காக 600 சதுர மீட்டர் பரப்பளவு இடத்தை இந்திய அரசு தற்போது ஒதுக்கித் தந்திருக்கிறது.

23.1.1987 அன்று திட்டக் குழுவோடு தமிழ்நாடு 1987-88 திட்டம் பற்றி விவாதித்து முடிவு செய்ய டில்லிக்குச் சென்ற நம் முதல்வர் அவர்கள், பாரதிநகரில், பாரதி சிலையையும் அது நிறுவப்படும் இடத்தையும் பார்வையிட்டார்.

பிப்ரவரி 4-ஆம் நாள் மேதகு குடியரசுத் துணைத் தலைவர் திரு. ஆர்.வெங்கட்ராமன் அவர்கள் தலைமையில் பாரதியாரின் சிலை திறப்புவிழா நடைபெறுகிறது. மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு ராஜீவ்காந்தி அவர்கள் சிலையத் திறந்து வைக்கிறார்கள்.

''வெள்ளிப் பனி மலையின் மீதுலவுவோம்'' என்று கவிதை பாடிய பாரதக்குநாட்டின் ஒருமைப்பாட்டைப் பெருமையோடு பறைசாற்றிய மகாகவிக்கு—வெள்ளிப்பனி மலையாம் இமயத்துக்கு அருகில் உள்ள டில்லியில் சிலை அமைவது மிகவும் பொருத்தமானது.

10 அடி உயரத்தில், ரூ.43,900 செலவில் வெண்கலத்தால் அமைக்கப்பட்டுள்ள இந்தச் சிலையை உருவாக்கியவர் சென்னையைச் சேர்ந்த சிற்பி திரு மோகன்தாஸ் ஆவார்.

சிலைக்குரிய பீடத்தை ரூ. 1,19,130 செலவில் மத்தியப் பொதுப்பணித் துறை அமைத்திருக்கிறது.

சிலை நிறுவப்படும் பகுதியைச் சுற்றி ரூ. 10,075 செலவில் பூங்கா அமைக்கப்பட்டு வருகிறது. மைய அரசின் தோட்டக் கலைத் துறை இந்தப் பணியை மேற்கொண்டுள்ளது.

சிலையைச் சுற்றிலும் சலவைக்கற்கள்-பதிக்கப்படுகின்றன. இதற்குரிய கற்களை தமிழ்நாடு அரசு கனிம நிறுவனம் வழங்கியுள்ளது.

சலவைக்கல் ஒன்றில், அங்கீகரிக்கப்பட்ட அனைத்து தேசிய மொழிகளிலும் பாரதியாரின் பொன்மொழிகள் பொறிக்கப்பட்டுள்ளன.

திருவுருவச் சிலையினைச் சுற்றி ரூ. 81,313.50 செலவில் வண்ணக்கல் விளக்குகள் 8, ஜப்பானிய வடிவில் கல்விளக்குகள் 4 ஆகியவை நிறுவப்பட்டுள்ளன. இவை மாமல்லபுரம் சிற்பக் கல்லூரியில் உருவாக்கப்பட்டவை.

சிலையைச் சுற்றி ரூ. 23,100 செலவில் மின் விளக்கு வசதி செய்யப்படுகிறது.

திருவுருவச் சிலை நிறுவுவதற்குரிய நிர்மாணப்பணிகள் அனைத்தையும் மத்தியப் பொதுப்பணித்துறை செய்துள்ளது.

மொத்தத்தில் ஏறக்குறைய ரூ. 5.53 லட்சம் தமிழக அரசால் இந்த அரும்பணிக்குச் செலவிடப்படுகிறது.

இந்தியத் தலைநகரில் -கம்பீரமாக-நின்ற நிலையில் காட்சி தரப்போகும்-மகாகவி பாரதியாரின் சிலை - டில்லிக்கு வருகை புரியும் வெளி மாநில - வெளிநாட்டுச் சுற்றுப் பயணிகளுக்கெல்லாம், விடுதலைப் போரின் வீர வரலாற்றை எடுத்துச் சொல்வது உறுதி.

'மாஜினியின் சபதம்' பிறந்த விதம்

வ. உ. சிதம்பரனார், பாரதியாரை அடிக்கடி சந்தித்து உரையாடுவதுண்டு. அப்போது பாரதியார் தமது கவிதைகளை வ.உ.சியிடம் சொல்வார்.

இத்தாலி நாட்டு தேச ஊழிய இளைஞர்கள் சங்கத்தின் உறுப்பினர்கள் பாடிய சூளுரைப் பாடலின் ஆங்கில மொழிபெயர்ப்பைச் சிதம்பரனாரிடம் படித்துக் காட்டினார் பாரதியார். அந்தக் கவிதையில் மோகம் கொண்ட சிதம்பரனார், ''இதனைத் தமிழ்ப் பாடலாக வடித்துத் தாருங்கள்'' என்று பாரதியாரிடம் கேட்டுக் கொண்டார். இவ்வளவு போதாதா? உடனே பாரதி, அதைத் தமிழ்க் கவிதையாக வடித்தார். அதுதான் 'மாஜினியின் சபதம்' என்ற தலைப்பில், 'பேரருட் கடவுள் திருவடியாணை' எனத் தொடங்கும் பாடல் ஆகும்.

மக்கள் கவிஞர்

கடவுளர்களுக்குப் பாமாலைப் பதிகங்கள் பாடுவதோடு நின்றுவிடவில்லை பாரதி. மண் ஆளும் மன்னர்களுக்கு விண்ணப்பப் பாக்கள் எழுதி விடுக்கவில்லை. உழவு சால் ஓட்டும் சாதாரண உழவனுக்குப் பாட்டுப் படினார். தொட்டில் ஆட்டும் தாய்மார்கள் விளையாட்டு வெளிகளிலே ஓடி விளையாடும் குழந்தைகளுக்குக் கவிதைகள் இசைத்தார்.

கடந்த காலப் புலவர்சிகாமணிகளைப் போல வேதாந்தவியாக்கியானங்களைச் சுதந்தரக் கோரிக்கைக்குச் சப்பைக் கட்டாக உபயோகிக்கவில்லை. உலகத்தின் தூர தொலைவிலுள்ள நாட்டு மக்களின் சுதந்தரப் போராட்டங்களைக் கவிதைகளாக்கி மக்களுக்குச் சமர்ப்பித்தார்.

இத்தாலிய சுதந்தர உதயத்தை மாஜினி என்ற தேசிய வீரனின் சலியா உழைப்பால் மக்கள் புத்துயிர்ப்புப் பெற்று உரிமைப் போரில் வெற்றிகரமாக ஈடுபட்டதை உன்னச் சொற் சித்திரமாகத் தீட்டிக் கொடுத்தார்.

புரட்சிக்குப் பின் உருவான பிரெஞ்சு நாட்டுக் காட்சியைப் பாடினார். ஜாரின் தளைகளைத் தகர்த்து நொறுக்கி வீறுடன் எழுந்து நின்ற ரஷ்யாவைப் பற்றிப் புதுமை ஓவியம் தீட்டினார். சுதந்தர பெல்ஜியம், பிரான்சு, சிவப்பு ரஷ்யா குறித்த சொற் சித்திரங்களே அவர் மக்களுக்குப் பரிசாக அளித்தவை.

பிஜித்தீவு வாழ்வு பற்றிய பேனாச் சித்திரத்தை மக்கள் முன் வைத்து, பாருங்கள் சகோதரர்களே உம்முடன் பிறந்த சகோதரர் நிலையை எனக் காட்டினார், ஆங்கில நாடகாசிரியன் ஷேக்ஸ்பிரியரின் தன்மையிலே! மக்கள் கவிஞனின் லட்சணம் அதுதான். தன் நாட்டு மக்களின் முட்டாள் தனத்தையும், குற்றங் குறைகளையும் சுட்டிக் காட்டத் தயங்க மாட்டான் மக்கள் கவிஞன். சிந்தையிலும் செயலிலும் அவர்கள் எவ்வளவு பிற்போக்கானவர்களாக இருக்கிறார்கள். அதே வேளையில் உலகத்தின் இதர நாடுகள் எவ்வளவு வேகமாக முன்னேறுகின்றன. எவ்வளவு சிறப்பாகச் செயல்புரிகின்றன. அங்கெல்லாம் வாழ்வு எப்படி வளம் பெறுகிறது என எடுத்துக் காட்ட அஞ்சமாட்டான்.

வாழ்க்கை வசதிகள் பெற்று மேட்டுக் குடிகளாகத் திகழ்ந்தவர்களைக் கண்டு துடை நடுங்கவில்லை பாரதி. அவர்களது தவறுகளையும் தயங்காமல் மக்கள் முன் வைத்தார். வஞ்சகத்தையும், துரோகத்தையும் அவற்றின் உண்மை சொரூபத்திலே கொணர்ந்து நிறுத்தினார். ஒப்பற்ற தீரம், அளவற்ற உற்சாகத்தோடு இத்தகைய பணி புரிந்தார் அவர்.

பாரதியைத் தேசியக் கவிஎன அளவுக்கு அதிகமாகப் பாராட்டுவதில் அதிக அக்கறை காட்டுகிறார்கள் ஒரு சாரார். கவிஞர் மீதுள்ள காதல் அல்ல காரணம். இப்படிச் சித்திரித்துக் காட்டுவதன் மூலம் கவிஞரின் மற்

பேரறிஞர் அண்ணா

றொரு தன்மையை அதாவது பாரதி மக்களின் கவிஞர் என்ற உண்மையை மறைத்து விடலாம் என்பது அவர்கள் எண்ணம்.

சுற்றி வேலி கட்டிக்கொண்டு அந்த எல்லைக்குள் அடங்கி ஒடுங்கி விடுபவையல்ல பாரதியாரின் பாக்கள். வேதாந்த, தேசியச் சிமிழ்களில் அவற்றை அடைக்க முடியாது. புராதன சம்பிரதாயங்களில், புராணக் கற்பனைகளின் ஊழல்களை அம்பலப்படுத்த அவர் அஞ்சவில்லை. பழைமைப் பாதுகாவலர்களாக, சம்பிரதாய உடும்புகளாக விளங்குபவர்களாக நோக்கி ஆவேசமாக எறிகிறார்.

புராதன காலத்தில் அறியாமையும், குள்ளக் கருத்துக்களும் இல்லவே இல்லை என்று எண்ணுகிறீர்களா நீங்கள்? செத்த சிந்தனைகள் என்ற பிணத்தை ஏன் இன்னும் நீங்கள் கட்டி அழ வேண்டும்? நிகழ்காலத்தில் வாழ்ந்து எதிர்கால வாழ்விற்கு வகை செய்யுங்கள். இறந்த கால அந்தகாரத்தில் துழல வேண்டாம். கடந்த காலம் கடந்துபோனது போனதுதான். சென்றது இனி மீளாது. இது பாரதி வாக்கு. இங்கேதான் மக்கள் கவிஞரை நாம் சந்திக்கிறோம். வாழ்வோடு ஒட்டிய ஒழுக்க முறைகளை மக்கள் சமுதாயத்திற்காக அமைத்துக் கொடுத்துள்ளார் அவர்.

புராணக் கோட்பாடுகளைப் போல மண்ணோடு ஒட்டாத சித்தாந்தம் அல்ல அவர்காட்டும் வழி, மக்களுக்கு ஒரு புதிய விழிப்பு ஊட்டினார். உலகம் மாயை என்ற சாக்குருவி வேதாந்தம் - பாழுலகம் பொய்யே பரம பதம் போ என்ற படுபாபூவதிப் பண்பாடு - மக்களிடையே பரவுவதைத் தடுத்தார். அத்தகைய நம்பிக்கையைக் கண்டு சிரித்துத் துப்பினார். ஆசிரமவாசிகளுக்கு ஆத்திரம் வரச் செய்தார். விளைவு என்னாகுமோ என வீண் பீதி கொள்ளவில்லை. அத்தகைய சோம்பேறி வேதாந்தங்களில் ஊறிய மக்கள் உதவாக்கரைகளாக, ஒன்றுக்கும் உதவாத பிற்போக்கு வாதிகளாக ஆகி விடுவார்கள் என்பது அவர் கொள்கை.

பசி, வறுமை, அறியாமை முதலியவற்றை அவரால் சகிக்க முடியாது. பணக்காரர்களின் கொடுமையைப் பலமாகச் சாடுகிறார் அவர். தனி ஒருவனுக்கு உணவு இல்லையெனில் இந்த ஜகத்தினை அழித்திடுவோம் எனக் கர்ஜிக்கிறார். வாழ்வு வசதிகள் அனைத்தும் பெற்று மக்கள் வாழ வேண்டும். வர்த்தகம் வளமாக வேண்டும். இயந்திர தொழில்கள் பெருக வேண்டும். புதுயுகத்தின் நலன்களெல்லாம் நாட்டிலே குவிய வேண்டும் என்றெல்லாம் விரும்புகிறார். பூசாரித்தனமும், சுலோக ஊளையும் அவரது மதக் கோட்பாடுகள் அல்ல. மக்களுக்கு உழைத்தலே-சகோதர ஜீவர்களின் பணிபுரிவதே - அவரது மதம்.

(பேரறிஞர் அண்ணா அவர்கள் 1950-ல் வானொலியில் ஆற்றிய people's poet என்னும் ஆங்கில உரையின் தமிழாக்கத்தின் சில பகுதிகள்)

முதன் முதலில்...

1904இல் பாரதியார் சென்னை வந்து சுதேசமித்திரன் அலுவலகத்திலே பணியாற்றிய சமயம், 'வங்க வாழ்த்துக் கவிகள்' என்ற அவருடைய பாடல் சுதேசமித்திரனில் 15.9.1905இல் வெளியானது. சுதேசமித்திரனில் பாரதியார் எழுதிய முதற் கவிதை இதுவே எனக் கருதப்படுகிறது.

பாரதியாரின் கவிதை ஒன்று மதுரையிலிருந்து வெளியான 'விவேக பானு' என்ற மாத இதழில் முன்பே வெளியாகியுள்ளது. 'தனிமை இரக்கம்' என்ற தலைப்புள்ள அக்கவிதை 1904 ஜூலை இதழில் வந்துள்ளது. இதுவே அச்சில் வந்துள்ள பாரதியாரின் முதற் கவிதை. இதை அவர் எட்டையபுரத்தில் இருந்தபோதே பத்திரிகைக்கு அனுப்பியுள்ளார்.

1908இல் பாரதியார் ஸ்வதேச கீதங்கள் என்ற நூலை வெளியிட்டார். பதினான்கு பாடல்கள் அடங்கிய இதுவே அவருடைய முதல் நூலென்று கொள்ளலாம். அந்நூலை அவர் தம் குருவாகிய நிவேதிதா தேவியாருக்கே சமர்ப்பணம் செய்திருக்கிறார்.

''ஸ்ரீ கிருஷ்ணன் அர்ஜுனனுக்கு விசுவ ரூபம் காட்டி ஆத்மநிலை விளக்கிய தொப்ப எனக்குப் பாரத தேவியின் ஸம்பூர்ண ரூபத்தைக் காட்டி ஸ்வதேச பக்தி யுபதேசம் புரிந்தருளிய குருவின் சரண மலர்களில் இச்சிறு நூல் ஸமர்ப்பிக்கின்றேன்'' என்று அவர் எழுதியுள்ளார்.

புரட்சி மனம் கொண்ட பாரதி

மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர்

பாரதிக்கு முன்பு எத்தனையோ கவிஞர்கள் இருந்திருக்கிறார்கள். அவருக்குப் பின்னரும் எத்தனையோ கவிஞர்கள் தோன்றியிருக்கிறார்கள்; தோன்றிக்கொண்டிருக்கிறார்கள். பாரதி எடுத்துச் சொல்லிய கருத்துக்களை எல்லாம் வைத்துச் சில கேள்விகளைக் கேட்டு, நாமே அவற்றிற்கு விடை கூறிக்கொண்டால் அவர் யார் என்பது விளங்கும்.

சமூக சீர்திருத்தத்தில் அவர் ஆர்வம் கொண்டிருந்தவரா என்று கேட்டால், ஆம் என்ற விடை கிடைக்கும்.

பெண்கள் மறுமலர்ச்சிக்குரிய கருத்துக்களை வெளியிட்டவரா என்று கேட்டால், ஆமாம் என்ற பதில் கிடைக்கும்.

பெண் உரிமைக்காகப் போராடியவரா என்று கேட்டால், ஆம் என்ற பதிலே கிடைக்கும்.

ஆணும் பெண்ணும் சரிநிகர் சமானமாக வாழ வேண்டும் என்ற தத்துவத்தை எடுத்துச் சொன்னாரா என்றால், ஆமாம் என்னும் பதிலே கிடைக்கும்.

இந்த நாட்டில் - சமூகத்தில் ஏற்றத் தாழ்வு கூடாது என்ற கொள்கையைத் தனது கவிதையின் மூலம் தெரிவித்தாரா என்று கேட்டால், ஆமாம் என்ற பதில் தான் கிடைக்கும்.

சாதிகள் கூடாது என்ற உண்மையை - தனது உணர்வை - எழுதி-பேசி வந்தவரா என்றால், ஆமாம் என்னும் பதிலே கிடைக்கும்.

பெண்களை அடிமைப்படுத்தக் கூடாது என்ற தத்துவத்தை வலியுறுத்தியவரா என்று கேட்டால், ஆமாம் என்ற பதிலே கிடைக்கும்.

நாட்டு விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டவரா என்று கேட்டால் ,ஆமாம் என்ற பதிலே கிடைக்கும்.

எந்தப் புரட்சிக் கருத்தையும் இன்று கூற முடியும். ஆனால் அதனைச் சொல்ல முடியாத காலத்தில் - சொல்வதற்கு அச்சப்பட்ட காலத்தில் அதனைத் துணிவாகச் சொல்லியிருக்கிறார். எத்தனை துணிச்சல் இருந்தால் சொல்லியிருக்க முடியும் என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும்.

சிலருக்குச் சில நாட்கள் புகழ் இருக்கலாம். சில வாரங்கள் புகழ் இருக்கலாம். சில மாதங்கள் புகழ் இருக்கலாம். ஆனால் பாரதியின் புகழ் நூறாண்டுகளுக்கு மேலாக இருந்து வருகிறது. இன்னும் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு அது இருக்கும் - சமுதாயம் அவரைப் போற்றும்-வாழ்த்தும் என அறுதியிட்டுக் கூறுகிறேன்.

பாரதிக்குத் துணிவு எங்கிருந்து வந்தது? பிராமண குலத்தில் பிறந்தவர் அவர். பிறப்பால் தாழ்த்தப்பட்டவர் இல்லை. தனக்காகவோ தனது இனத்துக்காகவோ சமுதாயத்துடன் போராட வேண்டிய அவசியம் அவருக்கு இல்லை. வசதியாகத் தான் வாழ்ந்திருக்கிறார். அவரது தந்தை ஒரு சிறிய தொழிற்சாலை நடத்துகின்ற அளவுக்கு அவரது குடும்பச் சூழ்நிலை இருந்திருக்கிறது.

அப்படி இருந்தும் அவர், தனக்காகப் போராடவில்லை. சமுதாயத்துக்காகப் போராடியிருக்கிறார். அவர் தனி மனிதரல்லர்- தத்துவத்தின் சின்னம்.

மற்றவர்கள் சொல்ல அஞ்சும் கருத்துக்களை - பிரச்சினைகளை சமுதாய சீர்திருத்தக் கருத்துக்

பாரதியாரின் இளவல் திரு சி. விசுவநாதஅய்யர் அவர்களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் நினைவுப் பரிசு வழங்குகிறார்.

களை அவர் துணிச்சலுடன் தெரிவித்திருக்கிறார்.

அவரை தேசிய கவி என்பதா, மகாகவி என்பதா, தேசிய மகா கவி என்பதா? அந்தப் பெருமையை எண்ணித்தான் விழா கொண்டாடப்படுகிறது.

அவர் எந்தக் கருத்தையும் பெரிதாகச் சொல்லியிருக்கிறார்.

பெண்களின் கற்பு நிலை குறித்து விவரமாக வெளியிட்டிருக்கிறார். பெண்களுக்கெனச் சில திட்டங்களைத் தெரிவித்திருக்கிறார்.

'பெண் பக்குவமடைவதற்கு முன் திருமணம் செய்யக்கூடாது' என்று பாரதியார் கூறியிருக்கிறார். அவர் சொல்லிய பிறகு அவ்வாறு திருமணம் செய்வதற்குத் தடை விதிக்கப்பட்டு இருக்கிறது. ஆனால், தடைச் சட்டம் வருவதற்கு முன்பே -எவ்வளவு சிந்தனையோடு - துணிவோடு - சொல்லியிருக்கிறார் பாரதி என்பதை இளைஞர் சமுதாயம் நினைவிற் கொள்ள வேண்டும்.

இன்று நாம் பேசுகின்ற பல புரட்சித் தத்துவங்களை 50 ஆண்டுகளுக்கு முன்பே பாரதியார் சொல்லியிருக்கிறார்.

''பிதுரார்ஜித சொத்தில் பெண்களுக்கும் சமபங்கு வழங்கப்பட வேண்டும்'' என்று பல்லாண்டுகளுக்கு முன்பேயே தெரிவித்திருக்கிறார்.

''கணவன் இறந்த பிறகு ஒரு பெண் மறு விவாகம் செய்ய விரும்பினால் அதைத் தடுக்கக் கூடாது'' என்றும் அவர் கூறியிருக்கிறார்.

பெண்களுக்குப் படிப்பு வேண்டும் என்று அக்காலத்திலேயே பாரதி கூறியுள்ளார். அவர்களுக்குப் பட்டப்படிப்புக் கொடுக்க வேண்டும் என்று முன்னமேயே சிந்தனையுடன் கூறியுள்ளார் என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும்.

பெண்கள் மறுமலர்ச்சியில் பெரும் பங்கு கொண்டவர் பாரதி. பெண் விடுதலையின் பெருமைக்காக 'தர்மயுத்தம் தொடங்குவேன், அதற்கு மகா சக்தி துணைபுரிவாள்' என்கிறார் பாரதி.

கலப்பு மணம்செய்து கொள்ளுங்கள் என்று பாரதி வலியுறுத்தினார். தமிழகத்தைப் பொறுத்த வரையில் இப்போது கலப்புத் திருமணம் செய்து கொள்பவர்களுக்கு நாம்பரிசு கொடுக்கிறோம், பணம் கொடுக்கிறோம்.

உயிர்களிடத்தில் அன்பு
வேணும்—தெய்வம்
உண்மையென்று தானறிதல்
வேணும்;
வயிரமுடைய நெஞ்சு
வேணும்—இது
வாழும் முறைமையடி
பாப்பா

—பாரதியார்

மாபெரும் தியாகம் செய்த பாரதியை, தியாகி என்பதா வீரர் என்பதா, மறத்தமிழன் என்பதா!

தன்னோடு பிறந்தவன் -சகோதரன் அவனுக்கு உரிமை கிடையாது என்ற நிலை இருந்தது. அவனை அடிமை என்று கருதி வந்தார்கள். அந்த இழிநிலை ஒழிய வேண்டும் என்று தீவிரமாக இருந்தார்பாரதி. அனைத்து மனிதர்களும் சகோதரர்கள் என்று அவர் கூறினார். ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்று நமது அண்ணா அவர்கள் வலியுறுத்தி வந்தார்களே, அதுபோல மனிதரத்தம் அனைத்தும் ஒன்றே என்று தெரிவித்தார் பாரதியார்.

சமதர்ம சமுதாயம் வேண்டும் என்கிறார் புரட்சிமனம்கொண்ட பாரதி. இந்தியா முழுமையும் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியவர் பாரதி. அதனால் பாரதி பிறந்த நாளை இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டு நாளாகக் கொண்டாடவேண்டும்.

இந்த நாளில் ஏற்றத்தாழ்வை அகற்ற நாம் உறுதி எடுத்துக் கொள்வோம். ஒன்றே குலம் என்ற நிலை உருவாகப் பாடுபடுவோம்.

(1.12.81ல் எட்டையபுரம் பாரதி நூற்றாண்டு விழாவின் தொடக்க நாள் நிகழ்ச்சியில் ஆற்றிய உரையிலிருந்து....)

புது நெறி காட்டிய புலவன்

மாண்புமிகு நிதி அமைச்சர்

டாக்டர் நாவலர்

இரா. நெடுஞ்செழியன்

வள்ளுவரை உலகுக்குத் தந்ததால், வான் புகழ் கொண்டது தமிழ்நாடு என்றார் பாரதியார். அவரைத் தந்ததால் எட்டயபுரம் வான் புகழை பெற்றதாகிவிட்டது.

16ஆம் நூற்றாண்டு வரை இளசை என்ற பெயருடன் இருந்த எட்டயபுரம் கடிகை முத்துப் புலவர், உமறுப்புலவர் பாரதியார் போன்றவர்களைப் பெற்றெடுத்ததால் இன்று பெரும் சிறப்பைப் பெறுகிறது.

'தமிழ்நாட்டுக் கவிஞர்களுக்கும் லோகோபகாரிகளுக்கும், பூர்விக மகான்களுக்கும் விழா எடுக்க வேண்டும்; அவர்களின் புகழைப் பேணாத தேசத்தின் பெருமைகள் அழிந்து போகும்; கம்பன், இளங்கோ, திருவள்ளுவர் ஆகியோருக்கு விழா எடுக்கவேண்டும்' என்ற பாரதியாரின் சிந்தனை அறிவார்ந்த சிந்தனை. அவரின் எண்ணங்களை ஈடேற்றி வருகிறோம். அவரே சிந்திக்கக்கற்றுக்கொடுத்தார். அப்படிச் சிந்திக்கத் தெரியாதவர்களைப் பார்த்து நெஞ்சு பொறுக்குதில்லையே என்று குமுறினார்.

பாரதியார் பாடல்களில் புதிய பாங்கைக் கொடுத்தார். சொல்லுக்குச் சொல் சுவை ஊட்டினார். பாரதியாரின் பாடல்கள் செவிடர்களைக் கேட்க வைத்தன. ஊமைகளைப் பேசவைத்தன. அந்த அளவுக்கு மக்களிடம் உணர்ச்சியை ஊட்டின,

தமிழைப் போன்ற மொழியில்லை என்பதை உலகுக்கு எடுத்து உரைத்தார். யாமறிந்த மொழிகளில் தமிழ்போல் இனிதாவது எங்கும் காணோம் என்றார். ஆங்கிலத்தை, சமஸ்கிருத மொழியை, பிரெஞ்சுமொழியை, ஓரளவு தெலுங்கு மொழியை உணர்ந்திருந்த பாரதியார் 'தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்' என்றார். தமிழுக்குள்ள தகுதி அனைத்தையும் எடுத்துச் சொன்னார்.

பாமரராய், விலங்குகளாய் வாழ்ந்தது போதும் என்று தமிழ் மக்களைத் தட்டி எழுப்பினார். ஒவ்வொருவகையிலும் மக்களைச் சிந்திக்கத் தூண்டினார். ஒரு சொல் கேளீர் என்று மக்களை எழுச்சியுடன் விழிப்படையச் செய்தார்.

உலகத்துக்கு ஜீரோவைக் கற்பித்த நாடு நம் நாடு. வாரத்துக்கு ஏழு நாட்கள் என்பதைக் கற்பித்ததும் நம்நாடு. அப்படிப் பட்ட நாட்டில் ஆமைகளாய், ஊமைகளாய், கல்வியறிவு அற்ற மக்களாக வாழ்வது கண்டு மனங் குமுறினார் பாரதியார்.

எப்பொழுதுமே நிமிர்ந்து நில், குனிந்து நடக்காதே, நிமிர்ந்து நட என்பதை பாரதியார் வலியுறுத்தி வந்தார். நேர்மைத் திறனும் நெஞ்சுறுதியும் கொண்ட பாரதியார் எதற்கும் தலை வணங்காதவராக இருந்தார்.

பாரதிதாசன் அவர்கள் பாரதியாரைப் பற்றிச் சொல்லும் பொழுது சொல்வார்கள்! பாரதியாருக்கு உணவு பரிமாறினால் முன்பக்கம்போட வேண்டாம் என்றும்; பக்கத்திலே இலைபோடும்படி சொல்லுவாராம்! முன்னால் இலை போட்டால் பரிமாறுபவனுக்குத்தலைவணங்கி, குனிந்து சாப்பிட வேண்டும். அதற்காக பக்கத்திலே இலை போடுங்கள் என்பாராம்.

ஜாதி பேதத்தை அடியோடு வெறுத்தார் பாரதியார். பிறப்பினால் ஒருவன் உயர்ந்தவன், மற்றவன் தாழ்ந்தவன் என்று சொல்வதை எதிர்த்தார். தனது பூணூலையும் எடுத்து விட்டார். அன்றைக்கு ஆங்கில ஆட்சியில் அவரைத் தேடும் பொழுது போலீசாரே பாரதியாரை பூணூலை எடுத்துவிட்டார் என்று அடையாளம் சொல்லியிருந்தனர். அப்படிச் சாதிவேற்றுமைகளைக் களைய வழிகாட்டியாகத் திகழ்ந்தார் பாரதியார்.

ஷெல்லிதாசன்; சக்திதாசன், காளிதாசன் என்ற பெயரில் கட்டுரைகளை எழுதினார்.

சிசரோவின் பேச்சு ரோம் நாட்டு நாகரிகத்தையும் பண்பாட்டையும் காத்தது என்பார்கள். அதுபோன்று பாரதியாருடைய எழுத்துக்கள் தமிழ்நாட்டு நாகரிகத்தையும் பண்பாட்டையும் கட்டிக்காத்தன.

பாரதிதாசன் கூறியதுபோல தமிழ்நாட்டுக்குப் புதுநெறி காட்டிய புலவன் பாரதி. அந்தப் புகழுக்குரிய பெருங்கவிஞனுக்கு விழா எடுத்து பெருமைப்படுத்துகிறது தமிழக அரசு.

பாரதியார் கண்ட கனவுகளை நிறைவேற்ற எல்லார்க்கும் கல்வி என்ற நிலையை நாம் உருவாக்க வேண்டும். அனைவருக்கும் அடிப்படைக் கல்வி என்ற நிலையை உருவாக்கி புதியதோர் உலகம் படைப்போம்.

பாரதியும் பாட்டாளியும்

மாண்புமிகு சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ.சி

பக்தர்கள் கடவுளைத் தந்தையாகவும் தாயாகவும் குருவாகவும் எண்ணி வணங்கி வழிபடுவதுண்டு. புலவர்களும் இதற்கு விலக்கல்ல. கடவுளைக் குழந்தையாகக் கற்பனை செய்து கவிஞர்கள் எழுதிய பிள்ளைப் பிரபந்தங்கள் கணக்கில. தோழனாக வைத்து எழுதிய பாடல்களும் பலப்பல.

மற்றும், தம்மை நாயகியாகவும் கடவுளை நாயகனாகவும் கற்பனை செய்து புலவர்கள் தங்கள் வழிபடு தெய்வத்தை வணங்கியதும் உண்டு. இந்த 'நாயகி-நாயக பாவத்தையொட்டிய இலக்கியங்கள் தமிழில் எத்தனையோ உண்டு.

ஆனால், பாரதிக்கு முன் தோன்றிய புலவர் எவரும் கடவுளை வேலைக்காரனாகக் கற்பனை செய்து பாடியதில்லை. பாரதியாரோ தமது வழிபடும் தெய்வமான கண்ணனைத் தாய், தந்தை, குரு, அரசன் எனத் தம்மிலும் மேம்பட்ட நிலையில் வைத்துப்பாடி, பக்தி செலுத்தியிருக்கிறார். தமக்குச் சமதையான தோழனாகவும் எண்ணி விளையாடியிருக்கிறார். தமது அன்புக்குரிய குழந்தையாகக் கருதி, கொஞ்சி மகிழ்ந்திருக்கிறார். இவற்றிற்கெல்லாம் மேலாகக் கண்ணனை வேலைக்காரனாகவும் கற்பனை செய்து பாடியிருக்கிறார். அது ஒருபக்திப் பாடல்.

''கூலி மிகக் கேட்பார், கொடுத்ததெலாம் தாம் மறப்பார்'' என்று தொடங்கும் வரிகளில், வேலைக்காரர்களின் விஷமத்தனங்களை யெல்லாம் சுவைபடக்கூறி,

''ஓயாமல் பொய்யுரைப்பார்
ஒன்றுரைக்க வேறுசெய்வார்
சேவகரால் பட்ட
சிரமமிக உண்டு கண்டீர்''

என, பாட்டாளி மக்கள் தம்மைப் படுத்திய பாடனைத்தையும் கூறிச் சோர்ந்துவிடுகிறார்.

''எங்கிருந்தோ வந்தான்,
இடைச்சாதி நான்
என்றான்''

என்ற வரியில், கண்ணனே தனக்குச் சேவகம் புரியவந்த சேதியைக் கூறுகின்றார். அந்தத் தெய்விகச் சேவகன்-

''மாடுகன்று மேய்த்திடுவேன்
மக்களை நான்
காத்திடுவேன்;
வீடு பெருக்கி விளக்கேற்றி
வைத்திடுவேன்''

என்று வீட்டு வேலைகளையும் வெளி வேலைகளையும் செய்வதில் தனக்குள்ள ஆற்றல்களையெல்லாம் அறிவிக்கிறான். வேலைக்காரனாக மட்டுமல்லாமல்,

'சின்னக் குழந்தைக்குச்
சிங்காரப் பாட்டிசைத்தே
ஆட்டங்கள் காட்டி
அழாதபடி பார்த்திடுவேன்'

—என வீட்டுக் குழந்தைகளை வளர்க்கும் செவிலித் தாயாகவும் தொண்டு புரிவதாக உறுதி கூறுகின்றான். உன் ''பெயரென்ன சொல்'' என்றால்,

''ஒன்றுமில்லை கண்ணனென்பர்
ஊரிலுள்ளோர் என்னை,
என்றான்''

என்கிறார்.

இந்த இடத்தில் வேலைக்காரனின் அப்பாவித் தனத்தை அப்படியே படம் பிடித்துக் காட்டுகிறார் பாரதியார். 'பெயரென்ன சொல்' என்றால், 'ஒன்றுமில்லை' என்று முதலில் கூறி விட்டு, அப்புறம் தனது பெயரைச் சொல்கிறான். இது பாரதிக்கு வாய்த்த தெய்விகச் சேவகனின் பண்பு மட்டுமல்ல; பாரத நாட்டில் இன்று நாம் பார்க்கின்ற, பழகுகின்ற பணியாட்களின் பழக்கமுந்தான்.

தனது பெயரைச் சொல்லும் சேவகன், ''கண்ணனென்பார், ஊரிலுள்ளோர் என்னை'' என்கிறான். ஆம்; 'ஒரு நாமம், ஒருருவம், ஒன்றுமிலாதவன்' இறைவன். ஆனால், உலகோர் அவனுக்கு ஆயிரம் திருநாமம் வைத்து வணங்கி வழிபடுகின்றனர். அதிலே ஒரு நாமம் 'கண்ணன்' என்பது. இதைச் சிலேடையில் சேவகன் மூலம் வெளிப்படுத்துகின்றார் பாரதியார்.

சேவகனின் பெயரைத் தெரிந்து கொண்டார்; அவனுடைய திறமைகளையெலாம் அறிந்துகொண்டார், இனி, அவனுடைய தேவைகளையும் தெரிந்துகொள்ள விரும்பி, ''கூலி என்ன கேட்கின்றாய் கூறு'' என்றார். அதற்கு அந்த மாயச்சேவகன் தரும் பதிலைக் கேளுங்கள்:

''.................... ஐயனே!
தாலிகட்டும் பெண்டாட்டி
சந்ததிகள் ஏதுமில்லை;
நானோர் தனியாள்; நரை
திரை தோன்றாவிடினும்
ஆனவயதிற் களவில்லை;
தேவரீர்
ஆதரித்தாற்போதும் அடி
யேனை; நெஞ்சிலுள்ள
காதல் பெரிதெனக்குக் காசு
பெரிதில்லை''

என்றானாம் வேலைக்காரன் வடிவத்தில் வந்த கண்ணன்!

மேலே சொன்ன வரிகளில் தெய்வத்தின் இலக்கணத்தைத் தெளிவு படக் கூறிவிட்டார் பாரதியார்.

''கண்ணனால் - பெற்றுவரும் நன்மையெல்லாம் பேசி முடியாது கண்ணை இமை இரண்டும் காப்பதுபோல் என் குடும்பம் வண்ணமுறக் காக்கின்றான்; வாய் முணுத்தல் கண்டறியேன்'' என்றெல்லாம் தனக்கு வாய்த்த சேவகனுக்கு நற்சாட்சிப் பத்திரம் வழங்குகின்றார்.

இப்படி, சிலேடைச் சொற்களில் சேவகனுடைய சிறப்புகளை யெலாம் சித்திரிக்கும் பாரதியார், மற்றொரு சிலேடைச் சொல்லில் ,அந்த ஆண்டவனைத் தனது இதயக் கோயிலில் குடியேற்றி விடுகிறார்.

''கண்ணன் எனதகத்தே
கால்வைத்த நாள்முதலாய்
எண்ணம் விசாரம்

எதுவுமவன் பொறுப்பு''

என்ற வரிகளில் கண்ணன் கால் வைத்தது பாரதியாரின் மனையகத்தே மட்டுமல்ல; மனத்தகத்தேயும் என்பதை வெளிப்படையாகவே கூறிவிடுகின்றார். 'அகம் 'என்ற சொல்லுக்கு 'மனை' 'மனம்' என்ற இரண்டு பொருள்கள் உண்டல்லவா!!

மகாத்மாவும் - மகாகவியும்!

1919-ம் வருடம் அண்ணல் காந்தியடிகள் சென்னை வந்திருந்த சமயம் திரு ஜீ. ஏ. நடேசன் அவர்களது சகோதரர் திரு ஜீ. வி. கல்யாணம் அவர்களது இல்லத்தில் அண்ணல் தங்கியிருந்தார்.

ஒருநாள் பகல் இரண்டு மணி இருக்கும். காந்திஜி ஒரு கட்டிலில் மெத்தையில் சாய்ந்திருந்தவண்ணம் தம் காரியதரிசி மகாதேவ தேசாய்க்கு ஏதோ சொல்லிக் கொண்டிருந்தார். சேலம் பாரிஸ்டர் ஆதி நாராயணச் செட்டியார் குடகுக் இச்சலிப் பழங்களை உரித்துப் பிழிந்து காந்திஜி அருந்துவதற்காகப் பழரசம் தயாரித்துக் கொண்டிருந்தார். அறையில் ஒரு பக்கம் 'சுதேசமித்திரன்' ஆசிரியர் ஏ. ரெங்கசாமி ஐயங்காரும், எஸ். சத்தியமூர்த்தியும் சுவரில் சாய்ந்து நின்று கொண்டிருந்தார்கள். எதிரே ராஜாஜியும் மற்றும் சிலரும் நின்று கொண்டிருந்தனர். அறையின் வாயில் காப்போனாக வ. ரா. நின்றுகொண்டிருந்தார். யாரையும் உள்ளே விட வேண்டாமென்று கண்டிப்பான உத்தரவு. அச்சமயம் பாரதி அங்கு வந்தார். புதுவையில் தமக்கு அறிமுகமான வ. ரா. அங்கு நிற்பதைக் கண்டு ''என்ன ஓய்'', என்று சொல்லிக் கொண்டே அறைக்குள் நுழைந்து விட்டார்.

பாரதி நேரே காந்தியடிகளை வணங்கி விட்டு அவர் பக்கத்தில் மெத்தையில் உட்கார்ந்துவிட்டார். ''மிஸ்டர் காந்தி! இன்று மாலை ஐந்தரை மணிக்குத் திருவல்லிக்கேணிக் கடற்கரையில் ஒரு கூட்டத்தில் பேசப் போகிறேன். அக்கூட்டத்திற்குத் தாங்கள் தலைமை வகிக்கமுடியுமா?'' என்று கேட்டார்.

அன்று மாலை தமக்கு என்ன அலுவல் என்று காந்தியடிகள் மகாதேவ தேசாயைக் கேட்டார். வேறு ஒரு அலுவல் இருந்தது.

''இன்றைக்கு நான் வர இயலாது' தங்கள் கூட்டத்தை நாளைக்கு ஒத்திப் போட முடியுமா? என்றார் காந்தியடிகள்.

'முடியாது. நான் போய் வருகிறேன். மிஸ்டர் காந்தி, தாங்கள் ஆரம்பிக்கப்போகும் இயக்கத்தை நான் ஆசீர்வதிக்கிறேன்.' என்று சொல்லிவிட்டு பாரதி வெளியே போய்விட்டார்.

பாரதி போனதும், காந்தியடிகள் 'இவர் யார்?' எனறு வினவினார். யாரும் பதில் சொல்லவில்லை. இராஜகோபாலாச்சாரியார்தான், 'இவர் எங்கள் தமிழ்நாட்டுத் தேசியக் கவி' என்று அழகுறச்சொன்னார்.

இதைக்கேட்ட காந்தியடிகள், 'இவரைப் பத்திரமாய்ப் பாதுகாக்க வேண்டும். இதற்குத் தமிழ்நாட்டில் எவருமில்லையா?' என்றாராம்.



கவியரசர் பற்றி தந்தை பெரியார்

தமிழ்மொழியின் சிறப்பை இந்நாளில் தமிழ் வளர்த்த கவியரசர் சுப்பிரமணிய பாரதியார்,

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்
இனிதாவ தெங்கும் காணோம்
....
அதை வணக்கஞ் செய்தல் வேண்டும்"

என்று கூறியிருந்தார். மற்றுமோரிடத்தில் அவர் தமிழர்களுக்கு ஓர் எச்சரிக்கையும் வழங்கியிருந்தார். அது வருமாறு:

"மூன்று குலத் தமிழ் மன்னர்—என்னை
மூண்டநல் லன்போடு நித்தம் வளர்த்தார்"
"இன்றொரு சொல்லினைக் கேட்டேன்!—இனி
ஏதுசெய் வேன்? என தாருயிர் மக்காள்!
கொன்றிடல் போலொரு வார்த்தை—இங்கு
கூறத் தகாதவன் கூறினன் கண்டீர்"
"மெல்லத் தமிழினிச் சாகும்—அந்த
மேற்கு மொழிகள் புவிமிசை யோங்கும்"
"என்றந்தப் பேதை உரைத்தான்—ஆ!
இந்த வசையெனக் கெய்திட லாமோ!
சென்றிடுவீ ரெட்டுத் திக்கும்—கலைச்
செல்வங்கள் யாவுங் கொணர்ந் திங்கு சேர்ப்பீர்!
"தந்தை யருள்வலி யாலும்—இன்று
சார்ந்த புலவர் தவவலி யாலும்
இந்தப் பெரும்பழி தீரும்—புகழ்
ஏறிப் புவிமிசை யென்று மிருப்பேன்".

இப்பொன் மொழிகளை உற்று நோக்கி உண்மைப் பொருள் தேறுவோர் தமிழ் மொழியை வளர்க்க முயலாதிருப்பாரோ?

—தந்தை பெரியார்

(திருவண்ணாமலை 30-வது தமிழர் மாநாடு—தலைமையுரையில்—'நவசக்தி' 21-11-1924).

"பசிக்குத் தெரியுமாடா சூடு!"

சுதேசமித்திரன் காரியாலயம் ஜார்ஜ் டவுன் எர்ரபாலுசெட்டித் தெருவில் இருந்தபோது கவி பாரதியார் உதவி ஆசிரியராகப் பணியாற்றி வந்தார். அச்சமயம் நான் ஆசிரியர் ஸ்ரீ. ஏ. ரங்கசுவாமி ஐயங்கார் அறை மற்றும் எடிட்டோரியல் அறையிலும் பியூனாக வேலை செய்து வந்தேன். எனக்குக் கவிபாரதியாரிடம் நெருங்கிய பழக்கமுண்டு. காரியாலயத்தில் பாரதி வேலைகள் முடிந்ததும் பாட்டுகள் பாடுவார். பாரதியார் தினசரி என்னிடம் கொத்தவால் பஜாரிலிருந்து மாம்பழம் வாங்கி வரும்படி பணம் கொடுப்பார். நானும் நாள் தவறாமல் வாங்கி வந்து கொடுப்பேன். கவி பாரதியாருக்கு மாம்பழத்தின் மீது அலாதி பிரியமுண்டு. அடிக்கடி மாம்பழம் சாப்பிடுவதைக் கண்ட நான் பாரதியாரிடம், "சாமி! மாம்பழம் அதிகமாகச் சாப்பிடாதீர்கள். அது சூடு. உடம்பிற்கு ஆகாது" என்பேன். அதற்கு பாரதியார், "தம்பி சம்பந்தம்! பசிக்குத் தானடா மாம்பழம் சாப்பிடுகிறோம். பசிக்குத் தெரியுமாடா சூடு" என்று நம்மையே திருப்பிக் கேட்டு விடுவார். (தகவல் : எம். சம்பந்தம், முன்னாள் சுதேசமித்திரன் ஊழியர்).

உலக மகாகவி

பாரதியார் 1906-ல் தான் புதுச்சேரிக்கு வந்தார். இன்னும் வ. வெ. சு. ஐயர், திருவல்லிக்கேணி சீனுவாச ஆச்சாரியார், அரவிந்த கோஷ் முதலியோரும் வந்தனர். இவர்களுக்கெல்லாம் சுதேசிகள் என்று பாண்டியில் பெயர்.

அரவிந்தர் - வ. ரா. முதலியோர் ஒரு குழு.

வ. வெ. சு. ஐயர் முதலியோர் ஒரு குழு.

பாரதி நான் முதலியோர் ஒரு குழு.

சீனுவாசாச்சாரியார் எதிலும் இருப்பார்.

மூன்று குழுக்களும் வெவ்வேறாக இருந்தன.

அரவிந்தர் முதலியோர் தமிழென்று ஒரு மொழி இருப்பதையோ, அதைப் பற்றி நினைப்பதையோ அறியாதார்.

வ. வெ. சு. ஐயர் வர்ணாஸ்ரமம் உண்டு எனறால் தமிழைப் போற்றத் தயார்.

.பாரதியார் தமிழிலேயே வாழ்ந்தார். அன்றைய நிலை அப்படி. பாரதியார் பார்ப்பனராக இருந்தாலும் தமிழைப் போற்றினார். காரணம், அவர் தமிழ்ப் புலவரின் மகன் என்பது தான். பாரதியார் முதலில் பாட ஆரம்பித்தது காவடிச்சிந்துதான். புரியும்படி காவடிச் சிந்து அமைவதே காரணம்.

அரவிந்தர் ஆங்கிலத்தில் 'ASIA' பத்திரிகை ஆரம்பித்தார். ஆனால் பாரதியாரோ தமிழில் ''இந்தியா'' பத்திரிகை ஆரம்பித்தார். தமிழை பாரதி இப்படிப் போற்றினார்.

இங்கே எனக்கு முன் பேசிய விவேகானந்தா கல்லூரி தமிழ்ப் பேராசிரியர். மா. ராசமாணிக்கம் அவர்கள் என்னை பாரதியாரைப் பற்றி ''நான் கண்ட பாரதி'' என்ற தலைப்பில் ஒரு புத்தகம் எழுதும்படி கேட்டார். இதேபோல் முன்பே தினசரி ஆசிரியர் டி. எஸ். சொக்கலிங்கமும் கேட்டார். நான் எழுதிக் கொண்டுதான் இருக்கிறேன். அது ஆயிரம் பக்கங்கள் வரும்.

பாரதியார் தமிழ்ப்பற்றுடையவர், தமிழுக்கு உயிர் உண்டாக்கினார். எல்லோருக்கும் புரியும்படி எழுதினார், பாடினார். அதற்குப் பிறகுதான், அரவிந்த கோசுக்குத் தமிழ் என்று ஒன்று இருப்பதாகப் புரிந்தது. வ. ரா. முதலானோர் தமிழ்ப் புத்தகங்களைத் தேடிப் படித்தனர்.

பாரதியாருடைய முக்கிய கொள்கை ஜாதி ஒழிப்பு. அதுதான் அவரிடம் இருந்த சிறந்த கொள்கை, குறிப்பிட்டுப் பேச வேண்டிய கொள்கை.

பாரதியார் பார்ப்பனர். தெரிந்தும் சொன்னார் 'ஜாதிகள் இல்லையடி பாப்பா' என்று. தமிழில் நல்ல எளிய தமிழில் எல்லோருக்கும் புரியும்படி இதைச் சொன்னார். எனக்கு மிகவும் பிடித்திருந்தது. சந்தோஷம்கூட.

நான் அப்பொழுது பாண்டிச்சேரியில் வாத்தியார் வேலையில் இருந்தேன். அப்போதே சில பத்திரிகைகளில் கட்டுரைகளும், பாட்டுகளும் எழுதி அனுப்புவது வழக்கம். அப்போது நான் உத்தியோகத்தில் இருந்து கொண்டு இக்காரியம் செய்வது உத்யோகத்திற்குத் தொல்லை தரும். யாராவது செய்வார்கள் என்று கருதி நான் ஓர் புனை பெயர் வைத்துக் கொள்ள விரும்பினேன். அப்போது என் கண்முன்னே 'சூத்திரனுக்கு ஒரு நீதி, தண்டச் சோற்றுப் பார்ப்புக்கு ஒரு நீதி''

பாவேந்தர் பாரதிதாசன்

என்று கேட்ட பாரதியார், பார்ப்பனனாய் இருந்தும் பயப்படாது, தீமை வருமென்று தெரிந்திருந்தும் திகைக்காது, தமிழில் புரியும்படி சொல்லிய பாரதியார்தான் நின்றார். உடனே பாரதிதாசன் என்று புனை பெயர் வைத்துக் கொண்டேன். நான் அவருக்கு, அந்த புண்ணியவானுக்கு-தன் குலத்தார் எதிர்ப்பையும் பொருட்படுத்தாத புண்ணியவான் பாரதிக்குத் தாசனாக இருப்பதில் ஒன்றும் தவறில்லை, என்று கருதுகிறேன்.

அவர் ஈசுவரன் கோயில் தெருவில் குடியிருந்தார். அப்போது அவர் மகளுக்குக் காய்ச்சல் வந்தது; டாக்டர் அம்பு வந்தார். விஷக்காய்ச்சல் என்று கூறினார். அவர்கள் வீட்டில் ஒரு கேணி இருந்தது. அதைப் பார்த்தார். அதில் சூரிய ஒளி படவில்லை என்றார். வேறு வீடு வேண்டும். என்ன செய்வது? என்ன நடந்தது என நினைக்கிறீர்கள்? சுமார் ஒன்றரை மணி நேரத்திற்குள்ளாகவே அவர் வீட்டுக்கு எதிர் வீட்டில் குடியிருந்தவர்கள் காலி செய்யப்பட்டு, பாரதியார் குடும்பத்தோடு குடியேறினார். எப்படி முடிந்தது? யார் வீடு அது தெரியுமா?

பெத்தாச்சி செட்டியார் வீடு அது. அவருக்கு பாரதியார் அளித்த பெயர் விளக்கெண்ணெய்ச் செட்டியார் என்பது. அதில் குடியிருந்தவர் ஒரு சி.ஐ.டி.

அப்படிப்பட்ட செட்டியாரிடம், (செட்டியார் பண விஷயத்தில் மகா கண்டிப்புக்காரர்) முன்பணம் கட்டி, அங்கிருந்த சி. ஐ. டி. அவர்களை காலி செய்து குடியேற்றினோம். யார்? நானும் என்போன்ற தோழர்களும்.

எப்படி? எங்களுக்கு இருந்த எண்ணமெல்லாம், பாரதி வருத்தப்படக் கூடாது. அவர் மகளுக்குக் காய்ச்சல்; கேணி நல்லதல்ல, வீடு மாற்ற வேண்டும் உடனே சென்றோம். காலி செய்யச் சொன்னோம். பயந்தே காலி செய்தனர்.

அவர் சுதேசமித்திரன் பத்திரிகையில் வேலை பார்த்தபோது, வெளிநாட்டு விஷயங்களை மிக நன்றாக மொழி பெயர்த்தார். சைனாவுக்குப் பக்கத்திலே ஒரு தீவு பற்றிய செய்தி வெளிவந்தால் அது எங்குள்ளது என்பது பற்றிய குறிப்பு பிராக்கட்டுக்குள் 'அடைப்புக் குறிக்குள்' அடங்கியிருக்கும். இது தற்காலத்து உதவி ஆசிரியர்கள் அறிய வேண்டிய செய்தி.

ஒற்றுமை

ஒற்றுமையை, வளரும் பசுஞ் செடிக்கு நிகராகக் கருதி ஒரு சீராகத் தண்ணீர் விட்டுப் பேணி வந்தால் மட்டுமே அது வளரும். அதைவிட்டுத் தண்ணீரும், வெந்நீரும் மாற்றி மாற்றி ஊற்றினால் செடியின் நிலை என்ன ஆகும்?

இந்தியா ஒன்றுபட்டிருக்க வேண்டும்; அதன் வலிவு வெல்லற்கரியதாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறோம். இந்த ஒற்றுமையை ஏற்படுத்துவதெப்படி? சட்டத்தின் மூலமோ, கட்டளையின் மூலமோ, குடியரசுத் தலைவரின் உத்தரவின் மூலமோ ஒற்றுமையை ஏற்படுத்தி விடமுடியாது. ஒற்றுமை என்பது உள்ளம் சம்பந்தப்பட்ட ஒன்றாகும். நமது எண்ணங்கள் ஒன்றிணைந்திட, செயல்பட வேண்டும். வெறும் உதட்டளவுப் பேச்சினால் ஒற்றுமை வந்து விடாது.

தமிழில் புதுமுறையில் மக்களுக்குப் புரியும்படி நூல் எழுதியவர் பாரதியார்தான். அதற்கு முன் புலவர்கள் ஒரே பொருள் பற்றிப் பல நூல்கள், ஒரே முறையில் எழுதுவார்கள்.

கலம்பகம் என்றால், திருவருணைக் கலம்பகம், புதுவைக் கலம்பகம் என்று போகும். அடுத்தாற்போல் அந்தாதி என்று பல நூல்கள். மற்றும் அம்மானைகள் இப்படித்தான். புதுமுறையோ, புதுப் பொருள் பற்றிய நூல்களோ கிடையாது. தைரியமில்லை. இந்த வழியில் புதுமுறைக்கு எடுத்துக் காட்டு சிந்து. இதில் அண்ணாமலை ரெட்டியாரின் காவடிச்சிந்து பாரதியாரை மிகவும் கவர்ந்தது.

அக்காலத்தில் தமிழைப்பற்றி மக்கள் மிகக் கேவலமாக நினைத்தனர். ஒருவர் ஒன்று கூறிவிட்டால் அதை மறுப்பது கூடாது. புதிய துறையில் பாரதியைப் பின்பற்றுங்கள்; பாரதியார் சுதேசமித்திரனுக்கு பாண்டியிலிருந்து ஒரு நாள் கவிதையும், ஒருநாள் கட்டுரையும் எழுதுவார். திடீரென்று அவர்கள் 'கவிதை வேண்டாம். கட்டுரையே போதும்' என்பார்கள்.

அப்போது, தென்னாட்டுக்கு டாக்டர். கசின்ஸ் என்று ஒருவர் வந்தார். அவர் பாரதியார்சிறந்த கவிஞர் என்று கேள்விப்பட்டு, அவருக்குக் கடிதம் எழுதி அவர் கவிகளை அனுப்பும்படியும், அதைத் தாம் அவர் கருத்துக் குலையாமல் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிடுவதாகவும் எழுதியிருந்தார். அத்துடன் அவர், தான்தான் வங்கக்கவி ரவீந்திரநாத் தாகூரின் கவிதைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் என்றும் கூறினார். அதனால் பாரதியும் "வேண்டுமடி எப்போதும் விடுதலை அம்மா, வேண்டுமடி எப்போதும் விடுதலை" என்ற பாட்டை எழுதி அனுப்பினார். இது ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு, அக்காலத்தில் 'New India' பத்திரிகையில் வெளிவந்தது. இம்மாதிரி இரண்டு மூன்று தடவை வந்ததும், சுதேசமித்திரன் பழையபடி கவிதை கேட்டது. அப்போது பாரதியார் சொன்னார் ''தமிழன் கவிதையைப் பிற நாட்டான் புகழ வேண்டும். அப்போதுதான் அதனைத் தமிழர் உணர்கிறார்கள்'' என்று.

பாண்டியிலே பாரதியார் பலரும் பார்க்க வேண்டும் என்றே கடை வீதி நடுவே முஸ்லீம் கடையில் தேநீர் வாங்கி அருந்திடுவார். அவர் ஒரு சமயம், 'என்ன சுப்புரத்தினம்! என் பெண் வேறு ஒரு தாழ்ந்த ஜாதியானோடு ரங்கூனுக்கு ஓடிப்போய் அங்கிருந்து எனக்கு ''அப்பா நான் இன்னாரோடு இங்கு சுகமாயிருக்கிறேன்; அவரைத்தான் நான் விரும்புகிறேன். மணம் செய்து கொள்ளப் போகிறேன்'' என்று எழுத வேண்டும்; அதைக் கேட்டு நான் ஆனந்தப்பட வேண்டும்'' என்றார். அவர் ஜாதி ஒழிப்பில் எவ்வளவு அக்கறை எடுத்துக் கொண்டார் என்பதற்கு இது நல்ல எடுத்துக் காட்டு.

அவரை மட்டக்கவி என்பதைக் கண்டித்து நான் கவிதா மண்டலத்தில் 'பாரதி உலககவி தானப்பா' என்று தீட்டினேன். அது எனது கவிதைகள் இரண்டாம் பகுதியில், வெளியிடப்பட்டிருக்கிறது. கண்டு கொள்க.

அவரது ஜாதி ஒழிப்புக் கொள்கை தலைசிறந்தது. குறிப்பிட்ட எவரும் கூறாத நேரத்தில் தைரியமாக எளிய தமிழில் சொன்னார். அதைப் பின்பற்றுவோமாக!

—சென்னை பச்சையப்பன் கல்லூரியில் 6.9.1949-ல் நடைபெற்ற விழாவில் தலைமை ஏற்று ஆற்றிய உரையிலிருந்து.

பேரறிஞர் அண்ணாவை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த மாலைமணி நாளேட்டில் 8.9.1949ல் வெளிவந்தது.

தொகுத்து அனுப்பியவர்
பொன். கு. கோதண்டபாணி

இந்தியா.

சனிக்கிழமைதோறும் வெளியாகும்.

விஜயா.

பிரதி தினம் வெளியாகும்

वन्देमातरम्

பாரதியார் நடத்திய ஏடுகளில் சில....

கர்மயோகி.


சக்ரவர்த்தினி

OURSELVES-A RETROSPECT

துணைவி செல்லம்மாளுடன் பாரதியார்.

கலைமகளுடைய அருளினைப் பெற்ற உண்மைக் கவிவாணர் பாடிய பாடல்கள் அனைத்தும் நலனிறைந்த நீர்மையனவேயாம். தமிழ்நாடு செய்த பெருந்தவப் பயனாக உதித்த சுப்பிரமண்ய பாரதியார் இளவயதிலே வாணியின் அநுக்கிரகத்தைப் பெற்றவராய் விழுமிய பொருளும் ஒழுகிய ஓசையுங் கொண்ட இன்றமிழ்ப் பாடல்கள் பலவற்றை உலகுக்கு அளித்தார். இவருடைய செய்யுட்களை ஆராய்ந்து கற்ற ஆன்றோர் பலர் இவரை உலகத்திலே சிறந்து விளங்குங் கவிவாணருள் ஒருவராக மதிக்கின்றனர். கவிச்சுவை மானிடர்க்கு இன்பத்தை விளைக்குங் கால வெல்லை வரையும் இனிமையும் எழிலும் ததும்பி விளங்கும் பாரதியார் பாடல்கள் போற்றப்படுவது நிச்சயம். துன்பத்திலே படிந்து வாழ்க்கையில் வெறுப்புற்றோர்க்குப் பாரதியாருடைய சுவை நிறைந்த இன்றமிழ்ச் செய்யுட்களைக் காட்டிலும் சிறந்த மருந்து வேறில்லையென்னலாம்.

தம்முடைய தேசத்தாருக்குத் தேசிய உணர்ச்சியை உண்டுபண்ணும் நோக்கமாக வீரமுரசம் போன்ற தேசியப் பாடல்களை மாத்திரமே பாரதியார் பாடினாரென அனேகர் கருதுகின்றார்கள். உண்மையை ஆராய்ந்து பார்க்குமிடத்து பாரதியார் எழுதிய தேசிய பாடல்கள் மொத்தச் செய்யுட்டொகையில் ஏழிலொன்றுகூட இருக்காது. பாரதியாரின் உண்மைப் பெருமையைக் காண விரும்புவோர் அவருடைய தேசியப் பாடல்களை மாத்திரம் வாசித்து மகிழ்ச்சியடைவதோடு நில்லாது அவரெழுதிய கண்ணன் பாட்டு, குயிற்பாட்டு க்காட்சி, வேதாந்தப் பாடல்கள், பாஞ்சாலி சபதம்-என்னும் இவற்றையும் கருதிப்படிக்க வேண்டும். தமிழ்மொழியறியாத மாந்தர் பொருட்டாகப் பாரதியாருடைய இன்னிசைப் பாடல்களைப் பிறமொழியிற் பெயர்த்தெழுதி உலகெங்கணும் பரப்புதல் வேண்டும்.

(ஆதாரம்: குமரி மலர், ஆகஸ்ட் 1981)

துன்பம் போக்கும் தூய கவிதை

— விபுலானந்த அடிகள்

அற்புதம் விளைக்கும் கவிதை

— சொ. முருகப்பா

பண்டைப் பழம் பெருமையோடு நம் புது வாழ்வை இணைக்க முயன்ற பெரியார் இருவருள் பாரதியார் ஒருவராவர். பாரதியார் ஓர் உண்மையான தமிழ்க்கவி. 'காரிகை கற்றுக் கவிபாடுவதினும் பேரிகை கொட்டிப் பிழைப்பது நன்று' என்னும் தமிழ்நாட்டுப் பழமொழியின் தத்துவத்தை நன்குணர்ந்தவர், பாரதியார். 'உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளியுண்டாகும்' என்பது இக் கவி தம் சொந்த அனுபவத்தால் கண்டறிந்த உண்மையேயாகும். 'தமிழர் மறந்தாலும் தமிழ் மறவாத இப் புலவர் பெருமான்' தமிழ்நாட்டு ரவீந்திரராவர். இவர் வங்க நாட்டுப் புலவர் திலகம் போல் ஆழ்ந்தகன்ற பாண்டித்யம் வாய்ந்தவரல்லர். எனினும், கவிதையழகில் இவரது அருட்கவிகள் ரவீந்திரரின் பாடல்களுக்குச் சிறிதும் இளைத்துக் காணப்படுவன அல்ல.' 'பண்டொரு நாள் கூற்றத்தின் வாய் வீழ்ந்த கும்பகருணனும்;தோற்றம் உனக்கே பெருந்துயில்தான் தந்தானோ' என்று ஆண்டாள் அருளியவண்ணம், பேருறக்கத்தில் கும்பகருணனையும் வென்று பேச்சு மூச்சின்றி அசையாது கிடந்த தமிழகத்தைத் தம் கவி முழக்கத்தால் தட்டியெழுப்பிய பெருமை நம் செந்தமிழ்க் கவிச்சிங்கமான பாரதிக்கே யுரியது. இத்தகைய கவிச்சிங்கத்தை இனிது போற்றாது, கொன்ற 'பெருமை'யும் தமிழ் நாட்டிற்கேயுரியதாகும். பாரதியார் பாடல்களில் சில, 'கல்லைப் பிசைந்து கனியாக்கி' தேசபக்தி வெள்ளத்தே அழுத்தும் ஆற்றல் வாய்ந்தன. சில வற்றியுலர்ந்த தோல்களுக்கும் என்புக்கூடுகளுக்கும் இன்னுயிர் அளிப்பன. இன்னும் சில வறண்டயர்ந்த இதயங்களுக்கு உயர்வெனும் அமுதம் ஊட்டி, பாலைவனமும் பசுஞ்சுடர்ச் சோலையாகப் பொலியும் வண்ணம் அற்புதம் விளைப்பன.

ஆதாரம்: "குமரன்" வார இதழ்
27-9-1928

கலங்கரை விளக்கம்

— புலவர் சி. துரைசாமி

பட்டுக்கே காஞ்சிஎனப் பாரே சொல்லும்
பங்காரு அன்னைக்குப் பால னாகிப்
பட்டம்பெற்றே கல்வியிலே உலகம் போற்றப்
பகுத்தறிவுப் பெரியாருக்குச் சீடராகித்
திட்டமிட்டுத் தமிழகத்தின் பெருமை ஓங்கத்
திக்கெட்டும் பரப்பிய அறிவி னாலே
சட்டசபை ஏறிமுதல் அமைச்ச ராகித்
தனித்தமிழர் நாட்டின்பெயர் சமைத்த அண்ணா!

முத்தமிழை வளர்த்தவனாம் முதல்மகனாய்த் திகழ்ந்தவனாம்
முடிவில்லாப் பெரும்புகழை முடிசூடிக் கொண்டவனாம்
சித்தமெல்லாம் ஈர்த்தவனாம் தெளிந்தறிவு படைத்தவனாம்
தெய்வீகம் இதுவென்றே மக்களைத்தான் தேற்றியவனாம்
உத்தமர்கள் வாழ்த்திடவே உள்ளமெல்லாம் நின்றவனாம்
உலகமெலாம் வழிகாட்டும் கலங்கரையின் விளக்கவனாம்
இத்தரையில் கலைகளிலே நல்லறிவு தந்தவனாம்
இன்பத்தமிழ் நாடுயரப் பாடுபட்ட அண்ணாவாம்!

கன்னித் தமிழண்ணா காதலின் கலை அண்ணா
கருணை வடிவண்ணா கரும்பினிய சொல் அண்ணா
பொன்னின் மணிஅண்ணா பொருள்சாரும் மறைஅண்ணா
போற்றும் செயல் அண்ணா புதுமையின் வடிவண்ணா
மின்னும் ஒளிஅண்ணா மிளிர்கின்ற கதிர்அண்ணா
மேன்மை வழிஅண்ணா மேதையின் வடிவண்ணா
தன்னேர் இலாஅண்ணா தவப்பயன் மகன் அண்ணா
தணியாப் புகழ்மீது தானின்று உலவண்ணா!



வளமான வாழ்வுக்கு வழிகாட்டும் வங்கி



வளமான வாழ்வ்க்கு வழிகாட்டும் வங்கி
தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி!
தாய்மையின் தனிப்பரிவுடன் உங்கள் சேமிப்பு
எங்களிடம் பூரிப்புடன் வளர்கிறது!

உங்களது அனைத்து சேமிப்புகளுக்கும் ¼%
கூடுதல் வட்டியும் கிடைக்கிறது.

மக்களுக்கேற்ற வங்கி—
தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி.

TNSC BANK

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிட்.,
233, என்.எஸ்.சி. போஸ் சாலை,
சென்னை-600 001

TNSC—வாழ்வுக்கு வளமூட்டும் வங்கி

TNSC·BANK/166

பாரத தேசம்

—மகாகவி பாரதியார்

பாரத தேசமென்று பெயர் சொல்லுவர்-மிடிப்
பயங்கொல்லு வார்துயர்ப் பகைவெல்லுவார்

வெள்ளிப் பனிமலையின் மீதுலவுவோம்—அடி
மேலைக் கடல்முழுதுங் கப்பல் விடுவோம்
பள்ளித் தலமனைத்துங் கோயில்செய்கு வோம்எங்கள்
பாரத தேசமென்று தோள்கொட்டுவோம்

சிங்களத் தீவினுக்கோர் பாலமமைப்போம்
சேதுவை மேடுறுத்தி வீதிசமைப்போம்
வங்கத்தி லோடிவரும் நீரின்மிகையால்
மையத்து நாடுகளிற் பயிர்செய்குவோம்

வெட்டுக் கனிகள்செய்து தங்கமுதலாம்
வேறு பலபொருளுங் குடைந்தெடுப்போம்
எட்டுத் திசைகளிலுஞ் சென்றிவைவிற்றே
எண்ணும் பொருளனைத்தும் கொண்டுவருவோம்

முத்துக் குளிப்பதொரு தென்கடலிலே
மொய்த்து வணிகர்பல நாட்டினர்வந்தே
நத்தி நமக்கினிய பொருள்கொணர்ந்து
நம்மருள் வேண்டுவது மேற்கரையிலே

சிந்து நதியின்மிசை நிலவினிலே
சேரநன் னாட்டிளம் பெண்களுடனே
சுந்தரத் தெலுங்கினிற் பாட்டிசைத்துத்
தோணிக ளோட்டிவிளை யாடிவருவோம்

கங்கை நதிப்புறத்துக் கோதுமைப்பண்டம்
காவிரி வெற்றிலைக்கு மாறுகொள்ளுவோம்
சிங்க மராட்டியர்தங் கவிதைகொண்டு
சேரத்துத் தந்தங்கள் பரிசளிப்போம்

காசி நகர்ப்புலவர் பேசுமுறைதான்
காஞ்சியிற் கேட்பதற்கோர் கருவிசெய்வோம்
ராசபுத் தானத்து வீரர்தமக்கு
நல்லியற் கன்னடத்துத் தங்கமளிப்போம்.

பட்டினி லாடையும் பஞ்சிலுடையும்
பண்ணி மலைகளென வீதிகுவிப்போம்
கட்டித் திரவியங்கள் கொண்டுவருவார்
காசினி வணிகருக் கவைகொடுப்போம்

ஆயுதம் செய்வோம்நல்ல காகிதம் செய்வோம்
ஆலைகள் வைப்போம்கல்விச் சாலைகள்வைப்போம்
ஓயுதல் செய்யோம்தலை சாயுதல்செய்யோம்
உண்மைகள் சொல்வோம்பல வண்மைகள் செய்வோம்

குடைகள் செய்வோம்உழு படைகள்செய்வோம்
கோணிகள் செய்வோம்இரும் பாணிகள்செய்வோம்
நடையும் பறப்புமுணர் வண்டிகள்செய்வோம்
ஞாலம் நடுங்கவரும் கப்பல்கள்செய்வோம்

மந்திரம் கற்போம்வினைத் தந்திரங்கற்போம்
வானை யளப்போம்கடல் மீனையளப்போம்
சந்திர மண்டலத்தியல் கண்டு தெளிவோம்
சந்தி தெருப்பெருக்கும் சாத்திரங்கற்போம்
காவியம் செய்வோம்நல்ல காடுவளர்ப்போம்
கலை வளர்ப்போம்கொல்ல ருலைவளர்ப்போம்
ஓவியம் செய்வோம்நல்ல ஊசிகள்செய்வோம்
உலகத் தொழிலனைத்து முவந்துசெய்வோம்

சாதி இரண்டொழிய வேறில்லையென்றே
தமிழ்மக்கள் சொல்லியசொல் அமிழ்தமென்போம்
நீதி நெறியினின்று பிறர்க்குதவும்
நேர்மையர் மேலவர்; கீழவர் மற்றோர்

அண்ணலின் கண்டனம்!



[பாரதியாரின் பாடல் நூல்களை 1928ல் அன்றைய சென்னை அரசாங்கம் பறிமுதல் செய்து தடையுத்தரவு பிறப்பித்த போது அண்ணல் காந்தியடிகள் தமது 'யங் இந்தியா' எனும் பத்திரிகையில் எழுதியதில் ஒரு பகுதியின் மொழி பெயர்ப்பு :]

நான் இந்த இதழின் பிறிதோரிடத்தில் காலஞ்சென்ற பாரதியார் பாடல்களின் ஆங்கில மொழிபெயர்ப்பின் முதற் பகுதியை வெளியிட்டிருக்கிறேன். சரியாகச் சொல்ல வேண்டுமானால் பர்மா அரசாங்கத்தின் உத்தரவின் மீது சென்னை அரசாங்கம் பாரதியின் பாடல்களைப் பறிமுதல் செய்துள்ளது. பர்மா அரசும் எந்த நீதிமன்றத்தின் உத்தரவின் மீதும் பறிமுதல் செய்ததாகத் தெரியவில்லை. தன் சொந்த நிருவாகப் பொறுப்பிலேயே இம்மாதிரி செய்துள்ளது. இந்தப் புகழ் பெற்ற கவிஞரின் பாடல் புத்தகங்கள் சென்ற முப்பது ஆண்டுகளாக மக்கள் புழக்கத்தில் இருந்து வந்திருக்கின்றன. சென்னை அரசாங்கத்தின கல்வி இலாகாவும் இக்கவிஞனின் பாடல்களைப் பள்ளி மாணவர்களின் பாடப் புத்தகங்களில் சேர்க்கத் தீவிரமாக ஆலோசித்து வந்திருக்கிறது என்பது இப்போது நீதி மன்றத்தின் முன்னுள்ள சாட்சியங்களிலிருந்து தெரிகிறது. இப்பாடல் புத்தகங்கள் இந்தியாவில் எங்கிருந்தாலும் பறிமுதல் செய்யப்பட வேண்டியவையாம். மாகாண அரசுகளுக்கு இவ்வளவு விரிவான அதிகாரம் இருக்கிறதென நான் கேள்விப்பட்டதுகூட இல்லை. நாம் வாழும் காலத்தின் தன்மை இது. எனினும் அரசின் செய்கை நாளடைவில் மக்களின் கவனத்தை சர்த்துவிட்டது. இந்தி பிரசாரக் காரியாலயத்தைச் சேர்ந்த ஸ்ரீஹரிஹர சர்மாவும், பதிப்பாளர்களும் காலஞ்சென்ற கவிஞரின் ஏழை மனைவியின் சார்பில் பொதுஜன விழிப்பை ஏற்படுத்தினர். இவ்விஷயம் சென்னைச் சட்டசபை வரை எட்டி அங்கு விவாதிக்கப்பட்டது. சட்ட விரோதமானது என்று மிகத் தெளிவாகத் தெரியப்படுத்திப் பறிமுதல் உத்தரவை ரத்து செய்யும்படி அரசாங்கத்துக்கு நீதி மன்றம் உத்தரவிடவேண்டுமென்று கோரி ஸ்ரீஹரிஹர சர்மா வழக்குத் தொடுத்தார். அதன் விளைவாக ஒரு சமாதானம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அரசு தன் பறிமுதல் உத்தரவை வாபஸ் பெற்று நூல்களைப் பதிப்பகத்தாருக்குத் திருப்பித்தர இருக்கிறது. கவிஞரின் ஏழை மனைவிக்கும் அரசு நஷ்ட ஈடு கொடுக்க இருக்கிறது. எனவே வழக்கு திரும்பப் பெறப்பட்டது.

சோவியத் நாட்டில் பாரதியார் விழா

மகாகவி பாரதியார் போன்ற பெருங்கவிஞர்கள் ஒரு போதும் சாவதில்லை. அவ்ருடைய போதனைகள் என்றும் நமக்குத் துணையிருப்பவை. எனவே, அவரும் நம்முடன் இருக்கிறார்.

மனிதன் சமநீதியுடன் வாழவேண்டும்-மனித உரிமைகள் காக்கப்பட வேண்டும் என்பதை உணர்த்திய மாபெருங் கவிஞர் பாரதியார். சோவியத் நாட்டுப் புரட்சியைப் பற்றி முதன் முதலில் பாடிய இந்தியக் கவிஞர் அவர்தான்.

பாரதியார் வாழ்ந்த காலத்தில் இதுபோன்ற மாபெரும் கூட்டத்தைச் சந்தித்திருக்க முடியாது. ஆனால், இன்று பெருந்திரளாகக் கூடி அவருக்கு அஞ்சலி செலுத்துகின்றோம்.

இந்த மகாகவியின் நூற்றாண்டு விழாவை சோவியத் நாடு மிகச் சிறப்புடன் கொண்டாடும். மகாகவி பாரதியாருக்கு என்ன செய்யவேண்டுமோ அதைச் செய்ய எங்கள் நாடு தயாராக இருக்கிறது.

[எட்டயபுரத்தில் நடைபெற்ற மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழாவில் ரஷ்ய மொழியில் எழுதப்பட்ட பாரதி நூல்களை மாண்புமிகு முதல்வரிடம் அளித்து சென்னையிலுள்ள சோவியத் நாட்டுத் துணைத் தூதுவர் திரு யூரி எஃப் ருனோவ் (YURI F. RUNOV) ஆற்றிய உரையிலிருந்து]

மகாகவியும் கப்பலோட்டிய தமிழரும்

என். நாகசாமி

இந்தியாவை ஆண்டுவந்த ஆங்கில அரசாங்கத்தார் அளித்த ஆறு வருஷக் கடுங்காவல் சிறைவாசத்தை அனுபவித்து விட்டு வெளியே வந்த தேசபக்தர் வ.உ. சிதம்பரனார் பாரதியாரைப் பார்க்கப் புதுவைக்கு ஓடோடி வந்தார்.

சிதம்பரனார் ரயிலைவிட்டுக் கீழே இறங்கி, ரயில் நிலையத்துக்கு வெளியே வந்து ஒரு வண்டிக்காரனை அழைத்து ''நான் பாரதியார் வீட்டுக்குப் போகவேண்டும்; உனக்கு அவர் வீடு சரிவரத் தெரியுமா ?'' என்று கேட்டார். வண்டிக்காரன் உடனே 'ஐயா அவர் வீடு எனக்குத் தெரியும்; அவரும் எனக்கு நன்றாய்த் தெரியும்; வண்டியில் ஏறிக்கொள்ளுங்கள், நான் உங்களை அவரிடம் பத்திரமாய்க் கொண்டுபோய்ச் சேர்த்து விடுகிறேன்' என்று வணக்கமாய்ச் சொன்னான். பிள்ளையும் அந்த வண்டியில் ஏறிக்கொண்டார். வண்டிக்காரன் அவரை ஏற்றிவந்து பாரதியார் வீட்டுக்கு முன்னால் வண்டியை நிறுத்திவிட்டு, வீட்டுக்குள்ளே வந்து 'சாமி உங்களைத் தேடி ஒரு ஐயா வெளியே வந்திருக்கிறார்; அவர் உங்களைக் கூப்பிடுகிறார்' என்று சொன்னான். குளிக்கப்போன பாரதியார் தெருவில் யார் வந்திருக்கிறது என்று போய்ப் பார்த்தார். பாரதியாரைக்கண்ட பிள்ளை வண்டியைவிட்டுக் கீழே இறங்கி அதிவேகமாய் வந்து பாரதியாரைக் கட்டி ஆலிங்கனம் செய்தார். பாரதியாருக்கு கண்களில் ஆனந்தக் கண்ணீர் ததும்பிற்று. பிள்ளையை பாரதியார் மகிழ்ச்சியுடன் இருகரங்களையும் பிடித்துக் கொண்டு மெத்தைக்கு அழைத்துச் சென்றார்.

பாரதியாரும் பிள்ளையும் சிறிது நேரம் அளவளாவிக் கொண்டிருந்தார்கள். அந்தச் சமயத்தில் நான் கீழேபோய் பிள்ளைக்கு நாஸ்தா தயார் செய்துகொண்டு வந்தேன். அவரும் பல்தேய்த்து, கைகால்கள் கழுவிக்கொண்டு திருநீறு நெற்றியில்பூசிக்கொண்டு சூரிய நமஸ்காரம் செய்தார். பிறகு அவர் நாஸ்தா புசித்தார். பாரதியாருக்கு 'இந்தியா' ஆபீஸ் போய் நாட்டுக்குச் சேவை செய்ய நேரமாய் விட்டது. ஆதலால் உடனே பிள்ளையை இளைப்பாற சொல்லிவிட்டு பாரதியார் நாட்டுத் தொண்டுக்குச் சென்றார். பிரயாணத்தில் தூக்கமில்லாததால் பத்திரிகைகளை, பாய்போல் விரித்து, பத்திரிகைகளையே கட்டாகக்கட்டித் தலையணையாக வைத்துக்கொண்டு, பாய்போல் விரித்த பத்திரிகைகளின் மேல் படுத்துக் கொண்டு அயர்ந்து தூங்கினார் பிள்ளை.

பன்னிரண்டு மணிக்கு மதியச் சாப்பாட்டுக்காக களைப்புடன் பாரதியார் வந்தார். அவர் வந்ததும் பிள்ளையிடம் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தார். கீழே ஒரு அறையில் எல்லாரும் ஒரே பந்தியாகச் சாப்பிட யாவும் தயார் செய்துவிட்டு, நான் மெத்தைக்குச் சென்று பிள்ளையையும், பாரதியாரையும் சாப்பிட அழைத்தேன்.

நான் அவர்களிருவரையும் அழைத்துக் கொண்டு கீழே சாப்பாட்டு அறைக்கு வந்தேன். ஒரு வரிசையில் பாரதியாரும் அவருடன் ஆபீசில் தொண்டு புரிந்த மூவரும் மற்றொரு வரிசையில் அதிதியாகிய பிள்ளையும் ஜாகையில் அன்று சமையல் செய்த மூவரும்சாப்பிட உட்கார்ந்தோம். நான் எல்லாருக்கும் சாப்பாடு பரிமாறி மீதியை மத்தியில் வைத்தேன். தேவையானதை எடுத்துப் போட்டுக் கொண்டு சாப்பிட வைத்துவிட்டு நானும் அவர்கள் கூடச் சாப்பிட உட்கார்ந்தேன். எல்லாரும் உரையாடிக் கொண்டு தேவையானதை எடுத்துச் சாப்பிட்டோம். 'சிறைவாசத்திலிருந்து வந்த பின் இன்றே நான் சுவையுடன் வயிறு நிறைய சந்தோஷமாய் சாப்பிட்ட நாளாகும்' என்று சொன்னார் பிள்ளை. பிறகு கைகளை அலம்பிக் கொண்டு அவரவர்கள் வேலைக்கு எல்லோரும் போய் விட்டோம். பிள்ளை மட்டும் பத்திரிகைகளைப் பார்த்துக் கொண்டு நேரத்தைச் செலவழித்தார்.

சாயங்காலம் ஆறு மணிக்கு பாரதியார் 'இந்தியா' ஆபீசிலிருந்து வேலையை முடித்துக் கொண்டு திரும்பி வந்து, பிள்ளையைக் கடலோரம் அழைத்துச் சென்றார். சிறிது நேரம் கடலோரம் உலாவி சுத்தமான குளிர்ந்த காற்றை உட்கொண்டுவிட்டு இருவரும் திரும்பி வந்தார்கள். சற்று நேரம்கழித்து எல்லாரும் மத்தியானம் போல்

உட்கார்ந்து இராச் சாப்பாட்டைச் சாப்பிட்டோம்.

அதன்பின் அன்று நல்ல நிலவாயிருந்ததினால் மெத்தைக் களத்தில் பத்திரிகைகளை விரித்து எல்லோரும் உட்கார்ந்தோம். 'நமது தாய்நாட்டுக்காக நான் சிறையில் பாடுபட்டதைச் சுருக்கமாய்ச் சொல்லுகிறேன் கேளுங்கள்' என்று பிள்ளை சொல்ல ஆரம்பித்தார். 'என் தேச சேவையை அடக்க வேண்டுமென்ற ராஜ நிந்தனை வழக்குக் கொண்டு வந்து ஆறு வருஷம் கடுங்காவல் தண்டனை எனக்கு ஆங்கில அரசாங்கம் கொடுத்தது. நான் சிறைவாசம் செய்தபொழுது கேழ்வரகு அரைத்தல், கருங்கல் உடைத்தல், எண்ணெய்ச் செக்கு இழுத்தல், போன்ற கடின வேலைகளையே செய்தேன். கடவுளை வேண்டிக் கொண்டு நம் நாட்டுக்காகவே இவ்வித கஷ்டமான வேலைகளையெல்லாம் செய்தேனென்ற எண்ணம் என் மனத்தில் அப்படியே ஊறிவிட்டது. கஷ்டமான வேலையை நான் செய்தபொழுது எனக்கு அது சிரமமாகவே தோன்றவில்லை. அவ்வித ஆழ்ந்த எண்ணத்துடன் நான் மனப்பூர்வமாய் என்னை அர்ப்பணம் செய்திருந்த நம் நாட்டின் பொருட்டே பாடுபட்டேன். நீங்களும் அவ்வித எண்ணத்துடன் உங்களை நாட்டுக்கு அர்ப்பணம் செய்துவிட்டுப் பாடுபட வேண்டும்'' என்று சொல்லி முடித்தார் பிள்ளை. அவர் சிறையில் பட்ட கஷ்டங்களை நாங்கள் மனம் உருகக் கேட்டு வருந்தினோம். பிறகு நாங்கள் எழுந்து போய் பேப்பர் படுக்கைகளை விரித்து, இறைவனை வணங்கி விட்டுத் தூங்கினோம்.

பிள்ளை மூன்று தினங்கள் எங்கள் ஜாகையில் தங்கினார். அதிகாலையில் பாரதியாருடன் உடற்பயிற்சி செய்தார் பிள்ளை. மூன்று தினங்களும் வெவ்வேறு சாப்பாட்டுப் பண்டங்களை மிகவும் ருசியாய் அவர் சாப்பிட்டார். எல்லாவற்றையும் நாங்களே செய்து கொண்டு. எங்கள் கால்களிலேயே நின்று கொண்டு, நாட்டுக்குப் பத்திரிகை மூலம் தொண்டு செய்து கொண்டு இருந்ததைக் கண்ட பிள்ளை எங்களை மனமார மெச்சினார்.

மூன்றாம் நாள் இரவு பிள்ளை தம் ஊருக்குப் புறப்பட்டார். எல்லோரும் ரயில்வே ஸ்டேஷனுக்குச் சென்று அவரை ரயிலில் அனுப்பினோம். பிள்ளை பாரதியாரை ஆலிங்கனம் செய்த பிறகு எங்களைப் பார்த்து ''எவ்வித கஷ்டத்தையும் பொருட்படுத்தாது நாட்டுக்கு உங்களை அர்ப்பணம் செய்து விட்டு சோர்வடையாது நாட்டுக்கே பாடுபடுங்கள், பாடுபடுங்கள்' என்று சொல் எல்லோரையும் வாழ்த்தினார், நாங்களும் அவரை நமஸ்கரித்து மகிழ்ச்சியுடன் அனுப்பினோம்.

[சென்னை சாரதி பிரசுரம் வெளியிட்டுள்ள "புதுவையில் தேச பக்தர்கள்" என்ற புத்தகத்திலிருந்து.]

இதயத்திற்கு இதமானது

இதயம்
நல்லெண்ணெய்

LEKHA/VVV/TAMIL

நலமான இதயம் வளமான வாழ்வு

குயிலின் எதிரே மயில்

புதுவை ஈசுவரன்கோயில் தெரு வீட்டின் மாடி.

முத்துச்சரமாய், அழகான எழுத்தில் - அடித்தல் திருத்தலின்றிக் கருத்தூற்று மலையூற்றாய்த் தம் கவிதையைப் படைக்கும் பாரதி, இப்பொழுது எழுத்தில் கருத்தூன்றாமல், அடிக்கடி தலை நிமிர்ந்து எங்கோ நோக்குவதும், தடங்கல்படுவதுமாய் இருக்கிறார்.

எதிரில் வந்து நிற்கும் இளைய தமிழாசிரியர் சுப்புரத்தினத்தைப் பார்த்தும், பேசாமல் இருக்கிறார்.

கூர் விழிகளில் ஏதோ சோர்வு!

சுப்புரத்தினம், எப்போதும் பாரதியை இப்படிக் கண்டதில்லை.

ஏதாவது பேச்சுக்கொடுத்துப் பார்க்கலாம் என்ற எண்ணத்தில்,

'அம்மா எங்கே?'

இவ்வாறு சுப்புரத்தினம் கேட்க, பாரதி எதிர்க் கேள்வியாக,

''அங்கே....கீழ் வீட்டில் இல்லையா?'' என்கிறார்.

விழிக்கிறார் சுப்புரத்தினம்.

'இங்கே வந்து பாரேன்,!' — இதைச் சொல்லும்போது, பாரதியின் சுட்டுவிரல் எதிர் மாடியைக் குறிப்பிடுகிறது.

அணிமணி பூண்ட பெண்மணி ஒருத்தி, மாடித் தளத்தின் முன்புறம் ஒயிலாய் நடந்து வந்து, மயிலாய்த் தோற்றமளித்துப்பின் திரும்பி, அங்கே உள்ள ஊஞ்சலில் உட்கார்ந்து உந்தி உந்தி ஆடுகின்றாள்.

ஊஞ்சல் ஆட்டத்தின்போது, அவளின் ஆடை அவ்வப்போது நிலைகுலைகின்றது.

''யார் தெரிகிறதா?''

பாரதியின் இந்தக் கேள்விக்கு ஆழ்ந்த பொருள் இருக்கும்!

எதிர்மாடியில் இப்போது குடி வந்திருப்பது யார்?..

ஆங்கிலத்துரைத்தனத்தின் துப்பறியும் துறை அதிகாரி அப்துல் கரீம்!

விடுமோ! என்பதுதான் பாரதியின் கவலை.

இந்தத் துப்பறியும் அதிகாரி பின்னிய சூழ்ச்சி வலைகள் ஒன்றா இரண்டா!

ஆஷ் துரையின் கொலைக்கும் புதுவை வாழ் பாரதியும் நண்பர்களுமே காரணம் என்று கட்டிவிட்டுச் சிறைக்கதவைத் திறந்து வைத்தான். ஏமாற்றம்!

—டாக்டர் கவிஞர் மன்னர் மன்னன்

பெத்தாச்சி என்பவரின் ஆசை நாயகியாக இருந்தவரைக்கடத்தி வந்து இங்கே குடியமர்த்தியிருக்கிறான்.

இதில் உள்நோக்கம் ஒன்று உண்டு.

பாரதியின் நடவடிக்கைகளை- வருவார் போவாரை - அருகிருந்தபடியே கண்காணிக்க ஒரு வழி.

வாய்ப்பிருந்தால் பாரதியைப் புதுவையின் எல்லைக்கு அப்பால் இட்டுச் சென்றுவிடத் திட்டமிட்ட புதுவழி!

இதற்கெல்லாம் இந்தப் பெண்மணி துணையாக இயங்க வேண்டும்.

குயிலை மடக்கிக் கூண்டிலிட்ட மயிலை விடத் தீர்மானித்திருக்கிறது இந்த முயல்.

தமது கவிதைப் பணி தடைப்பட்டுப்போமோ! கறைபட்டு

ஆஷ்துரைக்கு எழுதி எட்டயபுரத்து மன்னரை இடுக்கி, நெருக்கி, பாரதியின் மாமாவைப் புதுவைக்கு வரச் செய்தனர்.

மாமா, மன்னர் உங்களை அனுப்பி என்னை மடக்கச் சொன்னார் என்பது தெரியும் நீங்கள் வந்த வழியே திரும்பிச் செல்லுங்கள் என்று கூறிஅனுப்பினார் பாரதி.

இதற்கு முன்னால் ஏற்பட்ட நெருக்கடிகள் ஏராளம்.

'இந்தியா' இதழ் புதுவையிலிருந்து ஏனைய பகுதிக்குள் நுழையலாகாது என்ற ஆணை பிறந்தது.

புத்தகங்கள் அச்சிடப்படா வண்ணம், புல்லுருவித்தனம் செய்வித்தான் அப்துல் கரீம்... ஆள் நடமாட்டத்தைக் கவனிக்க எண்ணற்ற காவலர்கள் மாற்றுடையில் சுற்றி வந்தார்கள். எல்லோரும் ஆங்கில அரசின் காவல் துறையினர்.

உரிமைக்குரல் எழுப்பும் குயில் கூட்டத்தைத் தீர்த்துக் கட்ட முயல் கூட்டம் முயன்று முயன்று தோற்றது.

ஆங்கிலத் துரைத்தனம் அடிக்கடி வழிமுறைகளை மாற்றும். அதன்படி ஆடும் துப்பறியும் ஏவலர் கூட்டம்.

அப்படியொரு வஞ்சக நாடகத்தின் ஒரு காட்சியில் தான் இந்தப் பெண்மணி நடித்துக் கொண்டிருக்கிறாள்.

தெளிவாகிவிட்டது இளைய சுப்புரத்தினத்திற்கு.

பாரதி தயக்கமாகச் சொன்னார்; ''இழி செயல் இது. பிறர் அறியாவண்ணம் இதை முறியடிக்க வேண்டும்''

''விடியட்டும் பாருங்கள்.''

விடிவு தேடப் புறப்பட்டுச் சென்றார் சுப்புரத்தினம்.

மறுநாள் வரை காத்திருக்கவில்லை; மாலையில்—

சுப்புரத்தினம் தலைமையில் சூடுபறக்க இளைஞர் பட்டாளம் ஒன்று எதிர் வீட்டு மாடிக்குச் சென்றது.

''கேட்டிலிருந்து நாட்டை மீட்கப் பாட்டு எழுதியும், பாடுபட்டும் வருகிற பாரதியைச் சிறையில் மாட்ட நினைக்கும் கும்பலுடன் கூட்டுச் சேர்ந்திருப்பது நியாயமா?'' —கேட்டது நண்பர் குழு.

பாரதியைப் பற்றி - அவரின் பாரத நாட்டு விடுதலைப் பணியைப் பற்றித் தனக்குத் தெரியும் என்றாள். 'உள்நோக்கம் கொண்டு என்னை அழைத்து வந்தது இப்போதுதான் எனக்கும் புரிகிறது. நாளைக் காலையில் நான் வேறிடத்தில் இருப்பேன்' என்றாள் அந்தப் பெண்மணி.

ஆர்ப்பாட்டம் எதுவுமில்லை. அடிதடிக்கு இடமில்லை. இளைஞர் கூட்டு ஒரு வகையில் ஏமாற்றம் என்றாலும், இடர் இத்தனை எளிதாய் நீங்கிவிட்டதில் மகிழ்ச்சி. சுப்புரத்தினம் துள்ளிக் குதித்தார் மகிழ்ச்சியால்.

பாரதிக்கு அளவிலா மகிழ்ச்சி. ஏன், அதிர்ச்சி என்றும் சொல்லலாம்.

மறுநாள் இந்த வியப்பு இன்னும் விரிந்தது.

வ. வே. சு. அய்யரின் வீட்டில் பயங்கர ஆயுதங்கள் இருப்பதாகப் புரளி கிளப்பி. வீட்டைச் சோதனையிட அப்துல் கரீம் ஏற்பாடு செய்து வருவதாகத் தகவல் தந்தாள் அந்தப் பெண்மணி.

முயலின் முயற்சியை மயிலே தோற்கடித்தது!

கனற்பாட்டுப் புத்தகங்கள் கணக்கின்றி வரத் தொடங்கின. கண்காணிப்பில் சிறிய தளர்ச்சியும் தெரிந்தது.

இத்தனைக்கும் புதுவை இடம் கொடுக்கிறதே என்பதை எண்ணியெண்ணிப் புழுங்கியவர்கள், ஆங்கில அரசின் ஆணையை நிறைவேற்றும் அதிகார உச்சியிடம் முறையிட்டார்கள்.

இந்திய வைசிராய், புதுவை ஆளுநருக்கு ஒரு மடலை எழுதினான். அவன் ஆங்கில வெள்ளையன். இவன் பிரஞ்சு வெள்ளையன்.

'ஆங்கிலர் எதிர்ப்பு நெருப்பைப் புதுவையில் அடைக்கலம் பெற்றிருக்கும் சுப்பிரமணிய பாரதியும் மற்றோரும், தம் எழுச்சி எழுத்துக்களால் விசிறிவிடுகிறார்கள். அவை இனி வெளிவராமல் தடுக்க வேண்டும். அவர்களை எங்களிடம் ஒப்படைக்க வேண்டும்' என்று கோரினான் ஆங்கிலேயன்.

ஆங்கில நாட்டரசின் தலைமைக்கு ஏற்பட்ட எரிவு, பிரஞ்சு நாட்டரசின் தலைமைக்கு நகைப்பை மூட்டிற்றோ என்னவோ!

'எழுத்தாளனும், கவிஞனும் சிந்தனையாளனும் தம் கருத்தை வெளிப்படுத்துவதைத் தடுக்க எம் நாட்டில் சட்டம் எதுவுமில்லை.''

இப்படி மறுமொழி தீட்டிவிட்டது புதுவைப்பிரஞ்சு ஆட்சி.

இதன் பின்னரும் ஒருமுயற்சி நடந்தது. பாரதியும் அவரின் கூட்டத்தாரும் ஆங்கில ஆட்சியிடம் ஒப்படைக்கப்பட்டால் பிரான்சுடன் ஏனைய பகுதிகளின் ஆதிக்கம் பற்றி பிரிட்டிஷ் ஆட்சி இணக்கம் காட்டும் என்பதாகத் தேன்துளியைச் சிந்தியது.

இந்த மோசடியை எதிர்த்துப் புதுவை அரசில் ஆலோசனைப் பொறுப்பேற்றிருந்த பெருமக்களின் துணைவியார் குழுவே போர்க்கொடி தூக்கிற்று.

பெண்மைக்கு வெற்றி!

எழுத்தில் எரிதழலைப்பாய்ச்சி நாட்டிலெங்கும் எழுச்சிக்கனல் எழுப்பிய பாரதியை - அவரின் நண்பர்களைக் காப்பதில் கேடயமாக விளங்கிய இளையோர் அணியின் தளபதிதான் கனக-சுப்புரத்தினம்.

இது நினைவிருக்கிறதா?

பாரதியார் புதுவைக்கு வந்து சேர்ந்தபோது அவருக்கு வயது 26. அந்தப் பாட்டுக் குயில் தீங்குரல் எழுப்பிடத், தன் இளமையைத் துணையாக்கிய சுப்புரத்தினம் அப்போது 18 வயது நிரம்பிய காளை.

இந்தக் காளை ஒருவனின் கவிச்சுவையில் நெஞ்சம் பறிகொடுத்தார் பாரதி. கனக-சுப்புரத்தினம், பாரதிதாசன் ஆனது இப்படித்தான்.

பாரதியை நினைத்திட்டால்...!

நாமக்கல் கவிஞர் ராமலிங்கம் பிள்ளை

சுப்ரமண்ய பாரதியை நினைத்திட் டாலும்
சுதந்தரத்தின் ஆவேசம் சுருக்கென் றேறும்
இப்ரபஞ்சம் முழுதும்நமக் கினமாய் எண்ணும்
'இந்தியன்நான்' என்றிடும்நல் லிறுமாப் புண்டாம்!
எப்பெரிய காரியமும் எளிதாய்த் தோன்றும்
எல்லையற்ற உற்சாகம் எழுந்து பொங்கும்
ஒப்பரிய தமிழன்எனும் உவகை ஊறும்
உள்ளமெலாம் துள்ளியெழும் ஊக்கம் உண்டாம்!

அணையாத விளக்கு

பாவேந்தர் பாரதிதாசன்

பைந்த மிழ்த்தேர்ப் பாகன் அவனொரு
செந்தமிழ்த் தேனீ; சிந்துக்குத் தந்தை
குவிக்கும் கவிதைக் குயில்! இந்நாட்டினைக்
கவிழ்க்கும் பகையைக் கவிழ்க்கும் கவிமுரசு!
நீடு துயில்நீக்கப் பாடிவந்த நிலா
காடு கமழும் கற்பூரச் சொற்கோ!
கற்பனை ஊற்றாம் கதையின் புதையல்
திறம்பாட வந்த மறவன் புதிய
அறம்பாட வந்த அறிஞன்; நாட்டிற்
படரும் சாதிப் படைக்கு மருந்து;
மண்டும் மதங்கள் அண்டா நெருப்பவன்
அயலார் எதிர்ப்புக் கணையா விளக்கவன்
என்னென்று சொல்வேன் என்னென்று சொல்வேன்;

பாட்டுக்கோரு புலவன்

கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை

பாட்டுக்கொரு புலவன் பாரதியடா—அவன்
பாட்டைப் பண்ணோடொருவன் பாடினானடா
கேட்டுக் கிறுகிறுத்துப் போனேனேயடா—அந்தக்
கிறுக்கில் உளறுமொழி பொறுப்பாயோடா!

சொல்லுக்குச் சொல்லழகும் ஏறுமேயடா—கவி
துள்ளும் மறியைப்போலே துள்ளுமேயடா
கல்லும் கனிந்துகனி யாகுமேயடா—பசுக்
கன்றும்பால் அருந்திடாது கேட்குமேயடா.



குவளைக் கண்ணன் என்று அழைக்கப்பட்ட குவளைக் கிருஷ்ண மாச்சாரியார்.

பாரதி நூலை முதன்முதலில் பதிப்பித்தவரும் அவரால் தம்பி என்று அன்புடன் அழைக்கப்பட்டவருமான பரலி சு. நெல்லையப்பர்.



வ.வே.சு. ஐயர்

பாரதியாரின் சீடர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

மகாகவியின் நண்பர்கள்



நீலகண்ட பிரமச்சாரி

சுப்பிரமணிய சிவா.

பாரதியாரால் பூணூல் அணிவிக்கப்பட்ட ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த கனகலிங்கம்.

மண்டயம் சீனிவாசாச்சாரியார்.

நீ வாழ்க

ஆன்ற கவிஞர் அனைவோர்க்கும் முதன்முதலாய்த்
தோன்றுங் கவிதைச் சுடரொளியே! நீ வாழ்க!

பேசுந் தமிழிற் பெரும்பொருளைக் கூறிவிட்ட
வாசத் தமிழ்மலரே! வாரிதியே! நீவாழ்க!

தொட்டதெல்லாம் பொன்னாகத் துலங்கும் கவிக்கடலே
பட்டமரந் தழைக்கப் பாட்டெடுத்தோய்! நீ வாழ்க!

எங்கே தமிழ்என்று என்தமிழர் தேடுகையில்
இங்கே தமிழென் றெடுத்துவந்தோய்! நீ வாழ்க!

கருக்கிருட்டில் பாழ்குழியில் கால்பதிந்த செந்தமிழை
உருக்குமொளி மண்டபத்தில் உலவவிட்டோய்! நீ வாழ்க!

நெஞ்செலும்பு கூடாகி நிலைகுலைந்த மானிடரை
அஞ்சுதலை விட்டு அழைத்துவந்தோய்! நீ வாழ்க!

மூட்டறுந்து கால்முடங்கி மூக்கா லழுதவரைக்
கூட்டிவந்து வேல்கொடுத்த கொற்றவனே! நீ வாழ்க!

நாடுமொழி நாடாது நாடுவன கேடாகக்
கூடெடுத்தோர் மேனிக்குக் குருதிதந்தோய்! நீ வாழ்க!

இமயமலை மேற்றொடங்கி இளங்குமரி எல்லைவரை
தவழ்ந்துவரும் சந்திரனே! சாரதியே! நீ வாழ்க!

என்றுவரும் என்றே ஏங்கிநின்ற சுதந்தரத்தைக்
கண்டவன்போல் பாடிவைத்த கற்பனையே! நீ வாழ்க!

தாயின் மணிக்கொடியைத் தலைமேல் மிதக்கவிட்டுச்
சேயாய் அகங்குளிர்ந்த சித்தனே! நீ வாழ்க!

காலக் கடல்கடந்து கவிதையெனும் தோணியிலே
நீளவழி வந்தவனே! நித்திலமே! நீ வாழ்க!

பாரதத்தை வாழவைக்கப் பாட்டெழுதிப் பாட்டெழுதிப்
பூரதத்தில் ஏறிவிட்ட பொன்மகனே! நீ வாழ்க!

கவியரசர்
கண்ணதாசன்

தமிழ் மறவாப் பெரும்புலவர்

—நாவலர் சோமசுந்தர பாரதியார்

தமிழர் மறந்தாலும் தமிழ் மறவாத இப்புலவர் பெருமானின் பாக்கள் என்றும் இறவாது நின்று நிலவும். இவர் மூட்டிய தேச நேச நெருப்பு அவியாது வளர்ந்து, தமிழக முழுதும், இருளகற்றி, ஒளிரச்செய்து நிற்கும் ஜோதியாய் விட்டது.

புதுச் சிறு விளக்குகளைக் கண்டு அதிசயிக்கும் மாந்தர் செம்பரிதி யொளி கண்டு புகழ்வதில்லை. சிற்றுண்டிச் சுவைக்கு மகிழ்பவர் அமிர்தம் சிறந்த ருசியுடையதென்று அதிசயிப்பதில்லை. வெயிலிடுவது பரிதிக்கும் சுவையினால் உயர்வது அமிர்தத்துக்கும் இயற்கையாகி, அவைகள் அந்தந்தக் குணத்தில் ஒப்பற்றுயர்ந்திருப்பதால், ஒருவரும் அது கண்டு வியப்பதில்லை. சிறிது குறைந்த உயர்வளவில் மட்டே மாந்தர் கண்டு வியந்து, நயப்பது வழக்கம். சாமானியமாக, பரிசுக்குப் பாடாமலும், பணமுடையோர் குற்றங்களை மறைத்துப் பொய்யாகப் புகழாமலும் உண்மையில் வாழ்ந்த இவ்வுயர் புலவரை, அளப்பரிய அவர் தலைமைப் பெருமித மிகுதியால் மட்டுமே நமதுலகம் அறிய முடியாதாயிற்று போலும்.

பாரதியார் ஏனைப்புலவர் போலாது, புதுமுறைகளையே சிருட்டித்தார். தமிழ் மொழியில் பாக்களும் பாவினங்களும் மலிந்து கிடந்தும், அவைகளைவிட்டுப் புதுக்கருத்துக்களும், புதிய உணர்ச்சிகளும், மலிந்து விளங்க, அவைகளுக்குப் பொருத்தமான புதிய நடைகளையும் புதிய யாப்புகளையும் உண்டு பண்ணியிருக்கிறார். அநாயாசமாய், இயற்கையியல்புகளிலிருந்து, உருவகங்கள் உண்டுபண்ணிக் கையாளுவதும், எளிய உவமைகளால், பெரிய விஷயங்களை விளக்கத் துணிவும், தனித்திறலும், முன்னைய புலவரிடத்தில்லாத இவரது அரிய குணங்கள், வாய்மை, வீரம் பெண்களைப் பேணல், எளியாரை ஏற்றல், ஓரமில்லா ஒற்றுமையுணர்ச்சி, சுதந்தரம் முதலிய இவர் பாராட்டிப் பாடிய பல குணங்களும், இவர்க்கு இயல்பானவை. இவையெல்லாம் இவர் பாக்களில் இனிது காணலாம். இவரது "கண்ணன் பாட்"டையும், "பாஞ்சாலி சபத"த்தையும் படித்தவர்களுக்கு, இவரது குணங்களும் திறமையும் விசிதமாகும். இவை உள்ளபடி அறிய விரும்புவோர்க்கு இவர் கவிகளைவிடச் சிறந்த கருவி கிடையாது. ஆதலால், இவர் நூல்களைப் படித்து 'நடுநிலையில் சிந்திப்பார்க்கு உள்ளத்தனைய திவர் உயர்வு என்பது தெளிவாகும்.

கவிதைத் திறன்

—டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர்

சிறு பிராய முதற்கொண்டே இவருக்குச் செய்யுள் இயற்றும் பழக்கம் உண்டாயிற்று. அக்காலத்திலேயே தேசத்தின் நிலைமை இவருடைய மனத்திற் பதிந்தது. தெய்வத்தினிடத்திலும், தேசத்தினிடத்திலும், பாஷையினிடத்திலும் அன்பில்லாதவர்களைக்கண்டு இவர் மிக வருந்தினார். புதிய கருத்துக்களை மிக எளிய நடையில் அமைத்துப் பாடவேண்டுமென்ற உணர்ச்சி இவருக்கு வளர்ந்து கொண்டே வந்தது.

தேசத்தின பெருமையை யாவரும் அறிந்து பாராட்டும்படியான பாட்டுக்களைப் பாட வேண்டுமென்ற ஊக்கம் இவருக்கு நிரம்ப இருந்தது. அதனால் இவர் பாடிய பாட்டுக்கள் மிகவும் எளிய நடையில் அமைந்து படிப்பவர்களைத் தம்பால் சடுபடுத்துகின்றன. இவர் உண்மையான தேசபக்தியுடன் பாடிய பாட்டுக்களாதலின் அவை இவருக்கு அழியாத பெருமையை உண்டாக்குகின்றன.

பாரதி, தேசியப் பாட்டுக்களைப் பாடியதோடு வேறு பல துறைகளிலும் பாடியிருக்கிறார். இசைப் பாட்டுக்கள் பலவற்றைப் பாடியிருக்கிறார். சங்கீதத்திலும் பழக்கம் உடையவர்

பாரதியார் தாம் எவ்வளவு கஷ்டப்பட்டாலும், ஜனங்களுக்கு நன்மை உண்டாக வேண்டுமென்ற கொள்கையை யுடையவர். தைரியமுடையவர், இவருடைய புகழ் தமிழ் நாட்டின் புகழாகும்.

குடும்ப நலம் வீட்டைக் காக்கும், தொழில்வளம் நாட்டைக் காக்கும்

TAMIN

தமிழ்நாடு கனிம நிறுவனம்

சென்னை-600 005

(தமிழ்நாடு அரசு நிறுவனம்)

உலகப் புகழ் பெற்ற குன்னம், பைத்தூர் கரும்பாறைகளோடு செந்தாரப்பள்ளி சாம்பல் நிறப் பாறைகளையும் தமிழ்நாடு கனிம நிறுவனம் ஏற்றுமதி செய்கிறது.

தமிழ்நாடு கனிம நிறுவனத்திற்குச் சொந்தமான நூறு விழுக்காடு ஏற்றுமதி நோக்குடைய "டாமின் கிரானைட்ஸ்" 2-3 சென்டிமீட்டர் கனமுள்ள மெருகிட்ட கற்பலகைகள் மற்றும் சுவர்களில் பதிக்கவல்ல கற்பலகைகள் மற்றும் 10-15 சென்டிமீட்டர் கனமுள்ள மெருகிட்ட நினைவுக் கற்கள் ஆகியவற்றை ஏற்றுமதி செய்கிறது.

இந்நிறுவனம் உற்பத்தி செய்து விற்பனை செய்துவரும் இதர உயர்வகைக் கனிமங்கள்.

1.	இந்திய தர மணல்	:	ஐ.எஸ். 650/1966
2.	சுண்ணாம்புக் கல்	:	கெமிகல் கிரேடு சராசரியாக +91% $CaCO_3$
3.	வெங்கக் கல் (குவார்ட்ஸ்)	:	+99.8% SiO_2
4.	பெல்ட்ஸ்பார்	:	+12% K_2O
5.	ரோஸ் குவார்ட்ஸ்	:	ஆபரணங்கள் செய்யும் தரம் உடையது
6.	சிலிகா மணல்	:	+99.7% SiO_2
7.	வெப்பந்தாங்கும் களிமண்	:	ரிப்ராக்டரி கிரேடு 32.1% $A1_2O_3$
8.	வெர்மிகுலைட்	:	சராசரியாக 14 மடங்கு கனபரிமாணம் விரிவடையும் தன்மையுடையது
9.	விரிவுபடுத்தப்பட்ட வெர்மிகுலைட்	:	பொன் நிறமானது
10.	சுண்ணாம்புச் சிப்பி	:	சராசரியாக $CaCO_3$ + 94%

தேவைக்கு அணுக வேண்டிய முகவரி:
தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர்,
தமிழ்நாடு கனிம நிறுவனம்,
TWAD HOUSE, 31, காமராஜர் சாலை,
தபால் பெட்டி எண். 2961,
சேப்பாக்கம், சென்னை-600 005.
தொலைபேசி எண்: 848932
டெலக்ஸ்-41 6081TNML IN

தொழிற்சாலை:
டாமின் கிரானைட்ஸ்,
மணலி — பொன்னேரி ரோடு,
மணலி,
சென்னை-600 068

தந்தி - MINESALITE

DIPR/2623 1/363/86-27/SAS

பாரதியின் குரு

காங்கிரஸ் மாநாட்டில் கலந்துகொள் வதற்காக டம்டம் நகருக்குச் சென்ற பாரதி யார், சகோதரி நிவேதிதா தேவியைச் சந்தித் தார். அப்போது நிவேதிதா கேட்கிறார் பாரதி யைப்பார்த்து,

''திருமணம் ஆகிவிட்டதா?'' என்று.

''ஆகிவிட்டது'' —பாரதி கூறுகிறார்.

''அப்படியென்றால் ஏன் தனியே வந் தீர்கள்? மனைவியை ஏன் அழைத்துவர வில்லை?''

''பெண் வீட்டில்தான் இருக்கவேண்டும்'' —பாரதி கூறுகிறார்.

அது தவறு என்று சுட்டிக்காட்டுகிறார் நிவேதிதா தேவி. பெண்ணிடம் மகாசக்தி குடி கொண்டிருக்கிறாள் என்பதையும் எடுத் துரைக்கிறார். அப்போதுதான் பாரதிக்கு ஞானம் பிறக்கிறது. அவரைத் தனது குருவாக கருதுகிறார்.

தனது சுதேச கீதத்தின் முதல் பதிப்பை நிவேதிதா தேவிக்கு அர்ப்பணம் செய்துள்ள பாரதி - அந்த குருவின் சரண மலர்களில் இச் சிறு நூலைச் சமர்ப்பணம் செய்கிறேன் என்று குறிப்பிட்டுள்ளார்

பாரதியின் கையெழுத்து



நேசம் மறக்காத நெஞ்சம்

—தீரர் சத்தியமூர்த்தி

ஸ்ரீ பாரதியாரின் தமிழ்ப் பாடல்கள் எளிய நடையில் இயற்றப்பட்டு மனதை மிகவும் உருகச் செய்துவிடும் தன்மையுடை யன. ஆயினும் எவ்வளவு பிரபல்யம் அடைய வேண்டுமோ அந்த அளவுக்கு அவருடைய கவிகள் பிரசித்தியடையவில்லை. ஆனால், அக்கவிகளை எங்கு பாடிய போதிலும் ஒரு மாயசக்தி அதில் மறைந்து கிடத்தல் புலப் படாமற் போகாது. இதை நான் அனுபவத் திற் கண்டிருக்கிறேன.

* * *

ஒரு கவியின் மனத்தே உதயமாகி வெளிவரும் விஷயம் எப்போதுமே ஸாமான் யமா யிராது. ஸ்ரீ பாரதியார் போன்றவர் இங்கிலாந்தில் பிறந்திருந்தால் அரண்மனைக் கவியாக அவர் கொண்டாடப்பட்டிருப்பார். சுயேட்சை அடைந்த எந்த நாட்டிலாவது அவர் ஜனித்திருப்பாராகில், இவ்வளவு பால் யத்தில் மாண்டிருக்க மாட்டார். தேச பாஷைக்கும், தாம் பிறந்த ஜாதிக்கும் ஒரு மஹத்தான செல்வத்தைச் சேர்த்து வைத் திருப்பார்.

பங்காள ஸ்ரேஷ்டர் ரவீந்திர நாதருக்கு அவர் சமமானவர். நான் மிக படப் பேசுவ தாக நினைக்கக் கூடாது. ஸ்ரீபாரதியாரை அறிந்தவர்களுக்கே நான் சொல்வதன் உண்மை செம்மையாகப் புலப்படும். தமது ஆயுள் காலத்தில் பெரும் பாகத்தை அவர் வனவாசத் தில் செலவழித்து விட்டார். தமிழ்நாட்டில் பிறந்து, படாத கஷ்டங்கள் எல்லாம் பட்டு இளவயதிலேயே அவர் இறந்து போய்விட் டார். ஆயினும் கடுகளவாவது இத்தமிழ் நாட்டுக்குத் தேசாபிமானம் இருக்குமளவும், தமிழ் பாஷை இந்நாட்டை விட்டு மறையா திருக்கும் வரையிலும் ஸ்ரீபாரதியாரின் ஞாபகம் இருந்து கொண்டேதான் இருக்கும்.

பாரதி காட்டும் ஒருமைப்பாடு

புலவர் தமிழ்ப்பித்தன்

பாமரர்களும் பண்டிதர்களும் ஏககாலத்தில் போற்றிப் புகழும் வகையில் கவிதை யாத்தவர் பாரதியார். எளிய இனிய சொற்களால் பாமாலை கட்டியவர் அந்தப் பாவலர். சமுதாயத்தில் மறுமலர்ச்சி ஏற்பட வேண்டும் என்று துடித்து நின்ற அந்தக் கவிவாணர், இந்தியநாடு வெள்ளையரின் பிடியில் இருந்து விடுதலை பெறுவதற்குப் பாடுபட்டார்-பாட்டுக்குரல் கொடுத்தார். அதே நேரத்தில் இந்திய மக்கள் பலரிடையே அபூர்வமாகக் காணப்பட்ட-மிகப் பலரிடம்காணவே முடியாதிருந்த ஒற்றுமை உணர்வை-ஒருமைப் பாட்டு எண்ணத்தை வலியுறுத்திப் பாடினார். அவரது பாடல் ஒவ்வொன்றும் கோடி பெறும். அவற்றில் ஒரு சிலவற்றைப் பார்ப்போம்.

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்று வலியுறுத்திக் கூறிய வள்ளுவர் வாழ்ந்த நாட்டில்-எப்படியோ வருணாச்ரமம் நுழைந்து விட்டது. உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற வேற்றுமை-உருவாகிவிட்டது. அந்த வேற்றுமை-நாட்டு மக்களை வேறுபடுத்தி-நாட்டின் பண்பாட்டைக் கூறுபடுத்தி-இழிநிலையை ஏற்படுத்தியது. அந்தக் கொடுமையைப் பொறுத்துக் கொள்ள முடியாத பாரதி குரல் கொடுக்கிறார்.

ஜாதி மதங்களைப் பாரோம்-உயர்
ஜன்மமித் தேசத்தி லெய்தினராயின்
வேதிய ராயினு மொன்றே-அன்றி
வேறு குலத்தின ராயினு மொன்றே.

என்று முழங்குகிறார்.

எல்லாரு மோர்குலம் எல்லாரு மோரினம்
எல்லாரும் இந்திய மக்கள்
எல்லாரும் ஓர்நிறை எல்லாரும் ஓர்விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர்

என்றும் தெளிவாகக் குறிப்பிடுகிறார்.

பர்மா, இலங்கை ஆகிய நாடுகளுடன் இணைந்து இந்தியா என்னும் பெயர் பெற்ற பெரிய நாட்டை-சிறிய தீவிலிருந்து வந்து ஆங்கிலேயர்கள் ஆட்சிபுரிந்து அடிமைக் கட்டுக்குள் வைத்திருந்தார்கள் என்றால் அதற்குக் காரணம் இந்திய நாட்டு மக்களிடம் காணப்பட்ட ஒற்றுமையின்மைதான் என்பதைப் புரிந்து கொண்டு அனைவரையும் ஒற்றுமைப்படுத்தும் முயற்சியில் இறங்கினார் பாரதியார். ''சேர வாரும் ஜகத்தீரே'' என்று மனித சமுதாயம் முழுவதையும் அழைத்த வள்ளலார் போல, ஒருமைப்பாட்டுக் குரல் கொடுக்கிறார் பாரதியார்.

''ஒன்றுபட் டாலுண்டு வாழ்வு-நம்மில்
ஒற்றுமை நீங்கி லனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்-இந்த
ஞானம்வந் தாற்பின் நமக்கெது வேண்டும்?''

என்று கேட்டு-ஒருமைப்பாட்டு உணர்வுதான் பெரும்பேறு என்பதை வலியுறுத்துகிறார்

சுண்டைக்காய் சமஸ்தானங்களாக-சின்னஞ்சிறு அரசுகளாகப் பிரிந்து நின்று பேதத்தையேற்படுத்திக் கொண்டிருந்த மாநிலங்களுக்குள்ளே ஒற்றுமை உணர்வு-ஒருமைப் பாட்டு எண்ணம் உருவாகவேண்டும் என்பதை அழகான ஒரு பாடலில் - காட்சி காட்சியாக வருணிக்கிறார்.

'வெள்ளிப் பனி மலையாம் இமயத்தின் மீது உலாவுவோம், மேலைக் கடலில் முத்தெடுப்போம், சிங்களத் தீவுக்குப் பாலம் அமைப்போம், சேதுவை மேடாக்கி வீதி போடுவோம், வங்கத்தில் வரும் நீரைக் கொண்டு மையத்து மாநிலங்களில் பயிர் செய்வோம்''. இப்படி எல்லாம் சொல்லிவிட்டு தமது காவியத்தின் மூலமாக ஓவியத்தைத் தீட்டிக் காட்டுகிறார் பாரதி.

''சிந்துநதியின் மிசை நிலவினிலே
சேரநன் னாட்டிளம் பெண்களுடனே
சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத்து
தோணிகளோட்டிவிளை யாடிவருவோம்

கங்கை நதிப்புறத்துக் கோதுமைப் பண்டம்
காவிரியின் வெற்றிலைக்கு மாறு கொள்வோம்
சிங்க மராட்டியர்தங் கவிதைகொண்டு
சேரத்துத் தந்தங்கள் பரிசளிப்போம்

காசி நகர்ப்புலவர் பேசுமுறைதான்
காஞ்சியில் கேட்பதற்கோர் கருவிசெய்வோம்
ராசபுத் தானத்து வீரர்தமக்கு
நல்லியற் கன்னடத்துத் தங்கமளிப்போம்

—இந்தியாவில் உள்ள ஒவ்வொரு மாநிலமும் பிறமாநிலத்துடன் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்னும் உணர்வை இந்தக் கவிதைக் கோலத்தின் வாயிலாக பாரதியார் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

இந்தியாவில் பலமொழிகள் பேசும் மாநிலங்கள் உள்ளன; பல்வேறு உணவுமுறைகள் கொண்ட மாநிலங்களும் உள்ளன. ஆனாலும் அவற்றின் ஊடே ஒருமைப்பாடு என்ற உணர்வு நூல்போல்-சரம்போல் காட்சி தருகிறது. பல்வேறு மொழிகள் பேசுகின்ற, பல்வேறு கலாச்சாரம் கொண்ட மக்கள் சேர்ந்து சோவியத் யூனியனை உருவாக்கவில்லையா? அதைப்போல-ஒரிசா என்றாலும்-கேரளம் என்றாலும்-கருநாடகம் - என்றாலும்-மராட்டியம் என்றாலும் தமிழகம் என்றாலும் அனைத்தும் இந்தியத் திருநாட்டின் அங்கங்கள் என்பதையும் ஒவ்வொரு மாநிலத்திலும் ஒவ்வொரு வகையான மொழி உலவி வந்தாலும் அவற்றின் சிந்தனை ஒரே மாதிரியாகத்தான் இருக்கும்-இருக்க வேண்டும் என்பதையும் பாரதி அழுத்தமாகக் கூறுகிறார்.

முப்பது கோடி முகமுடை யாளுயிர்
மொய்ம்புற வொன்றுடையாள்-இவள்
செப்பு மொழிபதி னெட்டுடை யாள்எனிற்
சிந்தனை யொன்றுடையாள்

இந்திய நாட்டின் முப்பது கோடி மக்களும் (பாரதியார் வாழ்ந்த காலத்தில்) ஒற்றுமையுடனும் ஒருமைப்பாட்டுடனும் வாழ்ந்து-வேற்று நாட்டவர்க்கு வியப்பை நல்கவேண்டும் என்று விரும்பிய பாரதி,

முப்பதுகோடி ஜனங்களின் சங்கம்
முழுமைக் கும்பொது உடைமை
ஒப்பில் லாத சமுதாயம்
உலகத் துக்கொரு புதுமை

எனக் குறிப்பிடுகிறார்.



'ஊருக்கு நல்லது சொல்வேன். எனக்கு உண்மை தெரிந்து சொல்வேன்' என்று தொடங்கும் பாரதி ஒரு பூனையைக் கொண்டு ஒருமைப்பாட்டு உணர்வை மிக எளிதாக எடுத்துக் காட்டுகிறார்:

வெள்ளை நிறத்தொரு பூனை-எங்கள்
வீட்டில் வளருது கண்டீர்
பிள்ளைகள் பெற்றதப் பூனை-அவை
பேருக் கொருநிற மாகும்.

எந்த நிறமிருந் தாலும்-அவை
யாவும் ஒரேதர மன்றோ
இந்த நிறம்சிறி தென்றும்-இஃது
ஏற்றமென் றுஞ்சொல்ல லாமோ

வண்ணங்கள் வேற்றுமைப் பட்டால்
—அதில்
மானிடர் வேற்றுமை யில்லை
எண்ணங்கள் செய்கைகள் எல்லாம்-
இங்கு
யாவர்க்கு மொன்றெனல் காணீர்

என்று குறிப்பிடுவதன் வாயிலாக-மனித இனத்திடம் ஒருமைப்பாட்டு உணர்வு தவழ வேண்டும் என்பதை அறிவுறுத்துகிறார்.

அடுத்து, இதே பாடலில்,

அன்பென்று கொட்டுமுரசே-மக்கள்
அத்தனை பேரும் நிகராம்.
இன்பங்கள் யாவும் பெருகும்-இங்கு
யாவரும் ஒன்றென்று கொண்டால்

என்று குறிப்பிடும் பாரதியார், இறுதியில்,

ஒன்றென்று கொட்டு முரசே-அன்பில்
ஓங்கென்று கொட்டு முரசே
நன்றென்று கொட்டு முரசே-இந்த
நானில மாந்தருக் கெல்லாம்

என்று முடிக்கிறார்.

பாரதி-தமிழகத்தில் நெல்லை மாவட்டத்தில் ஒரு சிற்றூரான எட்டையபுரத்தில் தோன்றியவர் என்றாலும் அவரது உணர்வு சிற்றூராகக் காட்சி தரவில்லை, அது துணைக் கண்டமாகத் திகழ்ந்திருக்கிறது; அவரது இதயம் எந்நாளிலும் ஒருமைப்பாடு என்னும் உயர்கொள்கையை நேசித்திருக்கிறது என்பது தெளிவாகிறது. அதன் எதிரொலிதான் அவரது பாடல்களில் எல்லாம் காட்சி தருகின்றது.

எனவே பாரதியின் பாடல் ஒருமைப்பாட்டுப் பயிரை வளர்க்க உதவும் உன்னதமான உரம்; அவரது சிந்தனை ஒருமைப்பாட்டு உணர்வை ஓங்கச் செய்யும் தென்றல் காற்று; அவரது செயல், ஒருமைப்பாட்டை உலகுக்கு உணர்த்தப் பயன்படும் ஒளி வெள்ளம்!

பத்திரிகைப் பணிகள்

பாரதியார் 'தமிழ்ப் பத்திரிகை உலகின் தந்தை' எனப் போற்றப்படும் திரு ஸ்ரீ. சுப்பிரமண்ய ஐயரின் 'சுதேசமித்திரன்' இதழில் 1904-ம் வருடம் துணையாசிரியராகச் சேர்ந்தார். இப்பத்திரிகையில் பணியாற்றிக் கொண்டே, 1905-ம் வருடம் ஆகஸ்ட் முதல் 1906 ஆகஸ்ட் வரை 'சக்ரவர்த்தினி' என்ற மாதப் பத்திரிகையின் ஆசிரியர் பொறுப்பையும் வகிக்கிறார்.

இதன்பின், 1906 ஏப்ரலில் உதயமான ''இந்தியா'' வாரப்பத்திரிகையில் பெயர் போடாத ஆசிரியராகத் தொழிற்படுகிறார். ''இந்தியா'' பத்திரிகையின் நோக்கங்களையும் நடைமுறைகளையும் கொண்ட பத்திரிகையாக ஆங்கிலத்தில் வெளிவந்த Bala Bharata' என்னும் பத்திரிகையின் ஆசிரியர் பதவியை அணி செய்கிறார் பாரதி.

அரசியல் சூழ்நிலை காரணமாக, 1908 செப்டம்பரில் புதுச்சேரி சென்று வனவாசம் புரிகிறார். மீண்டும், அதே ஆண்டு அக்டோபர் மாத மத்தியிலிருந்து 'இந்தியா' வெளிப்படுகிறது. தம்முடைய நெஞ்சத்து எழும் உணர்ச்சிகளை—அரசியல், சமூக, ஆன்மீகக் கொள்கைகளை; வெளிப்படுத்த ஒரு பத்திரிகை மட்டும் போதாது எனக் கருதிய பாரதியார் 1909-1910 ஆகிய ஆண்டுகளின் கால கட்டங்களில் ''கர்மயோகி'' 'தர்மம்' 'சூர்யோதயம்' 'விஜயா' போன்ற இதழ்களிலும் நிறைய எழுதுகிறார். இதில் வேடிக்கை என்னவென்றால் ஒரே சமயத்தில் அனைத்து பத்திரிகைகளும் மக்களின் செல்வாக்கைப் பெற்றுவிட்டன. இதனால், மேற்கண்ட பத்திரிகைகளையெலாம் அரசு பறிமுதல் செய்து விடுகின்றது; அல்லது தடைசெய்து விடுகின்றது.

1913-1915ம் ஆண்டுகளிலேதான் தியாகி சுப்ரமண்ய சிவா அவர்களின் 'ஞானபாநு' மாதப் பத்திரிகையில் கவிதைகள் கதைகள், கட்டுரைகள், வேதாந்த விஷயங்கள் என்றிப்படி எழுதி வந்தார்.

1914-1915 ஆகிய கால கட்டங்களில் சுதேசமித்திரன், ஆங்கிலப் பத்திரிகைகளான New India, Commonwealth, Arya Hindu ஆகியவற்றில் பல்வேறு பிரச்னைகள் குறித்து எழுதினார். 1920 நவம்பர் 15-ந் தேதி முதற் கொண்டு, 'சுதேசமித்திரன்' பத்திரிகைக்கே பணியாற்ற வந்து, இறக்கும் வரையிலும் எழுதிக்கொண்டே இருந்தார்.

9.11.1919

காரைக்குடி இந்து மதாபிமான சங்கத்தில் கறுப்பன் செட்டியார், ராய சொக்கலிங்கம், பாரதியார், சொ. முருகப்பா, வி. நாராயணன் செட்டியார், மு. நடராஜன் (நிற்பவர்).

பாரதி நூல் அறுபது

இன்று நாம் பெரிய பெரிய தொகுதிகளாகக் காணும் மகாகவி பாரதியின் படைப்பிலக்கியங்கள் அதாவது கவிதைகளாகட்டும் - கட்டுரைகளாகட்டும் - கதைகளாகட்டும்-எவையானாலும், அவை பல்வேறு கால கட்டங்களில், பல்வேறு தலைப்புக்களில் எழுதப்பட்டு, சிறு சிறு நூல்களாகவே தான் வெளிவந்தன.

மகாகவி பாரதி, தாம் உயிரோடிருந்த காலத்திலேயே ஒரு சில நூல்களைப் பதிப்பித்தார்; ஒரு சில கவிதைப் படைப்புக்களைத் தம்மால் அன்புடன் 'தம்பி' என்று அழைக்கப்பட்ட திரு பரலி.சு. நெல்லையப்பர் அவர்களைக் கொண்டு வெளியிடச் செய்தார். ''சுதேசமித்திரன்'' அலுவலகப் புத்தகசாலையும் ஒரு சில நூல்களை வெளியிட்டது.

பாரதி எழுதிக் குவித்தவையோ ஏராளம்; ஆனால் நூல்வடிவம் பெற்றவையோ மிகக் குறைந்த அளவிலேயே இருந்தன. தொடர்ந்து வெளியாகாமல், எப்போதோ அத்தி பூத்தாற்போலவே வெளியாயின. இப்படி வெளிவந்தவை எண்ணிக்கையில் மிகக் குறைவே.

பாரதி, தம் ஆயுட்காலத்திலேயே தம் படைப்புக்களை எல்லாம் நூல் வடிவில் மிக அழகிய முறையில்-மேனாட்டு நூல்களுக்கு இணையாக-அழகழகான படங்களுடன்அச்சிட வேண்டுமென ஆசைப்பட்டார். தாம் திட்டமிட்டபடி நூல்களை அச்சிடப் போதிய மூலதனம் கையில் இல்லாத காரணத்தால், பாரதி தன் நண்பர்களுக்கும் நன்கு அறிமுகமானவர்களுக்கும் தம் வெளியீட்டுத் திட்டத்தை விளக்கி, சுற்றறிக்கை தயாரித்து அனுப்பி, பண உதவி கோரியிருந்தார். இதனால், எந்தவிதப் பலனும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. என்றாலும் பாரதி மனம் சோர்ந்துவிடாமல், தொடர்ந்து தமது நூல்களை வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டார்.

இரண்டாம் முறையாகச் ''சுதேசமித்திர''னில் பணியாற்ற அழைப்பு வந்ததும், அதனை மனமார ஏற்று, கடையத்திலிருந்து சென்னை சேர்ந்ததும் சென்னை தமிழ் வளர்ப்புப் பண்ணை என்ற நிறுவனத்தின் பெயரால் ஒரு விளம்பரத்தை வெளியிடச் செய்கிறார். ''தமிழ் வளர்ப்புக்கு-ஒரு வேண்டுகோள்'' என்ற தலைப்புடன் வெளியான அந்த விளம்பர அறிக்கையில் மகாகவி பாரதியின் பெருமை 'பூமண்டலம் நிறைந்த கீர்த்தி'யாகப் புகழப்பட்டிருந்தது. இந்த வேண்டுகோள் முயற்சியும் தகுந்த பலனை அளித்ததாகத் தெரியவில்லை.

உலகைத் தம் பாட்டுத் திறத்தாலே உய்விக்கப் பாடுபட்ட மகாகவி பாரதி தம் புத்தக வெளியீட்டு ஆசைக்கனவு நிறைவேறாத ஒரு நிலையிலேயே, 1921 செப்டம்பர் 11ந் தேதி நள்ளிரவில், காலமானார்.

மகாகவி பாரதி மரணத்தைக் கடந்ததும், தீரர் சத்திய மூர்த்தி அவர்கள் விடுத்த இரங்கற் செய்தியில் பாரதி நூல்கள் வெளியிடப் பட வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தியிருந்தார். இதையடுத்து, பாரதியின் நண்பர்களில் ஒரு சிலர் கூடி, பாரதி நூல்கள் வெளியிடுவதற்கென ஒரு குழுவையும் ஏற்படுத்தினார்கள். அதன் விளைவாகப் பாரதியின் மனைவி செல்லம்மாளும் அப்பாதுரையும் சென்னையில் 1921ஆம் ஆண்டு இறுதியில் பாரதி ஆச்ரமம் என்ற புத்தக நிலையத்தை நிறுவினார்கள்.

இந்த பாரதி ஆச்ரமம் மகாகவியின் பன்னிரண்டு நூல்களை வெளியிடுவதெனத் திட்டமிட்டு முதலில்-அதாவது 1922ல் சுதேச கீதங்கள் என்ற தலைப்பில் இரு தொகுதிகளை வெளியிட்டது. மூன்றாம் தொகுதி-குயில்பாட்டு-கண்ணன்பாட்டு-பாரதி அறுபத்தாறு-என்ற நூலை 1923ல், ஒரு சில நண்பர்களின் விருப்பப்படி பரலி.சு. நெல்லையப்பர் உள்ளிட்ட ஒரு பஞ்சாயத்தார். வெளியிட்டனர். எதிர்பார்த்த அளவு நூல்களின் விற்பனை உற்சாகமளிக்கும் வகையில் அமையாத காரணத்தால், நூல் பதிப்புப் பணிகள் ஸ்தம்பித்தன. மேற்கொண்டு புதிய நூல்கள் எதுவும் வெளியாகவில்லை. பாரதி ஆச்ரமும் தொடர்ந்து தொழிற்படவில்லை.

இதன் பின்னர், 1924ல் பாரதி பிரசுராலயம் தோன்றியது. இந்தப் பிரசுராலயம்தான் முறையாகத் திட்டமிட்டு, மகாகவியின் நூல்களை வெளியிட்டது. 1949ம் ஆண்டு வரை அதாவது பாரதி நூல்களின் பதிப்புரிமை அரசுடைமையாகும் வரை-பாரதி பிரசுராலயம் பல நூல்களைப் பதிப்பித்தது. பாரதி பிரசுராலயம் தோன்றியில்லையானால், மகாகவி பாரதியார் படைப்பிலக்கியங்கள் நமக்குக் கிடைத்திரா என்றே சொல்லி விடலாம். ஆக, பழுதடைந்திருந்த கையெழுத்துப் பிரதிகளிலிருந்தும், கைபட்டால் சேதமடையக் கூடிய நிலையிலிருந்த பத்திரிகை ஏடுகளிலிருந்தும் பாரதி எழுத்துக்களைத் தேடிப்பிடித்துத் தமிழக மக்களுக்கு வழங்கிய பெருமை பாரதி பிரசுராலயத்திற்கே தனி உரிமை.

பிரசுராலயத்தின் நிறுவனர்களான திரு சி.விசுவநாத ஐயர் (பாரதியின் இளைய சகோதரர்), ஹரிஹர சர்மா, நடராஜன்- ஆகியோர் நமது நன்றிக்கும் பாராட்டுக்கும் உரியவர்கள்.

பாரதியின் சகோதரர் திரு சி.விசுவநாத ஐயர் அவர்கள் தான் பாரதியின் ஆங்கில எழுத்துக்களைத் தேடிப் பதிப்பித்தார். அந்தக் காலத்தில் அதாவது 1914- 1915 ஆகிய கால கட்டங்களில் சென்னையிலிருந்து வெளியான 'New India', 'common weal' போன்ற ஆங்கிலப் பத்திரிகைகளில், இருந்த பாரதி எழுத்துக்களையும், பாண்டிச்சேரியிலிருந்து வெளிவந்த Arya என்ற பத்திரிகையில் இருந்து கட்டுரைகளையும், பாடல்களையும் சேகரித்து 1937-ல் அவற்றை நூல் வடிவில் கொணர்ந்தார். பெருமதிப்பிற்குரிய இந்தப் பெரியவர்தான் அண்மையில் தம்மிடமிருந்த் பாரதிச் செல்வங்களையெல்லாம் தொல்பொருள் துறையினரிடம் கொடையாக அளித்தார். முன்னம் நாட்டுடைமையாக்கப் பட்டபோதும், தம் வசம் இருந்த பாரதி கையெழுத்துப் பிரதிகளையெலாம் அரசினரிடம் ஒப்படைத்தார். இச் செல்வங்கள் இன்றும் சென்னை அருங்காட்சியகத்தில் பாதுகாப்பாக உள்ளன.

பாரதி நூல்களின் பதிப்புரிமையைப் பெரியவர் விசுவநாத ஐயரிடமிருந்துதான் தமிழக அரசு பெற்றது. நூல்களின் பதிப்புரிமையைப் பெற்ற தமிழக அரசு 1953 -1963 ஆகிய கால கட்டங்களில் கவிதைத் தொகுதியையும், வசனத் தொகுதியையும், கதைத் தொகுதியையும், சமூக அரசியல் கட்டுரைத் தொகுதிகளையும் வெளியிட்டது. இதனிடையில், பாரதியன்பர்களில் ஒருசிலர், அதுவரை அச்சில் வராத பாரதி எழுத்துக்களைத் தேடிப் பிடித்து, நூல் வடிவாக்கியுள்ளனர். இம்மாதிரியான முயற்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. பாரதியின் எழுத்துக்கள் நூல் வடிவம் பெற்றவையே இங்கு ஒருங்கிணைக்கப் பட்டியலாகத் தரப்பெற்றுள்ளன. தமிழ்மொழிக்குப் பாரதி அளித்த கொடைகள் இவை எனலாம்.

பாரதியின் இளவல் விசுவநாத ஐயர்

எண்	புத்தகத்தின்பெயர்	பதிப்பாளர்(அ) பதிப்பாசிரியர்	முதற் பதிப்பு வெளியிடப்பட்ட ஆண்டு
1	ஸ்வதேச கீதங்கள்- முதற்பாகம்	பாரதியார்	1908
2	புதிய கட்சியின் கொள்கைகள் (திலகரின் பிரசங்கங்கள் -மொழி பெயர்ப்பு)	பாரதியார்	1908
3	எங்கள் காங்கிரஸ் யாத்திரை	பாரதியார்	1908
4	ஜன்மபூமி (ஸ்வதேசகீதங்கள் 2.ம் பாகம்)	பாரதியார்	1909
5	மாதாவாசகம்	பாரதியார்	1910
6	ஞானரதம்	பாரதியார்	1910
7	பாஞ்சாலி சபதம் (முதற் பாகம்)	பாரதியார்	1912
8	மாதா மணிவாசகம்	தென்னாப்பிரிக்காவில் வெளியீடு	1914
9	புதிய ஆத்திசூடி	பாரதியார்	1914
10	(பொன்வால்நரி) (The Fox with Golden Tail)	பாரதியார்	1914
11	கண்ணன் பாட்டு	பரலி. சு. நெல்லையப்பர்	1917
12	நாட்டுப்பாட்டு	,,	1917
13	பாப்பாப் பாட்டு	,,	1917
14	முரசு	,,	1917
15	மகாகவி சர் ரவீந்திரநாத தாகூர் அருளிய பஞ்ச வியாசங்கள்	சுதேசமித்திரன் புத்தகசாலை	1918
16	பாரத ஜனசபை-முதற்பாகம் (காங்கிரஸ் சரித்திரம்- மொழிபெயர்ப்பு)	,,	1919
17	பாரத ஜனசபை-இரண்டாம் பாகம்	,,	1920
18	கதாமாலிகா	,,	1920
19	சுதேச கீதங்கள்-முதற்பாகம்	பாரதி ஆச்ரமம்	1922
20	சுதேசகீதங்கள்-இரண்டாம் பாகம்	,,	1922

21	குயில்பாட்டு - கண்ணன் பாட்டு-பாரதி அறுபத்தாறு	பாரதி பிரசுராலயம்	1923
22	பாஞ்சாலி சபதம் -இருபாகங்களும் இணைந்தது.	,,	1924
23	பகவத் கீதை முன்னுரை	,,	1924—25
24	பகவத் கீதை உரைவிளக்கம்	,,	1924—25
25	சுதேச கீத சங்கிரஹம்	,,	1925
26	சந்திரிகையின் கதை	,,	1925—26
27	தராசு	பாரதி பிரசுராலயம்	1928
28	நவதந்திரக் கதைகள்	,,	1928
29	வேதரிஷிகளின் கவிதை	,,	1928
30	பதஞ்சலியோக ஸூத்ரம்	,,	1928
31	விநாயகர் நான்மணிமாலை	,,	1929
32	தேசிய கீதங்கள்	,,	1929
33	தோத்திரப் பாடல்கள்	,,	1930
34	வேதாந்தப் பாடல்கள்	,,	1930
35	காட்சி	,,	1930
36	சித்தக் கடல்	,,	1930
37	பாரதிநூல்கள்-கட்டுரைகள் 1. தத்துவம்	,,	1935
38	2. மாதர்	,,	1930
39	3. கலைகள்	,,	1935
40	4. சமூகம்	,,	1935
41	ஆசாபங்கம் (தாகூர் கதை-மொழி பெயர்ப்பு)	கமல நிலையம்	1937
42	தஷ்டபூஷணம் ,,	,,	1937

43	கதைக்கொத்து	பாரதி பிரசுராலயம்	1937
44	Agni and other poems and translations		1937
45	Essays and other prose fragments	,,	1937
46	ஸ்வசரிதையும் பிறபாடல்களும்	,,	1938
47	பத்திராதிபர் (தாகூர் கதை-மொழி பெயர்ப்பு)	கமலநிலையம்	1939
48	வேதரிஷிகளின் கவிதை தொடர்ச்சி	பாரதி பிரசுராலயம்	1941
49	பாரதி கீதத்திரட்டு (2ம் பதிப்பு)	,,	—
50	பாரதி மணிமலர்	,,	1948
51	பாரதி தமிழ்	அமுதநிலையம்	1953
52	சின்னச் சங்கரன்கதை	பாரதி புத்தக நிலையம்	1956
53	தாகூர் சிறுகதைகள்(மொழி பெயர்ப்பு)	அமுத நிலையம்	1958
54	பாரதி புதையல்-முதல் தொகுதி	,,	1958
55	பாரதி புதையல்-இரண்டாம் தொகுதி	,,	1959
56	பாரதி புதையல்-மூன்றாம் தொகுதி	,,	1975
57	பாரதி தரிசனம்-முதல் தொகுதி	நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்	1975
58	பாரதி தரிசனம்-இரண்டாம் தொகுதி	,,	1977
59	சக்ரவர்த்தினி-கட்டுரைகள்	வானவில் பிரசுரம்	1970
60	மும்மணிகள்	,,	1979

கனவை நனவாக்க கவிதை துணைபுரியும்

பரலி
சு. நெல்லையப்பர்

சக்தி காரியாலயம் வெளியிட்டுள்ள 'பாரதியார் கவிதைகள்' மலிவுப் பதிப்பிற்கு பரலி நெல்லையப்பர் முகவுரை

'யாம் அறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்
இனி தாவ தெங்கும் காணோம்'

என்றும்,

'தே மதுரத் தமிழோசை உலக மெல்லாம் பரவும் வகை
செய்தல் வேண்டும்'

என்றும் பாடிய பாரதியார் பாடல்களின் பெருமையை இன்று பாரெல்லாம் அறிந்து போற்றத் தொடங்கியிருக்கிறது.

அடிமைப்பட்டுக்கிடந்த நாட்டுக்கு விடுதலை ஊக்கம் அளித்த தமது பாடல்களை லட்சக் கணக்காக அச்சிட்டு வெளியிட்டு, வாயுள்ள மக்களெல்லாம் பாடவேண்டுமென்றும், காதுள்ள மக்களெல்லாம் கேட்க வேண்டுமென்றும், கருத்துள்ள மக்களெல்லாம் சிந்திக்க வேண்டுமென்றும், பாரதியார் அந்நாளில் விரும்பினார். ஆனால் அவர்கள் கனவு நனவாக இத்தனை ஆண்டுகள் ஆயின. பழந்தமிழ் மக்களுக்கு மட்டுமன்றிப் பார் அனைத்துக்குமே பொதுவான பாரதியார் பாடல்கள் ஒரு சிலரின் தனியுடைமையாக இருந்த நிலை நீங்கி, சில ஆண்டுகளுக்கு முன் மக்களின் பொது உடைமையாக மாறியது. ஆனால் பெயரளவில் பொது உடைமையாக இருந்த பாரதியார் பாடல்கள் செயலளவில் அவ்வாறு மாறுவது எளிய வேலையல்ல. ருஷியாவிலும், அமெரிக்காவிலும் அரசாங்கத்தாரே தங்கள் நாட்டுச் சிறந்த இலக்கியங்களைக் கோடிக் கணக்காக அச்சிட்டு இலவசமாகவும், பரம ஏழைகளும் வாங்கக் கூடிய மிகக் குறைந்த விலைக்கும் கொடுத்து வருகிறார்கள். பழந்தமிழ் நாட்டிற்குப் புத்துயிரும் புது வாழ்வும் அளித்துவரும் பாரதியார் பாடல்களை நமது அரசாங்கத்தாரே அச்சிட்டு நாடெங்கும் பரப்ப வேண்டும் என்பது என் போன்றவர்கள் கருத்து. ஆனால் அதிகாரிகள் செய்ய முன்வராத பெரிய வேலையைப் பாரதி பக்தரும், எனது நண்பருமான வை. கோவிந்தன் செய்ய முன்வந்தமை பெரிதும் போற்றுதற்குரியது. என்போன்ற பாரதி நண்பர்களின் கனவு இன்று நிறைவேறி விட்டதை நினைத்து நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். தமிழ்நாட்டில் உள்ள படித்தவர்கள்; ஆண் பெண்கள் அனைவரும் இந்த நூலை வாங்கிப் படித்துத் தாங்கள் புது வாழ்வு பெறுவதுடன் நாடெங்கும் மலர்ந்து வரும் புதுவாழ்வு பெருவாழ்வாகுமாறு அவர்கள் துணைபுரிதலும் வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறேன்.

பாரதியார் தேசபக்தர் மட்டுமல்லர். அவர் சிறந்த தெய்வபக்தரும் ஆவார். அது பற்றியே தேசபக்தி ஒன்று மட்டுமே உடைய சாதாரண மக்கள் காண முடியாத அரிய உண்மைகளையெல்லாம் கண்டு அவற்றைப் பாடியும் எழுதியும் சென்றார். அதனால் அவர் ஒரு தீர்க்கதரிசி ஆவார். பூலோகத்தில் புதியதோர் சத்திய யுகம் தோன்றிக்கொண்டிருக்கிறதென்பதை அவர் பல இடங்களில் பாடியும் எழுதியும் இருக்கிறார்.

'வீழ்க கலியின் வலி யெல்லாம், கிருத
யுகந்தான் மேவுகவே' என்றும்

''பொய்க்கும் கலியை நான் கொன்று
பூலோகத்தார் கண்முன்னே
மெய்க்கும் கிருத யுகத்தினையே கொணர்வேன்
தெய்வ விதியிஃதே!''

'கிருத யுகத்தைக் கேடின்றி நிறுத்த
விரதம் நான் கொண்டனன்'

என்றும் அவர் பாடியிருக்கிறார்.

''இன்று தேவர்களை அழைக்கிறோம். இந்த மண்ணுலகத்திலே மீண்டும் கிருத யுகத்தை நாட்டும் பொருட்டாக, அறிவீனம், அசுத்தம், வறுமை, சிறுமை, நோய், கொடுமை, பிரிவு, அநீதி, பொய் என்ற ராட்சஸக் கூட்டங்களை, அழித்து, மனித ஜாதிக்கு விடுதலை தரும் பொருட்டாக' என்று அவர் எழுயிருக்கிறார்.

அசத்தியமும் அதர்மமும் மிகுந்த கலியுகம் ஒழிந்து புதியதோர் சத்திய யுகம்—கிருத யுகம் தோன்றிக் கொண்டிருக்கிறதென்பதை நாட்டு நடப்பையும் உலகப் போக்கையும் ஆழ்ந்து நோக்குவார் இன்று தெளிவாகக் காணலாம்.

தமிழ் ஜாதியைப் பற்றி பாரதியார் கூறும் ஓர் உறுதிமொழியை இறுதியாகக் கூறி இந்தச் சிறிய முன்னுரையை நான் முடிக்கிறேன்:

'இந்த நிமிஷத்தில் தமிழ் ஜாதியின் அறிவு, கீர்த்தி வெளியுலகத்திலே பரவாமல் இருப்பதை நான் அறிவேன். போன நிமிஷம் தமிழ் அறிவொளி சற்றே மங்கியிருந்ததையும் நான் அறிவேன். ஆனால் போன நிமிஷம் போய்த் தொலைந்தது. இந்த நிமிஷம் சத்தியம் இல்லை. நாளை வரப்போவது சத்தியம். மிகவும் விரைவிலே தமிழின் ஒளி உலக முழுவதிலும் பரவாவிட்டால் என் பேரை மாற்றி அழையுங்கள்'.

இந்த வாக்கியங்களை பாரதியார் சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன் 1916-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் மூன்றாந் தேதி 'சுதேசமித்திரன்' பத்திரிகையில் வெளியிட்டார். தமிழ் மொழி ஆட்சி மொழியாய் விட்டது இன்று. தமிழ் ஓசை இன்று உலகமெங்கும் கேட்கிறது. பூமிதேவியின் தலைப் பிள்ளையான தமிழன் வையகத்தில் மீண்டும் தலைமைப் பதவி வகிக்கப் போகிறான் என்பது பாரதியார் கருத்து. பாரதியார் கனவை நாம் நனவாக்க வேண்டும். அதற்கு அவரது பாடல்கள் அருந்துணை, பெருந்துணையாக விளங்கும்.

வாழ்க பாரதியார் நாமம். வாழ்க தமிழ் மொழி. வந்தே மாதரம்.

குரோம்பேட்டை
சென்னை
13-4-1957.

பரலி சு. நெல்லையப்பர்.



பாரதியின் திருவடிகள் பதிந்துயர்ந்த இருப்பிடங்கள்



மைய அரசு வெளியிட்ட அஞ்சல் தலை
(11-9-1960)

காவடிச் சிந்து

அண்ணாமலை ரெட்டியாரின் காவடிச் சிந்துகள் புகழ் பெற்றவை. ஒருசமயம் எட்டயபுரம் அரசரும் மற்றும் சில பிரமுகர்களும் அண்ணாமலை ரெட்டியாரின் சிந்துகளைப் புகழ்ந்து பேசிக் கொண்டிருந்தனர். இதைக் கண்ட இளம் பாரதி லேசாக நகைத்தார். 'நகைத்துப் பயனில்லை. உங்களால் முடியுமானால் இயற்றுங்கள் பார்க்கலாம்' என்றார் ஒரு புலவர். 'இன்று மாலைக்குள் ஒரு சிந்துடன் வருகிறேன்' என்று கூறி, அப்படியே மாலையில் கீழ்வரும் சிந்துடன் அரண்மனைக்கு வந்தார் பாரதி. உடனே புலவர்களை அழைத்து, அவர் முன்னிலையில் இப்பாடலை அரங்கேற்றம் செய்வித்தார் அரசர். புலவர் யாவரும் போற்றினர். அந்தச் சிந்தின் ஒரு பகுதி மட்டும் கிடைத்துள்ளது.

இப்பாடலைப் பாரதியாரின் தம்பி ஸ்ரீ சி. விசுவநாதன் 1929ல் ஆங்கிலத்தில் வெளியிட்ட பாரதி சரிதத்திலும், தி. ஜ. ர. அவர்கள் 1940ல் வெளியிட்ட 'புதுமைக் கவி பாரதியார்' என்ற நூலிலும் காண்கிறோம்.

பச்சைத் திருமயில் வீரன்
அலங் காரன், கௌ மாரன்-ஒளிர்
பன்னிரு திண்புயப் பாரன், அடி
பணி சுப்பிர மணியர்க்கருள்
அணி மிக்குயர் தமிழைத்தரு
பக்தர்க் கெளியசிங் காரன்-எழில்
பண்ணு மருணாசலத் தூரன்.

ஆதாரம்: ரா. அ. பத்மநாபன்
தொகுத்த 'பாரதி புதையல்'

"சாதி மதங்களைப் பாரோம்!"

பழைய பழக்க வழக்கங்களில் பலவற்றை வேரோடு பெயர்த்து எறிந்துவிட வேணும் என்று பாரதி துடிப்பார். திருமதி செல்லம்மா இந்த விஷயத்தில் அடிக்கடி அபிப்பிராய பேதப்படுவார். வீட்டின் சமையலறையில் செல்லம்மா 'மடி' யாக ஆசாரத்துடன் சமையல் செய்து கொண்டிருப்பார். பாரதியார் வெளியிலிருந்து வந்து, கை, கால், கழுவி, நேராக உள்ளே போய்ச் சமையல் பாத்திரங்களில் வைத்திருப்பதைத் தொட்டுவிடுவார். 'பத்து, தொட வேண்டாம்!' என்று செல்லம்மா ஆட்சேபிப்பார். பாரதி அதைப் பொருட்படுத்தவே மாட்டார். இருவருக்கும் வாக்குவாதம் பலக்கும். முடிவில் இவரது பேச்சே உயர்ந்து நிற்கும்; செல்லம்மா பேசாமல் இருந்துவிடுவார்.

யார் சாப்பிட அழைத்தாலும் சரி, பாரதியார் மறுமொழியில்லாமல் ஒப்பி விடுவார். ஜாதி, மதம் ஒன்றையும் பார்க்க மாட்டார். வாயில் பாடுவதைப் போலவே, நடத்தையிலும் செய்து காட்டுவார். மனத்தில் நினைத்தால் போதும், செயலிலும்காட்டி விடுவார். எவ்வளவு கஷ்டமானாலும் சளைக்க மாட்டார்; யார் என்ன சொன்னாலும் பொருட்படுத்த மாட்டார்.

—"பாரதி நினைவுகள்" என்னும்
நூலில் யதுகிரி அம்மாள்.

பாரதியின் பெருந்தன்மை

1920-ம் வருஷம் 'சுதேசமித்திர'னில் 'ரெயில்வே ஸ்தானம்' என்றொரு கதையை எழுதினார் பாரதி. ஒருவன் பல மாதரை மணம் புரிந்து கொண்டால், அதனின்றும் அவனுக்கு துன்பம்தான் விளையும் என்பதும், விவாகத்தில் ஒருவன் இன்பம் கரண வேண்டினால், அவன் ஒருத்தியை மணந்து கொண்டு, அவளிடம் மாறாத, தீராத உண்மைக்காதல் செலுத்துவதே உபாயமாகுமென்பதும் மேற்படி கதையினால் குறிப்பிடப்படும் உண்மைகளாகும்.

இந்த உண்மைகளை விளக்கும் பொருட்டாக எழுந்த கதையில், முகம்மதியப் பிரபு ஒருவர் சகோதரமான மூன்று பெண்களை மணம் புரிந்து கொண்டதாக எழுதிவிட்டார்.

மேற்படி கதையைப் படித்த பாரதியாரின் முகம்மதிய நண்பரொருவர் அவரைச் சந்தித்து, 'தங்கள் கதையில் ஒரு பிழை இருக்கிறது. ஒரு முகம்மதிய பிரபு மூன்று சகோதரிகளை மணம் செய்ததாக எழுதியிருக்கிறீர்கள். அப்படி சகோதரமான மூன்று பெண்களை மணம் புரிந்து கொள்ளுதல் முகம்மதிய சாஸ்திரப்படி 'ஹராம்' (பாதகம்)ஆகக் கருதப்படுகிறது. தன் மனைவி உயிருடனிருக்கையில், அவளுடன் பிறந்த மற்ற ஸ்திரியை ஒரு முஸ்லீம் மணம் புரிந்து கொள்ளக்கூடாது என்பதே எங்களுடைய சாஸ்திரங்களின் கொள்கை' என்று குறிப்பிட்டார்.

முகம்மதிய நண்பரின் விளக்கத்தைக் கேட்ட பாரதி 'சரிதான் அந்த விஷயம் எனக்குத் தெரியாது. மனைவியொருத்தியின் சகோதரிகளை மணம் புரியும் வழக்கம் ஹிந்துக்களுக்குள்ளே உண்டாதலால், அது போல முகம்மதியர்களுக்குள்ளேயே இருக்கலாமென்று நினைத்து அங்ஙனம் தவறாக எழுதி விட்டேன். எனவே அந்தக் கதாநாயகனாகிய முகம்மதியப் பிரபுவுக்கு அவனுடைய சிற்றப்பன்தன் மூன்று குமாரத்திகளையும் மணம் புரிவித்தானென்பதை மாற்றி தன்னினத்தைச் சேர்ந்த மூன்று பெண்களை மணம் புரிவித்தானென்று திருத்தி வாசிக்கும்படி 'சுதேசமித்திரன் பத்திரிகையில் எழுதி விடுகிறேன்' என்று பதிலும் சொல்லிவிட்டார்.

நண்பரிடம் கொடுத்த வாக்குப்படி பாரதி ''சுதேசமித்திரன்'' பத்திரிகையில் வெளியிட்ட திருத்தப்பகுதி வருமாறு:

''ரெயில்வே ஸ்தானம்'' என்ற கதையில் நான் மேலே கூறிய சாதாரணத் தவறு புக விட்டது பற்றி பத்திராதிபரும், பத்திரிகை படிப்போரும் என்னைப்பொறுத்துக் கொள்ளும்படி வேண்டுகிறேன். உலகமெல்லாம் மாதர்களுக்கு நியாயம் செய்ய வேண்டுமென்ற கிளர்ச்சி நடப்பதை அனுசரித்து, முஸ்லீம்களும் ஏகபத்தினி விரதம், பெண் விடுதலை, ஆண்—பெண் சமத்துவம் என்ற கொள்கைகளைப் பற்றி மேன்மை அடைய வேண்டுமென்பதே என் கருத்து. இந்தக் கருத்து நிறைவேறும்படி பரமாத்மாவான அல்லா ஹுத்த ஆலா அருள் புரிவாராக.''

எட்டையபுரம் 'பாரதி மணிமண்டபம்'

உத்தம தர்மம்

மகாகவி பாரதியார்

நமது தேசத்தின் மேல் கடற்கரை நெடுக ஒரு பெரும் மலைத்தொடர் பரவி இருக்கிறது. அந்த மலைத்தொடரின் தென் பாகத்திற்குப் பொதிய மாமலை என்று பெயர். அந்த மலையில் பெரிய காடுகள் இருக்கின்றன. அக்காடுகளில் பலவிதமான மிருகங்கள் கூட்டம் கூட்டமாய்ச் சஞ்சரிக்கின்றன. அதில் ஒரு காட்டில் வானரங்கள் மிகுதியாய் இருக்கின்றன. நாங்கள் ஒரு நாள் அந்தக் காட்டின் வழியாய்ப் போனோம். அங்குள்ள வானரங்கள் கூட்டம் கூட்டமாய்க் கூடிக்கொண்டு எப்பொழுதும் இருப்பது போல் இல்லாமல் கலக்கங் கொண்டு கத்திக்கொண்டிருந்தன. நாங்கள் அதென்னவென்று பார்க்க ஆவலாய் இருந்தோம். அங்கும் இங்கும் சுற்றிப் பார்த்த பொழுது ஒரு பெரிய மலைப்பாம்பு எங்கள் கண்களுக்குப் புலப்பட்டது. அப்பாம்பானது ஒரு பெரிய குரங்கை வாயில் கவ்விக்கொண்டிருந்தது. அந்தப் பாம்பின் வாய்ப்பட்ட வானரம் மிகவும் பரிதாபமான மாதிரியாகக் கூவிக்கொண்டிருந்தது. அதன் கூச்சல்களைக் கேட்டுக் கொண்டிருந்த குரங்குகள் கோபாவேசங் கொண்டிருந்தன. இன்னவிதம் தம் இனத்தானை உடனே மீட்கலாமென்று அவைகள் ஆலோசிக்கும் முன்னமே அப்பெரும் பாம்பு அந்தக் குரங்கை விழுங்கிவிட்டது.

நாங்கள், 'இனிமேல் வானரங்கள் செய்வதற்கு ஒன்றுமில்லை; அவற்றின் கூட்டத்தைச் சேர்ந்த ஒரு குரங்கு மலைப் பாம்பிற்கு இரையாய் விட்டபடியால் அவைகள் மன வருத்தத்தோடு சும்மா யிருந்து விடு'மென்று எண்ணிக்கொண்டு போய் விட்டோம். கொஞ்சநேரம் அக்காட்டின் விநோதங்களைப் பார்த்துவிட்டு அதே வழியாய்த் திரும்பிவந்தோம். வரும் வழிக்குச் சமீபத்தில் 50 அல்லது 60 வானரங்கள் ஒன்றாய்க்கூடி ஒரு பெரிய கல்லைப் புரட்டிக் கொண்டிருந்தன. நாங்கள் அவை எதற்காக அப்படிச் செய்து கொண்டிருந்தனவென்று பார்க்க ஆவல் கொண்டிருந்தபடியால், சற்றுநேரம் அங்கிருந்த மரத்தின் நிழலில் தங்கினோம். குரங்குகள் கொஞ்சமேனும் சப்தமிடாமல் மிகவும் ஜாக்கிரதையாய் அப்பெரும் கல்லைத் தள்ளிக் கொண்டேவந்து ஓரிடத்தில் அதை நிறுத்தின. கல்லைக் கடைசியாகப் புரட்டி வைத்திருந்த இடமானது ஒரு பாறையின் ஓரமாய் இருந்தது. அந்த ஓரத்திலிருந்து பார்த்தால் கீழே செங்குத்தான பள்ளம் தோன்றும். அப் பள்ளத்தில்தான் நாம் முன்னே சொன்ன மலைப்பாம்பு படுத்துக் கிடந்தது. இந்தக் குரங்குகள் ஒரேமுகமாய் நின்று அப்பெருங்கல்லை ஒரே மூச்சில் திடீரென்று தள்ளிவிட்டன. அக்கல்லானது இரண்டு பனை ஆழத்திற்குக் கீழே படுத்திருந்த மலைப்பாம்பின்மேல் திடீரென்று பெருத்த ஓசையுடன் போய் விழுந்து அதை நசுக்கிவிட்டது. அப்பாம்பின் இரத்தம் ஒருசிறு குட்டம்போல் தேங்கிநின்றது. அது சற்று நேரத்திற்கெல்லாம் அவஸ்தைப் பட்டு இறந்துவிட்டது. இறந்த மலைப்

பாம்பைப் பார்க்க, குரங்குகள் கும்பல் கும்பலாய் வந்தன. ஒவ்வொன்றின் முகத்திலும் விஜயலட்சுமி பிரசன்னமாகி இருந்தாள்.

இவற்றையெல்லாம் பார்த்திருந்த எங்களுக்கு மிகுந்த ஆச்சரியமும் பல எண்ணங்களும் உண்டாயின. மிருகங்களாய் இருந்தாலும் தங்கள் இனத்தைச் சேர்ந்த ஒரு பிராணியைக் கொன்ற மற்றொரு பிராணியைத் திரும்பக் கொன்று பழிக்குப் பழி வாங்க வேண்டுமென்கிற உத்தம தர்மத்தை இவற்றிற்குப் போதித்து யார்? இது கடவுளின் பிரமாணமாகத்தானே இருக்கவேண்டும்? மிருகங்களுக்கு உள்ள சுய அறிவுகூட நமக்கில்லாமல்போவதேன்! மனிதரில் எந்த ஜாதியார் சுஜனசங்கத்தில் அபிமானம் கொள்ளாதிருக்கிறார்களோ அந்த ஜாதியார் வேரோடு அழிந்துபோய் விடுவார்கள் என்பதில் சந்தேகமேயில்லை.

புதுச்சேரி-இந்தியா
12.12.1908

பாரதியார் பெயர் நிலைக்க அரசின் பெரும் பணிகள்

எல்லாரும் ஓர்குலம்; எல்லாரும் ஓர் இனம்; எல்லாரும் இந்திய மக்கள் என்ற ஒருமைப் பாட்டு உணர்ச்சியை மக்களிடையே வலியுறுத்திய மகாகவி பாரதியின் கொள்கையைப் பரப்பவும் அவரது புகழை மக்களின் நெஞ்சில் நிலைநிறுத்தவும் சிறந்த செயல்கள் பலவற்றைத் தமிழ்நாடு அரசு ஆற்றியுள்ளது.

1981ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 11ஆம் நாளன்று தொடங்கிய பாரதி நூற்றாண்டைத் தேசிய ஒருமைப்பாட்டு ஆண்டாக அரசு கொண்டாடியது. பாரதி பிறந்த எட்டயபுரத்தில் தொடங்கிய நூற்றாண்டுவிழா தமிழ் நாடெங்கும், இந்தியத் திருநாடெங்கும் 1982 டிசம்பர் திங்கள் வரை கொண்டாடப்பட்டது.

1981 டிசம்பர் 11,12, 13 ஆகிய நாட்களில் எட்டயபுரத்தில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்ட விழாவில் இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் வந்த பெருமக்கள் பாரதுக்குப் புகழ் மாலை சூட்டினர்.

எட்டயபுரத்தில் பாரதி மணி மண்டபத்தை நிருவகித்து வந்த குழுவினரிடமிருந்து தமிழக அரசு அதைப்பெற்று ரூ. 2½ இலட்சம் செலவில் புதுப்பித்தது. மணி மண்டபத்தின் முன்னால் பாரதியின் முழு உருவச்சிலையை நிறுவியது. இம்மண்டபத்தினருகே பாரதி பற்றிய கலைக்கூடம் அமைக்க 10 ஏக்கர் நிலப்பரப்பு நிலம் கையகப்படுத்தப்பட்டுப் பணி நடைபெற்று வருகின்றது.

மகாகவி பாரதியின் பணியையும் வாழ்வுச் சிறப்பையும் விளக்கும் வகையிலான நூல்காட்சியும், புகைப்படக் கண்காட்சியும் மணிமண்டபத்தில் அமைக்கப்பட்டன. நூல் காட்சி அரங்கில், பாரதியார் எழுதிய படைப்பிலக்கியங்களும் அவரது நூல்களை அடியொற்றி எழுதப்பட்ட நூல்களும் விமரிசன நோக்கில் எழுதப்பட்ட நூல்களும் இடம் பெற்றுள்ளன.

நூற்றாண்டின் போது, தமிழ் நாட்டிலுள்ள 378 ஊராட்சி ஒன்றியங்களிலும் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு நாள் வீதம் ஒரு கிராமப்பகுதியைத் தேர்ந்தெடுத்து, பாரதி விழா கொண்டாடப்பட்டது.

பாரதி கூறிய சமுதாயச் சீர்திருத்தப் பணிகளை அடிப்படையாகக் கொண்ட கொள்கை அடிப்படையிலான விழாவாக இவை நடத்தப்பட்டன. சமுதாயச் சீர்திருத்தம், தீண்டாமை ஒழிப்பு, தமிழ் வளர்ச்சி போன்ற பல்வேறு துறைகளில் பாரதி கனவு கண்ட சமுதாய அமைப்பு ஏற்பட இவ்விழா பயன்படுத்திக்கொள்ளப்பட்டது. மேலும் இவ்விழாக்களில் அரசின் பல்வேறு முன்னேற்றத் திட்டங்களும், வளர்ச்சிப் பணிகளும் தொடங்கப்பட்டதுடன் ஏழை எளிய மக்கள், விவசாயிகள், மகளிர், ஊனமுற்றோர் ஆகியோருக்கு உறுதுணையளிக்கும் வகையில் கடன் உதவிகளும், பயிற்சித்திட்டங்களும் அறிவிக்கப்பட்டன.

378 ஊராட்சி ஒன்றியங்களிலும் பாரதி நினைவாக 982 பள்ளிக் கட்டிடங்கள் திறக்கப்பட்டன. தாய்சேய் நல விடுதிகள் 30, ஒன்றிய மருந்தகங்கள் 6, சமுதாயக்கூடங்கள் 4, குழந்தைகள் காப்பகம் 1, என மொத்தம் 1023 பணிகளுக்கு ரூ. 8கோடியே 13 இலட்சம் செலவிடப்பட்டது. நகராட்சிகளைச் சேர்ந்த பள்ளிகள் 95, மருந்தகம் 1, அலுவலக் கட்டடங்கள் 3, அங்காடிகள் 7, பேருந்து நிழற்கொடை 1, சாலை 107, பூங்காக்கள் 15, நீர்த்தேக்கத்தொட்டிகள் 2, நீர்த்தேக்கம் 1 ஆகிய 232 பணிகளுக்கு ரூ 2 கோடியே 27 இலட்சம் செலவிடப்பட்டது. மொத்தம் 1255 கட்டடங்கள் பாரதி நினைவாகத் தமிழ்நாட்டில்திறக்கப்பட்டன.

பாரதியாரின் புகழ் பரப்பப் பாடுபட்டவர்கள் அனைவருக்கும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் தமது திருக்கரங்களால் கேடயங்கள் வழங்கிப் பொன்னாடை போர்த்திப் பெருமைப்படுத்தினார்.

மாவட்டத் தலை நகர்களில் மாதம் ஒரு விழாவாகப் பாரதி விழா அரசின் சார்பில் கொண்டாடப்பட்டது. இந்தியாவின் தலை நகரான புதுடெல்லியில் பாரதியின் நூற்றாண்டுவிழா இந்திய அரசின் உதவியுடன் நடத்தப்பட்டது.

தமிழ்நாடு அரசின் முயற்சியால் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலும் பாரதி நூற்றாண்டு விழாக்கள் கொண்டாடப்பட்டன.

கல்கத்தா நகரிலே பாரதியின் முழு உருவ வெண்கலச் சிலை அமைக்கப்பட்டது. பம்பாயிலும் பாரதியாரின் சிலை நிறுவ ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. திருவனந்தபுரத்தில் கேரள அரசின் ஆதரவுடனும், லக்னோவில் உத்தரப்பிரதேச அரசின் உதவியுடனும், பாட்னாவில்பீகார் மாநில அரசின் ஆதரவிலும் பாரதி விழாக்கள்கொண்டாடப்பட்டன. பாரதியின் நினைவுச் சின்னமாக மண்டபம் ஒன்றை நிறுவ பாட்னா தமிழ்ச்சங்கம் முயன்று வருகிறது. இதற்கு பீகார் அரசும், தமிழ்நாடு அரசும் பொருள் உதவி புரிந்துள்ளன.

தமிழகப் பல்கலைக் கழகங்களில் பாரதி அறக்கட்டளைகள் நிறுவப்பட்டுள்ளன.

பாரதி பிறந்த எட்டயபுரத்துக்கருகில் உள்ள ஊரில் பாரதி பெயரால் பொது மருத்துவமனை நிறுவப்பட்டுள்ளது.

பாரதி நூற்றாண்டு விழாவின் சிறப்புமலர் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் மூலம் தயாரித்து வெளியிட்டது.

தமிழகத்தின் அனைத்துப் பல்கலைக் கழகங்களோடு பஞ்சாப் பல்கலைக் கழகத்திலும பாரதி ஆய்வுக் கட்டுரை நிறுவப்பட்டுள்ளது.

மகாகவி புனைந்தளித்த இது வரை வெளிவந்துள்ள கவிதைகளின் தொகுப்பும், வெளிவராத கவிதைகளைத் தேடி எடுத்து அந்தத் தொகுப்பிலே சேர்த்தும், ஒவ்வொரு கவிதையும் எந்த ஆண்டிலே எந்த மாதத்திலே, எந்த நாளிலே வெளிவந்தது என்ற குறிப்புக்களுடனும், கவிதைகளைப் புனைவதற்குத் தூண்டிய நண்பர் யார், தூண்டிய சக்தி, சம்பவம் எது என்ற விவரங்களுடனும் முழு அளவிலான புதிய தொகுப்பு தயாரிக்கப்பட்டுள்ளது.

பாரதியின் வரலாற்றை முழு அளவில் எழுதி வெளியிடும் பொறுப்பை, சென்னைப் பல்கலைக் கழகத்திடம் அரசு ஒப்புவித்தது. இதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

மகாகவியின் வரலாற்றை விளக்கும் கலை நிகழ்ச்சிகளை நடத்த அனைத்து மாநிலங்களுக்கும் வெளி நாடுகளுக்கும் கலைக் குழுக்களை தமிழக அரசு அனுப்பியது.

பாரதியாரின் தந்தை சின்னசாமி ஐயர் எட்டயபுரத்தில் 1892ஆம் ஆண்டு பஞ்சைப் பதனிடும் ஆலை ஒன்றை நிறுவினார். வெள்ளையர்களது எதிர்ப்பால் அது மூடப்பட நேர்ந்தது. அதை நினைவிற்கொண்டு பாரதியார் பிறந்த பூமியில் ரூ. 5.10கோடி செலவில் 31.10 ஏக்கர் நிலத்தில் மகாகவி பாரதியார் கூட்டுறவு நூற்பாலை நிறுவப்பட்டது. 1981 டிசம்பரில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அறிவித்தபடி 1985 ஏப்ரல் 5ஆம் தேதியன்று நூற்பாலை சீரும் சிறப்புடனும் செயல்படத்துவங்கியது.

கோயம்புத்தூரில் பாரதியார் பெயரில் பாரதியார் பல்கலைக் கழகம் நிறுவப்பட்டது.

பெண் உரிமைக்காகப் பாடிய பாரதியின் நினைவாகப் பெண்களுக்கென்று தனிப் பல்கலைக் கழகம் 'அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்', என்ற பெயரில் 2.3.84 அன்று முதல் செயல்பட்டு வருகிறது.

எட்டயபுரம் - கோயில்பட்டி சாலையில் ரூபாய் ஒன்னேகால் கோடி செலவில் பாரதியார் நூற்றாண்டு நினைவு மகளிர் பாலிடெக்னிக் நிறுவப்பட்டுள்ளது.

பாரதியாரின் கவிதைகளைப் பற்றிய ஆராய்ச்சி நூல்களை வெளியிடும் பணியில் கோவை பாரதியார் பல்கலைக் கழகமும் திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழகமும ஈடுபட்டுள்ளன.

தமிழகத்தில் எல்லா இடங்களிலும் தமிழ்தான் இடம்பெற வேண்டும், தமிழில்தான் பேச வேண்டும் என்று கூறினார் பாரதியார். சுமார் 100 ஏக்கர் நிலப் பரப்பில் தஞ்சையில் தமிழ்ப்பல் கலைக்கழகம, மதுரையில் உலகத் தமிழ்ச்சங்கம் ஆகியவை நிறுவப் பட்டுள்ளன. மதுரை மாநகரில் ஐந்தாவது உலகத் தமிழ் மாநாடு நடத்தி, தமிழக அரசு தமிழ் மொழிக்கு மாபெரும் சிறப்புச் சேர்த்துள்ளது.

பிறநாட்டு நல்லறிஞரின் சாத்திரங்கள் தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும்; இறவாத புகழுடைய புதுநூல்கள் தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும் என்று பாரதி பாடினார். அவரின் எண்ணம் ஈடேற பிறமாநிலங்களிலும் பிற நாடுகளிலும் தமிழ்க் கல்வியையும் தமிழ் ஆராய்ச்சியையும் ஊக்குவிக்க அரசின் மானியங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

சாதிக்குள் சாதி எனவேரோடியிருக்கும் சாதிமுறையைச் சாடினார் பாரதி அன்று. இன்று, தெருப் பெயர்களில் இருந்த சாதிப்பட்டங்களை அரசு நீக்கியுள்ளது.

சமதர்ம சமுதாயம் அமைய வேண்டும் என்ற புரட்சிமனம் கொண்டவர் பாரதி. ஆண்டுதோறும் தமிழ்நாட்டின் ஆலயங்களில் மேலோர் கீழோர் தாழ்ந்தோர் உயர்ந்தோர் என்ற வேறுபாடுகாட்ட இயலாத சமபந்தி விருந்து அரசின் சார்பில் நடத்தப்படுகிறது.

ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம் என்றார் பாரதி. அவரின் அவா 24.5.86 அன்று நிறைவேறியது. உலகிலேயே முதன்முறையாக கரும்புச் சக்கையைக் கொண்டு செய்தித்தாள் தயாரிக்கும் தொழிற்சாலையை மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் நாட்டுக்கு அர்ப்பணித்தார்.

வயிற்றுக்குச் சோறிட வேண்டும்-இங்கு வாழும் மனிதர்க்கெல்லாம் என்று விழைந்தவர் பாரதியார். அவரது கனவு இன்று தமிழகத்தில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களால் நனவாக்கப்பட்டுள்ளது.

58,000 மையங்கள் மூலம் 2+ முதல் 9+ வரையிலான வயதுத் தொகுதியிலுள்ள 66 இலட்சம் சிறார்கள் பயனடையும் வகையில் 1982ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட முதலமைச்சர் குழந்தைகள் மதிய சத்துணவுத் திட்டத்தினால், இன்று 66,504 மையங்கள்மூலம், 86.88 இலட்சம் சிறார்களும், முதியோர் உதவித்தொகை பெறுவோர் 2 இலட்சம் பேரும் பயனடைகின்றனர். இத்திட்டத்தைச் செயல்படுத்த அரசு செலவிடும் தொகை ஆண்டுக்கு ரூ. 180 கோடி.

மேலும் சென்னை மாநகரின் பிரதான வீதிகளில் ஒன்றான பைகிராப்ட்ஸ் சாலையின் பெயரை பாரதிசாலை என அரசு பெயர் மாற்றம் செய்துள்ளது.

பாரதி பெயர் நிலைக்க அரசு ஆற்றும் பணிகள் இத்துடன் முற்றுப்பெறாமல் மேலும் தொடர்கின்றன.

— வி. இராவணன்

நாட்டு விடுதலைப் போரில் மகாகவி சுப்ரமணிய பாரதியாரின் பாடல் சிறப்பிடம் பெற்றது. நாடகங்களில் எல்லாம் பாரதியின் பாடல்கள் பாடப்பெற்றன; அவற்றைக் கேட்டு மக்கள் ஆவேசம் பெற்றனர். பேசும் படங்கள் தோன்றிய பின்னர், நாட்டுப் பற்றுமிக்க இயக்குநர்கள், பாரதியின் பாடலைத் திரைப்படங்களில் இணைத்தனர். தேச பக்தி கொண்ட நடிகர்கள்-பாரதியாரின் பாடல்களைத் திரைப்படங்களில் பாடி மகிழ்ந்தனர். பாரதியாரின் பாடல்கள் இடம் பெற்ற திரைப்படங்கள் பலப்பல. ஒரு சில படங்களும், அவற்றில் எடுத்தாளப்பட்ட பாரதியின் பாடல் வரிகளும் இங்கே இடம் பெறுகின்றன.

நாம் இருவர்:

- விடுதலை விடுதலை விடுதலை
- கண்ணில் தெரியுதொரு தோற்றம்-அதில்
  கண்ணன் அழகு முழுதில்லை
- வெண்ணிலவு நீ எனக்கு,
  மேவுகடல் நான் உனக்கு!
- வெற்றி எட்டுத் திக்கும் எட்டக்
  கொட்டு முரசே!
- ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே!

மணமகள்:

- சின்னஞ்சிறு கிளியே கண்ணம்மா
  செல்வக் களஞ்சியமே!

வேதாள உலகம்-பில்ஹணன்:

- தூண்டிற் புழுவினைப் போல் வெளியே
  சுடர் விளக்கினைப் போல்...
- தீராத விளையாட்டுப் பிள்ளை

படிக்காத மேதை:

- எங்கிருந்தோ வந்தான்—
  இடைச்சாதி நான் என்றான்

கள்வனின் காதலி:

- தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற-
  எங்கள்
  தாயென்று கும்பிடடி பாப்பா.
- மனதில் உறுதி வேண்டும்-வாக்கினில்
  இனிமை வேண்டும்.
- நல்லதோர் வீணை செய்தே -அதை
  நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ?

ஏழைபடும்பாடு-தெய்வத்தின் தெய்வம்:

- கண்ணன் மனநிலையை தங்கமே தங்கம்
  கண்டுவர வேணுமடி தங்கமே தங்கம்

வெள்ளித் திரையில் பாரதியார் பாடல்கள்

நாம் இருவர்

வாழ்க்கை

'கப்பலோட்டிய தமிழன்:

- ஓடி விளையாடு பாப்பா
- வெள்ளிப் பனி மலையின் மீதுலவுவோம்
  —அடி
  மேலைக்கடல் முழுதும் கப்பல்விடுவோம்
- தண்ணீர் விட்டோ வளர்த்தோம்
  சர்வேசா-இப்பயிரை
  கண்ணீரால் காத்து நின்றோம்.
- காற்று வெளிதனிலே -கண்ணம்மா
- வந்தே மாதரம் என்போம்!

பிருதிவிராஜன்-வாழ்க்கை:

- பாரத சமுதாயம் வாழ்கவே-ஜெய ஜெய
  பாரத சமுதாயம் வாழ்கவே

உத்தமபுத்திரன்-(மாடர்ன் தியேட்டர்ஸ்
தயாரிப்பு),
வேதாள உலகம், ராஜராஜன்:

- செந்தமிழ் நாடெனும் போதினிலே
  -இன்பத்
  தேன்வந்து பாயுது காதினிலே

தயாளன் - சக்ரதாரி - ஏழாவது மனிதன்::

- காக்கைச்சிறகினிலே நந்தலாலா-உன்
  கரிய முகம் தெரியுதய்யா நந்தலாலா

திருமணம்-கள்வனின் காதலி:

- மங்கியதோர் நிலவினிலே-கனவிலிது
  கண்டேன்

விளையாட்டுப் பொம்மை-வறுமையின்
நிறம் சிவப்பு:

- தீர்த்தக் கரையினிலே-கண்ணம்மா
  செண்பகத் தோட்டத்திலே...

கௌரி கல்யாணம்:

- வெள்ளைக் கமலத்திலே...

கூண்டுக்கிளி:

- சொல்ல வல்லாயோ கிளியே
  சொல்ல நீ வல்லாயோ?

புதையல்:

- நல்ல காலம் வருகுது
  ஜாதிகள் தொலையுது

கைகொடுத்த தெய்வம்:

- சிந்துநதியின் மிசை நிலவினிலே
  சேர நன்னாட்டிளம் பெண்களுடனே

விளையாட்டு பொம்மை:

- மோகத்தைக் கொன்றுவிடு-அல்லா
  லென்றன்
  மூச்சை நிறுத்திவிடு

முத்தான கையெழுத்து



பொதுவாக ஒருவரின் கையெழுத்தைச் சிறப்பித்துக் கூறும் போது 'முத்துப் போன்ற கையெழுத்து' என்று நாம் குறிப்பிடுவதுண்டு. மகாகவி பாரதியாரின் கையெழுத்து முத்துப் போலவே இருக்கும். அது மட்டுமல்ல. ஓர் எழுத்துடன் மற்றோர் எழுத்து உரசாத வண்ணம் அழகாக விளங்கும். ஒற்றெழுத்துக்களை அவர் எழுதுகின்ற விதமே அருமை!

பானை பிடித்தவள் பாக்யசாலி:

- திக்குத் தெரியாத காட்டில்-உன்னைத்
  தேடித் தேடி இளைத்தேன்.

ஏழாவது மனிதன்

- வீணையடி நீ எனக்கு

நாலு வேலி நிலம்:

- முருகா முருகா முருகா
  வருவாய் மயில் மீதினிலே
- நம்பினார் கெடுவதில்லை

ஓர் இரவு:

- அன்பென்று கொட்டுமுரசே-மக்கள்
  அத்தனை பேரும் நிகராம்

அந்தமான் கைதி:

- காணிநிலம் வேண்டும்-பராசக்தி
  காணிநிலம் வேண்டும்.

பராசக்தி:

- நெஞ்சு பொறுக்குதில்லையே-இந்த
  நிலைகெட்ட மனிதரை நினைத்து
  விட்டால்...

அவள் யார்?

- கண்ணன் பிறந்தான்-எங்கள்
  கண்ணன் பிறந்தான்

நாம்:

- ஆயிரம் தெய்வங்கள் உண்டென்று தேடி

ரங்கோன் ராதா-பிரசிடெண்ட் பஞ்சாட்சரம்:

- ஒளிபடைத்த கண்ணினாய் வா வர வா!

சக்ரவர்த்தித் திருமகள்:

- தில்லித் துருக்கர் செய்த வழக்கமடி-
  பெண்கள்
  திரையிட்டு முகமலர் மறைத்துவைத்தல்

புதுவாழ்வு:

- சுட்டும் விழிச்சுடர்தான் கண்ணம்மா
  சூரிய சந்திரரோ?

—தொகுப்பு : எஸ்.எஸ். சுந்தரம்



பதினொரு வயதில் பாடியவர்!

திருமதி சகுந்தலா பாரதி பேட்டி

"எனக்குச் சுமார் ஐந்து அல்லது ஆறு வயதிருக்கும் போது, 'நாமும் அப்பாவைப் போல பாட்டுக கட்டவேண்டும்' என்று ஆசை தோன்றியது. அப்போது சரியாக எழுதப் படிக்கக் கூடத் தெரியாது. என்றாலும் ஓயாமல் கவிதைகளின் நடுவே பழகுவதால் பாட்டுக் கட்டுவது அத்தனைச் சுலபமாகத் தோன்றியது. உடனே, ஒரு பாடலை எழுதினேன், அதை என் தாயிடம் பாடிக் காண்பித்தேன்."

''மாணிக்க மேடையில் மான்விளையா
டையில்-சகியே
நாமிருவரும் செல்வோமே!
குயில்கள் மயில்கள் எல்லாம்
குடியிருக்கும் சோலையில்
மகிழ்ந்து நாமிருவரும் மலர் கொய்யப்
போவோம்.
ஆண்களில்லாக் காட்டில் பெண்கள்
அரசாட்சியில் - சகியே
நாமிருவரும் செல்வோமே!''

''நான் பாடிய இந்தப் பாடலைக் கேள்விப்பட்டதும் என் தநதையார் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அவரது உற்ற நண்பர் பாரதிதாசன் போன்றோரிடம் எல்லாம் சொல்லிப் பெருமைப்பட்டார்.''

ஒரு நாள் காலை.

பாரதியார் சகுந்தலாவிடம் 'பாப்பா நீயும் நானும் சோந்து ஒரு பாட்டு எழுதுவோம்' என்றாராம். தன் அருமை மகள் சகுந்தலாவை அவர் செல்லமாகப் 'பாப்பா' எனறே அழைப்பாராம். சகுந்தலாவும் சரியென்று சொல்லவே இருவரும் பாட்டு எழுத மாடிக்குச் சென்றனர். பாட்டை எப்படி எழுதுவது?

முதலில் பாப்பா சொல்ல வேண்டியது. பிறகு அப்பா பாட்டு அமைக்க வேண்டியது. இப்படியே பாட்டு வளர்ந்தது. அந்தப் பாட்டுதான் 'காலைப் பொழுது' என்ற பாடலாய் மலர்ந்தது. ''அது தவறுதலாகக் 'காதற் பாட்டுக்கள்' என்ற தலைப்புடன் வெளியிடப்பட்டிருக்கிறது'' என்கிறார் திருமதி சகுந்தலா.

இப்படி எழுதிய கையெழுத்துப் பிரதிகளில் பாரதியார் மறக்காமல், 'சகுந்தலா பாப்பாவும் சுப்ரமணிய பாரதியும் எழுதியது' என்று குறிப்பிடுவாரென்றால் தம் மகள் மீது அவர் வைத்துள்ள பேரன்பினை நன்கு அறியலாம்.

குழந்தைகள், பள்ளியில் எழுத்துக்களைக் கூட்டி வார்த்தை சேர்க்கும் விளையாட்டு விளையாடுவதை நாம் பார்த்திருக்கிறோம். அதைப் போல் பாரதியாரும், ஒரு நாள் தம் மகளையும், மற்ற மாணவர்களையும் அழைத்து 'பாட்டுச் சேர்க்கும்' விளையாட்டைக் கற்றுக் கொடுத்தாராம்.

ஒருவர் ஒரு பதம் சொல்ல, அதைப் பாரதியார் வரிசைக் கிரமமாகப் பொருள் தோன்றும்படி பாட்டிசைத்துத் தருவார். உதாரணமாக.

முதலாமவர்: சக்தியை

இரண்டாமவர்: கொண்டாடு

மூன்றாமவர்: தினந்தோறும்

பாரதியார்: சக்தியை நித்தம் கொண்டாடு

முதலாமவர்: கவலையில்லாமல்

இரண்டாமவர்: சக்தியின் பாதங்களில்

மூன்றாமவர்: முத்துமாலைகள்

நான்காமவர்: ரத்தின ஆரங்கள்

ஐந்தாமவர்: வைத்துப் பணிந்திடு

இந்தப் பதங்களை வைத்துப் பாரதியார் பாடிய பாட்டு இதோ:

''சக்தியை நித்தம் கொண்டாடு
சஞ்சலம் நீக்கி - சக்தியை
முத்துமாலைகள் ரத்னஹாரங்கள்
சக்தி பதத்தில் அணிந்து பணிந்திடு-
சக்தியை''

குழந்தைகள் என்றால் பார்த்த பொருளைக் கேட்டு அடம் பிடிப்பர். ஆனால் சிறுமி சகுந்தலாவோ எந்த விளையாட்டுச் சாமான்களையும் கேட்டுத் தொந்தரவு பண்ணியதில்லை. அவர் கேட்ட பொருளெல்லாம் நல்லநல்ல கதைகள், பாட்டுக்கள்தாம்!.

பாரதியார் புதுச்சேரியில் இருந்தபோது தன் அருமை மகளை அழைத்துக் கொண்டு கடற்கரைக்குப் போவது வழக்கம். அங்கே அலைகடலின் ஓரத்திலே சகுந்தலா அப்பாவிடம் 'அப்பா! அப்பா! கிளிஞ்சல் கதை சொல்லேன். அதோ ஓடுகிறதே அந்த நண்டுக் கதை சொல்லேன்!' என்று வற்புறுத்துவாராம்.

அப்போது கிளிஞ்சலைப் பற்றியோ, நண்டைப்பற்றியோ ஒரு கதை வந்து விடும் அல்லது கவிதை பிறந்துவிடும் பாரதியாருக்கு.

பாரதியாரின் சொந்த ஊர் எட்டையபுரம் என்று நமக்குத் தெரியும்.

எட்டையபுரம் மன்னருக்கும், சிறுவன் சுப்பையாவுக்கும் (பாரதிக்கும்) நெருங்கிய தொடர்பு இருந்தது.

தமிழார்வமுள்ள மன்னர், சிறுவன் பாரதியிடம் தம் சிந்தையைப் பறிகொடுத்தார் என்றே கூறவேண்டும். அவ்வளவு ஏன், அருட்கவி பாரதியின் பாடல்கள் முதன் முதலில் விரும்பப்பட்ட இடமே அந்த எட்டையபுரம் மன்னரின் அரண்மனைதானே?

பாரதியாரின் தாத்தா திரு. இராமசாமி சிவன் கிராம முன்சீப்பாக இருந்தவர். அவரிடம் தேவாரம், திருவாசகம் எல்லாம் சிறுவன் பாரதி கற்றுக் கொண்டான். இதனால் சின்னஞ் சிறிய வயதிலேயே பாரதிக்குத் தமிழார்வம் வளர்ந்தது.

இவர் தமிழார்வம் மேலும் வளர்வதற்குத் தூண்டுகோலாய் இருந்தது. எட்டையபுரம் அரண்மனையின் புலவர் அவை.

இளம் பாரதிக்கு எட்டு அல்லது ஒன்பது வயதிருக்கும். பெரும் புலவர்களெல்லாம் அரண்மனையில் வந்து பல்வேறு விஷயங்களைக் குறித்து விவாதிப்பார்களாம். சில சமயங்களில் விவாதம் காரசாரமாகக் கூட முடிவதுண்டு. இந்தக் கூட்டங்களுக்கெல்லாம் தவறாமல் போவார் பாரதி.

ஒரு சமயம் வழக்கம் போல் புலவர்கள் அவைக்கு வந்தனர். ஒரு புலவர் எழுந்து, 'அண்ணாமலை ரெட்டியார் காவடிச்சிந்து போல் யாராவது பாட முடியுமா?' என்று உரக்கக் கேட்டார். சிலர் 'முடியும்' என்றும், சிலர் 'முடியாது' என்றும் வாதிட்டனர். இதைக் கேட்டு அவையில் இருந்த பாரதியார் கேலியாகச் சிரித்தார். உடனே ஒரு புலவர் சினம் மிகுந்தவராய், 'பாட முடிந்தவர்கள் நேரே அவைக்கு வந்து பாடலாம்'! என்றாராம்.

மறுநாள் எட்டையபுரம் மன்னர், முந்தைய நாள் புலவர்கள் விவாதித்ததை அறிந்து எல்லாப் புலவர்களுக்கும் அழைப்பு விடுத்தார். அனைவரும் அவைக்கு வந்தனர். மன்னர் புலவர்களைப் பார்த்து, 'நம்ம சுப்பையா ஒரு பாடலை எழுதிக் கொண்டு வந்திருக்கிறான். நீங்கள் கேட்ட அண்ணாமலை ரெட்டியார் காவடிச்சிந்து போல் இந்தப் பாடல் அமைந்திருக்கிறது' என்று சொல்லி அந்தப் பாடலைப் புலவர்கள் மத்தியில் அரங்கேற்றினார். அது மட்டுமா? சிறுவன் சுப்பையாவின் கவி ஆற்றலை உணர்ந்து 'பாரதி' (சரசுவதி) என்ற பட்டத்தையும் அளித்துச் சிறப்பித்தார். அப்போது பாரதிக்கு வயது எத்தனை தெரியுமா? பதினொன்று!

பாரதி பாடிய அந்தக் காவடிச் சிந்து இதுதான்:

'பச்சைத் திருமயில் வீரன்
அலங் காரன் கௌமாரன்-ஒளிர்
பன்னிரு திண்புயப் பாரன் - அடி
பணி சுப்பிர மணியர்க் கருள்
அணி மிக்குயிர் தமிழைத் தரு
பக்தர்க் கெளிய சிங் காரன் - எழில்
பண்ணுமருணாசலத் தூரன்

என்று இந்தப்பாடலைக் கணீரென்று இனிமையாகப் பாடுகிறார் திருமதி சகுந்தலா பாரதி.

சிறுமி சகுந்தலாவுக்கு அப்போது ஐந்து வயது இருக்கும்.

பாரதியார் தம் வீட்டு மாடியில் தம் மகளை மடி மீது உட்கார வைத்துக் கொண்டு கதைகள் பல சொல்லிக் கொண்டிருந்தார். சகுந்தலாவின் தாய் மாடி மீது வந்த பிறகு

தான், தாம் ஒரு பொருளை மறந்து வைத்து விட்டதை உணர்ந்தார். உடனே தந்தை மடி மீது உட்கார்ந்து கதை கேட்டுக் கொண்டு இருந்த சகுந்தலாவைப் பார்த்து, தாம் மறந்து வைத்து விட்ட அந்தப் பொருளை எடுத்து வரும்படிச் சொன்னாராம்.

சுவாரசியமாகக் கதை கேட்டுக் கொண் டிருந்த சகுந்தலாவுக்கு அம்மாவின் கட்டளை ஆத்திரத்தை உண்டாக்கியது. உடனே 'நான் எடுத்து வர மாட்டேன் போ!' என்று கண்டிப் பாகச் சொல்லிவிட்டாராம்.

இதைக் கண்ட பாரதி உடனே 'தாய் சொன்ன சொல்லைத் தட்டாதே பாப்பா' என்றாராம்.

சிறுமி சகுந்தலாவின் மனத்திலோ, 'அப் பாவுக்கு உள்ள பேரும் புகழும் அம்மாவுக்கு இல்லையே! அம்மா வெறும் சமையல் தானே செய்து போடுகிறாள்? என்ன இருந்தாலும் அம்மா மட்டம்தான்....' என்று தவறான எண்ணம் புகுந்து கொண்டிருந்தது!

அந்த எண்ணத்தைப்போக்க பாரதியார் பெரும்பாடுபட்டார். தாய் எத்தனை உயர்ந் தவள் என்பதைப் பிஞ்சு மனத்தில் பதியும் வண்ணம் உபநிடத்திலிருந்து குரங்கு, பூனைக் கதைகள் முதலானவற்றை இனிமையாக எடுத்துச் சொன்னார் பாரதி. தாய்நாடு, தாய்மொழி என்றெல்லாம் தாயை முன் வைத்தே சொல்கிறோம். எனவே, தாய்க்கு உள்ள உயர்ந்த இடத்தை உணர்த்துகின்ற வகையில் பல நீதிக் கதைகளைச் சொல்லிக் கொண்டிருக்கும்போது, உடனே சிறுமி சகுந்தலா, 'அப்படியானால், நான் எப்படி யெல்லாம் நடந்துகொள்ளவேண்டும். அதைச் சொல்லுங்கள் அப்பா' என்று கேட்டாராம். அப்போது பிறந்ததுதான் 'ஓடி விளையாடு பாப்பா, நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா!' என்று தொடங்கும் புகழ்வாய்ந்த 'பாப்பாப் பாட்டு'. 64 வரிகளுள்ள இந்தப் பாட்டில்,

'சோம்பல் மிகக் கெடுதி பாப்பா—தாய்
சொன்ன சொல்லைத் தட்டாதே பாப்பா'

என்ற வரிகள் வருவதைக் கவனிக்க வேண்டும்.

இன்னொரு இடத்தில்,

'பொய் சொல்லக்கூடாதுபாப்பா—என்றும்
புறஞ் சொல்லலாகாது பாப்பா
தெய்வம் நமக்குத் துணை பாப்பா—ஒரு
தீங்குவர மாட்டாது பாப்பா!'

என்ற அடிகள் இவர் மனத்தில் ஆழப் பதிந் திருக்கின்றன.

ஐந்து வயதில் நடந்த சம்பவம் ஒன்று அறுபதுக்கு மேற்பட்ட வயதிலுங்கூடப் பசுமையாக நினைவு இருக்கிறது இவருக்கு. அந்தச் சம்பவத்தை மிக அழகாகக் கூறு கிறார் திருமதி சகுந்தலா பாரதி.

''எனக்கு ஐந்து வயதாக இருக்கும்போது ஒரு சமயம் கடுஞ் சுரநோய் கண்டது. காய்ச்ச லின் வேகத்தால் நாக்கு குழறிவிட்டது. என் தந்தையின் உண்மைச் சிநேகிதருள் ஒருவரும், என் வளர்ப்புத் தந்தையாக நான் கருதியவரு

மான திரு. பொன்னு, முருகேசம் பிள்ளை அவர்கள் என்னைப் பார்க்க வந்திருந்தார்.

'என் தந்தை 'பாப்பா'! யார் வந்திருக் கிறார்கள் பார்!' என்றார். முருகேசம் பிள்ளை என்று சொல்ல எண்ணிய எனக்கு சுரவேகத்தால் நாக்குழறிப் போயிற்று ''முருகேழ பிள்ளை'' என்று சொன்னேனாம். என் தந்தை சுவரில் மோதிக் கொண்டார், புலம்பினார்.

'பாப்பா! கடற்கரை மேடையிலிருந்து சிங்கம் கர்ஜிப்பது போலப் பிரசங்கம் செய்யப் போகிறாய் என்று எண்ணியிருந்தேனே! என்ன குற்றம் செய்ததனால் குழந்தைக்கு இக் கதி நேர்ந்தது? தாய், தந்தையரின் செய்கைகள் மக்களைப் பாதிக்கின்றன. சரீர வாதனை யைத் தான் அனுபவிப்பதைவிடத் தன்னில் இனியார் தம் மக்கள் அனுபவிப்பதைப் பார்ப் பது பதின்மடங்கு கொடியது! நான் என்ன குற்றம் செய்தேன்? என்னிடமுள்ள கெட்ட பழக்கம் நாம் புகையிலை போட்டுக் கொள் வது ஒன்றுதான். அதையும் இன்றுடன் விட்டேன்'' என்று சபதங் கூறினார்.

'காய்ச்சல் டைஃபாயிட் சுரமாதலால் குணமாக மூன்று மாதக்காலமாயிற்று. கொஞ் சம் குணம் தெரிந்தவுடன் என் தந்தையார் என் தாய் செல்லம்மா பாரதிக்காக எழுதிய பாட்டுத்தான்—

பக்தியினாலே—இந்தப்
பாரினில் எய்திடும் மேன்மைகள் கேளடி

என்ற பாட்டு.

'இந்தப் புவிக்கே—இங்கோர் ஈசனுண் டாயின்
அறிக்கையிட்டேனுன்றன்
கந்தமலர்த்தாள்—துணை காதல் மகவு
வளர்ந்திட வேண்டும் என் சிந்தை யறிந்தே
அருள் செய்திட வேண்டும்

என்றால் அருளெய்திடும் (பக்தியினாலே)

எட்டையபுரத்தில் பாரதி படித்துக்கொண் டிருக்கும்போது காந்திமதி நாதபிள்ளை என்ற புலவர் சற்று ஆணவ முள்ளவர். அவர் தாம் தமிழ் படித்திருக் கிறோம் என்ற கர்வத்தில் பாரதியிடம் 'பாரதி சின்னப்பயல்' என்ற சொற்களைக் கடைசி அடியின் முடிவாகவைத்துஒரு வெண்பாவைப் பாட முடியுமா? என்று கேட்டார். அருட் கவியான பாரதிக்கு இது என்ன பிரமாதம்? அவர் ஆணவத்தை அடக்கும் வகையில்

'காரதுபோல் நெஞ்சிருண்ட காந்திமதி நாதனைப்
பார்அதி சின்னப்பயல்!''

என்றாரே பார்க்கலாம்!

பேட்டி: பி.வி.கிரி (1975)

ஆசிரியரும் வெளியிடுபவரும் : இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப.,
இயக்குநர், தமிழ்நாடு அரசு, செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை.
அரசினர் தோட்டம், தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.

கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி
DIPR/Efficient

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23